விலை : 20.00
ரூபாய்கள் : இருபது
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 சித்திரை 18 வியாழக்கிழமை (01.05.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 133

## தமிழர் பிரச்சினைகளை ஆராய 8 பேர் கொண்ட குழு நியமனம்

### ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின்போது

(திருகோணமலை) ஐ.நா தீர்மானம், சர்வதேச விவகாரம், காணி அபகரிப்பு, மீள்குடியேற்றம், அரசியல் தீர்வு உள்ளடங்கலாக பல்வேறு விடயங்களை ஆராய வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் தலைமையிலான 8 பேர் கொண்ட குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின பாராளுமன்ற மற்றும் மாகாண சபை உறுப்பினர்களுக்கான ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நேற்று திருகோணமலை நகராட்சி மன்ற மண்டபத்தில் அக்கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் இடம்பெற்றது. இதில் வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன், மாகாண சபை அமைச்சர்களான பொ.ஐங்கரநேசன், த.குருகுலராஜா, ப.சத்தியலிங்கம், பி.டெனீஸ்வரன், அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாணசபையின் ஆளும்கட்சி உறுப்பினர்கள் மற்றும் கிழக்கு மாகாணசபையின் எதிர்க்கட்சித்தலைவர் எஸ்.தண்டாயுதபாணி உள்ளிட்ட உறுப்பினர்கள் பங்கு பற்றியிருந்தனர்.

காலை 10 மணியளவில் ஆரம்பமான இந்த ஒருங்கிணைப்புக்குழுக் 19 ஆம் பக்கம் பார்க்க..

### வடக்கிற்கான ரயில் சேவை நிறுத்தம்

(கொழும்பு)

குருநாகல், பொத்துஹெர பகுதியில் நேற்று புதன்கிழமை காலை இடம்பெற்ற ரயில் விபத்தைத் தொடர்ந்து, வடபகுதிக்கான தூர ரயில் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே கட்டுப் 20 ஆம் பக்கம் பார்க்க..

### யாழ்ப்பாணத்துக்கு வந்த சொகுசு ரயிலுடன் வவுனியா ரயில் மோதி விபத்து

#### பேர் கவலைக்கிடம் ; 70 பேர் காயம்



(குருநாகல்) குருநாகல் பொத்துஹெர ரயில் நிலையத்தில் வடபகுதிக்கான சொகுசு ரயில் வண்டியுடன் மற்றொரு ரயில் வண்டி நேருக்கு நேர் மோதியதில் ஏற்பட்ட விபத்தில் 70 பேர் படுகாயமடைந்துள்ளனர். நேற்று புதன்கிழமை காலை 8.45 மணியளவில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளது. சமிக்ஞை கோளாறு காரணமாக இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. வவுனியாவில் இருந்து மாத்தறை நோக்கி பயணித்த ரயில், கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து பளை நோக்கி பயணித்த கடுகதி சொகுசு ரயிலுடன் மோதியதிலேயே இவ் விபத்து இடம்பெற்றுள்ளதாக ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது. (விரிவான செய்தி உள்ளே) (எ-11)

### பாலியல் குற்றங்கள் புரிந்த 17 இராணுவத்தினருக்கு நடவடிக்கை

#### இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

போர் முடிவடைந்த 2009 முதல் 2012-ம் ஆண்டு வரையான காலத்தில் வடக்கில் இடம்பெற்ற பாலியல் வல்லுறவுச் சம்பவங்களுடன் தொடர்புடைய 17 இராணுவத்தினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான்வணிகசூரிய தெரிவித்துள்ளார்.



கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், 2007-ம் ஆண்டு முதல் 2009-ம் ஆண்டு வரை 19 ஆம் பக்கம் பார்க்க..

### மே தின கூட்டத்துக்கு கொழும்பில் தடை !

(கொழும்பு)

தலைநகர் கொழும்பில், ஹைட் மைதானத்தில், மே தினக் கூட்டமொன்றை நடத்த தொழிற்சங்க ஒன்றியத்துக்கு நீதிமன்றம் தடை விதித்திருக்கிறது.

பொலிஸார் விடுத்த வேண்டுகோளொன்றை ஏற்றுக்கொண்ட கோட்டை நீதிமன்றம் இந்தத் தடை உத்தரவைப் பிறப்பித்தது.

இந்த இடத்தில் மே தினக் கூட்டத்துக்கு, முதல்முறையாக இலங்கை வங்கி ஊழியர்களின் சங்கம் கடந்த மாரச் மாதம் 9-ம் திகதி தங்களிடம் அனுமதி வாங்கியிருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

எனவே இந்த மைதானத்தில 19 ஆம் பக்கம் பார்க்க..

### கமலேந்திரனுக்கு மீண்டும் விளக்கமறியல்

(கொழும்பு) முன்னாள் வடமாகாண சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் கந்தசாமி கமலேந்திரனை எதிர்வரும் மே மாதம் 13ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் செல்வநாயகம் லெனின்குமார் நேற்று புதன் கிழமை உத்தரவிட்டார். நெடுந்தீவு பிரதேச சபைத் தலை 19 ஆம் பக்கம் பார்க்க..

### வேகக்கட்டுப்பாட்டை இழந்த வான் பாலத்துள் பாய்ந்து விபத்து !

#### அல்வாய்வாசிகள் இருவர் பலி

(கரவெட்டி)

வேகக் கட்டுப்பாட்டை இழந்த வாகனம் வீதியை விட்டு விலகி பாலத்தினுள் பாய்ந்து விபத்துக்குள்ளானதில் அல்வாயைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் சம்பவ இடத்திலேயே உயரிழந்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை 11 மணியளவில் நீர்கொழும்பு மாறவில் பாலத்தடியில் இடம்பெற்றுள்ளது.

இதில் அல்வாய் தெற்கைச் சேர்ந்த கணேசமூர்த்தி ஜெயக்குமாரி (வயது 54)மற்றும்நான்கு பிள்ளைகளின் 20 ஆம் பக்கம் பார்க்க..

### இன்று மே நாள்

(கொழும்பு)

அமெரிக்க நாட்டின் சிக்காக்கோ நகரில் 1890 மே முதல் நாளன்று நடைபெற்ற பேரணியில் தொழிலாளர்கள் 8 மணிநேர வேலை, முறையான ஊதியம் ஆகியவற்றை வலியுறுத்தி இரத்தம் சிந்திப் போராடி, உயிர்ப் பலி தந்து பெற்ற உரிமை வரலாற்றை நினைவுறுத்தும் நாள் இந்த மே தினம்.

மேமாதம்முதலாம் திகதி மே 19 ஆம் பக்கம் பார்க்க..

### கூட்டமைப்பின் கூட்டத்தில் அனந்தி மீது பாய்ச்சல்

#### அழுதவாறு கூட்டத்திலிருந்து வெளிநடப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைபபின் வட மாகாணசபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் மீது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கடும் தொனியிலான விமர்சனங்களை முன் வைத்தார்.

இந்நிலையில் பெருக்கெடுத்த கண்ணீரூடே தனது உரையினை இடைநிறுத்தி விட்டு கூட்டத்தை விட்டு வெளியேறினார் அனந்தி.

இதேவேளை திருகோணமலையில் நேற்று இடம்பெற்ற கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் மாகாணசபை உறுப்பினர் அனந்தி சசிதரன் மீதான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதற்கான கூட்டமாக பாவிக்கப்பட்டதா என 19 ஆம் பக்கம் பார்க்க..


## பிரிவினையை ஏற்படுத்த கூட்டமைப்பு முயல்கிறது

### தேசப்பற்று இயக்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சர்வதேசத்தின் அனுசரணையை பெற்று இலங்கைக்குள்பிரிவினையை ஏற்படுத்தலாம்என தமிழ் கூட்டமைப்பு கனவு காண்கின்றது. ஆனால், அதிகாரப்பகிர்விற்கு இலங்கையில் ஒரு [illegible] நுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவிததார்.

வடக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்றுவ து வீண 19 ஆம் பக்கம் பார்க்க..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வடக்கிலிருந்து இராணுவத்துக்கு ஆயிரம் இளைஞர் யுவதிகள்

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இராணுவத்திற்கு வடக்கு மாகாணத்தில் இருந்து இளைஞர் யுவதிகள் ஆயிரம் பேர் வரையில் சேர்ந்துக் கொள்ளப்படவுள்ளதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் ருவன் வணிக சூரிய தெரிவித்துள்ளார்.

அரச பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சில் நேற்று புதன்கிழமை முற்பகல் இடம்பெற்ற சமகால விவகாரங்கள் தொடர்பான செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

இலங்கை இராணுவம் வட மாகாணத்தின் ஆயிரம் இளைஞர் யுவதிகளை இராணுவத்தில் சேர்ந்துக் கொள்ள தீர்மானித்துள்ளது.

இராணுவத்தில் ஆயிரம் பேருக்கான வெற்றிடங்கள் உள்ள போதிலும், அதில் இணைவதற்கு அதனை விட ஐந்து மடங்கு எண்ணிக்கையானவர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

துரதிர்ஷ்டவசமாக அவ்வளவு வெற்றிடங்கள் எங்களிடம் இல்லை. எதிர்காலத்தில் தேவை ஏற்படுமாயின் இணைத்துக் கொள்வோம்.

இவர்கள் பல்வேறு வேலைகளுக்காகவும், இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாகவும், பயிற்சிகளை வழங்கி பிற தேவைகளுக்காகவும் பயன்படுத்தவுள்ளோம் என்று தெரிவித்தார்.

(எ-11)


**வீடு வாடகைக்கு**

அன்னசத்திர லேன், கந்தர்மடத்தில் 3 அறை, குளியலறை, சமையலறை, விறாந்தையுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. (6273)

**தொடர்புகளுக்கு : 0778202966**

**தொடர்ந்தும் உங்கள் சேவையில்....**

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து

Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER (C-6889)

**பிள்ளையார் இன்**

வாடிக்கையாளரின் அபிமானம் பெற்ற உங்கள் பிள்ளையார் இன் இல் இன்று முதல் மாலை 3 மணி தொடக்கம் 6 மணிவரை யாழ் முறைப்படி தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாண பால் அப்பம் சுடச் சுட உடனடியாக வழங்கப்படும்.

(C-7232) தொடர்புகளுக்கு:- இல. 31 மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம். 0212222829


## வாழ்த்துகின்றோம்



### உயர்திரு. பெ. கனகசபாபதி

உண்மையின் இருப்பிடம், சேவையின் சிகரம் உயர்திரு.பெ.கனகசபாபதி அவர்கள் மீண்டும் நல்லூர் பல நோக்கு கூட்டுறவுச் சங்க தலைவராக கூட்டுறவாளர்களால் தெரிவு செய்யப்பட்டதையிட்டு அவரை மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்.

அவரது சேவை மேன்மேலும் வளர இறைவனை வேண்டுகின்றோம்.

**வாழ்த்துபவர்கள்:**
**நல்லூர் பல நோக்கு கூட்டுறவுச் சங்க 5-ம் கிளைக் குழுவினர்.**

(6267)


**புதிய நவீனா நகையகம்**



**Navena Nakaiyakam**

எமது வாடிக்கையாளர் அக்ஷய திருதியைத் திருநாளில் குறையாத செல்வத்தை வளமாகப் பெற்றிட அக்ஷய திருநாளில் புதிய நவீனா நகையகத்தில் நகைகளைக் கொள்வனவு செய்வதுடன் வெகுமதியான நகைகள் கொள்வனவு செய்பவர்களுக்கு வெகுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன.


Genuine 22kt Jewellery
Manufacturing Jewellery

191, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 0777 115625
021 222 7114
(C-7228)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு: 021 321 0815, 021 567 1532


## மரண அறிவித்தல்

### Dr. கந்தப்பு நடராசா



வட்டுக்கோட்டை மூளாய் வீதியை பிறப்பிடமாகவும் மூளாயை வசிப்பிடமாகவும் கொண்ட Dr.கந்தப்பு நடராசா கடந்த (28.04.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அன்னரத்தினதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தப்பு ஆச்சிமுத்து தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் நகுலாம்பிகை தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான கிருஸ்ண பிள்ளை, தர்மரட்ணம் வள்ளிநாயகி மற்றும் துரைராசா, பாலச்சந்திரன் ஆகியோரின் சகோதரரும், உதயகுமார் (CEO, HTN Informaption System), ரவிக்குமார் (பொது முகாமையாளர் PPDP Pvt.Ltd), Dr.ஜெயக்குமார் (வைத்திய அதிகாரி, யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை), அஜந்தா (கனடா), ஜெயந்தா (உள்ளூராட்சி உதவியாளர் ஆளுநர் செயலகம் வட மாகாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரஞ்சினி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), Dr.மாலினி (RMO, மத்திய மருந்தகம் ஹாலி எல), சரளா (ஆசிரியர் சுதுமலை சின்மயபாரதி வித்தியாலயம், பாஸ்கரன் (கனடா), சோமராஜ் (நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் Oxfam), ஆகியோரின் மாமனாரும், நிதுரசன், அபிநயா, விதுரசன், பானுகா, ஜோசிகா, கீர்த்திகன், கம்சிகா, கருணிகா, பிரவீணா, பிரதுஷா, பிரதீஸ், நிலோத்தமன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 01.05.2014 (வியாழக்கிழமை) மு.ப. 8.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பித்தனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'துவாரகா'
மூளாய் வீதி, மூளாய்.
(6271)

தகவல் :- குடும்பத்தினர்
தொ.பே: 021 225 0829


**சாணுகா நகைமாடம்**
SHANUGA NAGAIMAADAM
G4D, Kasthuriyar Road, Jaffna. Tel : 021 222 3700, 021 222 4687





மலர்ந்துள்ள ஜய வருடத்தில்
எல்லோருக்கும் ஜெயம் உண்டாகும் வண்ணம்
வளமான ஐஸ்வர்யத்தை கொண்டு வரும்
ஆண்டாக எல்லோர் வாழ்வும்
செழிக்க வேண்டி மே 1-ம் திகதியும்,
2-ம் திகதியிலும் வரும் அக்ஷய
திருதியை என்னும் திதியில் ஒரு
நகையேனும் உங்கள் இல்லம் வாங்கிச்
சென்று அக்ஷய திருதியை போற்றுங்கள்
"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

சாணுகா நகைமாடம்
(ச-7234)







**ஸ்ரீதேவி** ஜுவலேர்ஸ்
**Srithevi Jewellers**

22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்

(ச-7233)

No.07, Kasthuriyar Road, Jaffna. / Tel: 0217201787, 0771042848


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முச்சக்கர நாற்காலிகளை வழங்கியது யாழ். ஜெய்ப்பூர்



(யாழ்ப்பாணம்)

யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தினால் மனநலம் குன்றிய சிறார்களுக்கு முச்சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வு சுண்டுக்குளியில் அமைந்துள்ள யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் நடமாடும் உபகரணத் தயாரிப்பு நிலையத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது.

மோற்றிவேசன் சிறிலங்காவின் அன்பளிப்புடன் நடைபெற்ற இந்நிகழ்வில் 6 சிறார்களுக்கு முச்சக்கர நாற்காலி வழங்கப்பட்டன.

இதேபோல் பல சிறுவர்கள் தெரிவு செய்யப்பட்டு இவர்களுக்கும் எதிர்வரும் நாட்களில் இவ்வாறான சக்கரநாற்காலிகள் வழங்கப் படவுள்ளன.

இச்சிறார்களுக்கு நடமாடும் வசதியின்மை காரணமாக வீட்டிற்குள்ளேயே முடங்கியிருக்க வேண்டிய பரிதாப நிலை காணப்படுகின்றது.

இச் சக்கர நாற்காலிகள் மூலம் வெளியுலகத்தினையும் அவர்களினால் பார்க்க முடியும் என ஜெய்ப்பூர் நிறுவனத்தினரின் இயக்குநர் வைத்தியர் திருமதி கணேசமூர்த்தி ஜெயதேவி தெரிவித்தார்.

இதேபோல் தமது நிறுவனத்தினால் பல்வேறுபட்ட உதவிகள், சேவைகள் வழங்கப்பட்டு வருவதாகவும் எதிர்வரும் காலங்களில் வைத்திய நிபுணர்களின் சிகிச்சையும் இடம் பெறும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் குழந்தை வைத்திய நிபுணர் கீதாஞ்சலி சத்தியராஜ் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-4)

## மது போதையில் வாகனம் செலுத்தியவர் கைது

(கரணவாய்)

மது போதையில் மோட்டார் வாகனத்தை செலுத்திய இளைஞன் நெல்லியடி பொலிஸாரினால் கைது செவய்யப்பட்டு பருத்தித்துறை நீதி மன்றத்தில் ஆஜர் படுத்தப் பட்டார்.

இச் சம்பவம் அண்மையில் நெல்லியடி மாலுசந்தியில் இடம் பெற்றுள்ளது. மேற்படி நபர் குறித்த வீதியால் வாகனத்தை செலுத்திய போது பொலிஸார் இடை மறித்தனர். அவ்வேளை அவர் மது அருந்தி இருப்பது தெரியவந்தது. இதனை அடுத்தே பொலிஸார் இந் நபரை கைது செய்துள்ளனர். குறித்த நபர் வல்வெட்டித்துறை பிரதேசத்தை சேர்ந்தவர் என தெரிய வருகிறது. (2-60)

## த.தே.ம.முன்னணியின் மே தினக் கூட்டம்

(கரணவாய்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் மேதினக் கூட்டம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் 6 மணிவரை கரவெட்டி சாமியன் அரசடி ஞான வைரவர் ஆலய முன்றலில் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளர் பொ. கஜேந்திரகுமார், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி செ. கஜேந்திரன் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் இ.எ. ஆனந்தராசா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (2-60)

## இரு பெண்களுக்கு ஆயுள் தண்டனை

ஹெரோயின் போதைப் பொருள் கடத்திய இரண்டு பாகிஸ்தானிய பெண்களுக்கு ஆயுள் தண்டனையை நீர்கொழும்பு உயர் நீதிமன்ற நீதவான் எம்.எம்.ஏ. கபூர் விதித்துள்ளார்.

டுபாயிலிருந்து குறித்த இரண்டு பாகிஸ்தான் பெண்களும் போதைப் பொருட்களை கடத்தியுள்ளனர். இவர்கள் இருவரும் சகோதரிகள் என தெரியவருகின்றது.

குற்றச்சாட்டை ஒப்புக்கொண்ட இருவருக்கும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. கடந்த 2009 ஆம் ஆண்டு ஜூலை மாதம் குறித்த பெண்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக நாட்டுக்குள் போதைப் பொருளை கொண்டு வர முயற் சித்திருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (2)

## facebook (f) பேஸ்புக் பார்த்ததில் பிடித்தது... Like

Krishnaswami Kalamogan





Like.Comment...

Sunthram Akila





Like.Comment...

Pramanathan Prathap



Like.Comment...

Suntharalingam Sumathi




Like.Comment...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri எனும் தளத்தில் பதிவுசெய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## இராசி பலன்

01.05.2014

(சித்திரை 18, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
துதியை பிற்பகல் 12.06 மணிவரை
கார்த்திகை முற்பகல் 10.38 மணிவரை
இராகுகாலம் 1.27-2.57 மணிவரை
சுபநேரம் 7.27-8.57 மணிவரை
மங்கையற்கரசியார் குருபூசை அக்ஷய திருதியை
தொழிலாளர் தினம்

வளவன்

**மேடம்:** சுப தகவல்கள் வந்து சேரும் நாள், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும், உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், பணத் தேவைகள் பூர்த்தியாகும்.

**இடபம்:** வழிபாடுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங் கண்டு கொள்வீர்கள், கனிவாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள்.

**மிதுனம்:** அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்கள் தாமதமாகும், பயணங்களால் மனச் சோர்வு ஏற்படலாம்.

**கடகம்:** வருமானம் அதிகரிக்கும் நாள், மற்றவர்கள் கடுமையாக நினைக்கும் வேலையொன்றை நீங்கள் எளிதாக செய்து முடிப்பீர்கள், பயணங்கள் கைகூடும்.

**சிம்மம்:** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, செய்தொழில் மேன்மையுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**கன்னி:** பெரியோர்களின் மனஸ்தாபங்கள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், சொத்துக்களால் நன்மையுண்டு.

**துலாம்:** சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, சேமிப்புகள் கரையக் கூடிய நிலை [illegible], ஒரு சில பணிகளை செய்யாமல் விட்டுவிடுவீர்கள்.

**விருச்சிகம்:** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, உடன்பிறப்புக்கள் உதவிக்கரம் [illegible] பணத் தேவைகள் [illegible] பூர்த்தியாகும்.

**தனுசு:** கடன் சுமை குறைந்து கவலைகள் தீரும் நாள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வியாபார விரோதம் விலகும், மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் குடி கொள்ளும்.

**மகரம்:** வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், எதிர்கால நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**கும்பம்:** தாய்வழி உறவினர்களால் நன்மையுண்டு, வளர்ச்சிப் பாதையை நோக்கி நகர்வீர்கள், சுப தகவல்கள் வந்து சேரலாம், கல்வியில் மேன்மையுண்டு.

**மீனம்:** தொழிலில் எதிர்பார்த்த திருப்பங்களைக் காணலாம், முயற்சிகள் கைகூடும், பகை விலகி பாசம் கூடும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வடக்கில் தமிழில் தேசிய கீதம் பாடுவது எட்டா பொருத்தமோ?

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் நடைபெறுகின்ற அனைத்து பொது நிகழ்விலும் தமிழில் தேசிய கீதம் இசைக்கப்படல் வேண்டுமென வடக்கு மாகாண சபையில் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் வடக்கு மாகாண முதலமைச்சர் பங்கேற்ற நிகழ்வொன்றில் தேசிய கீதம் இசையிலேயே ஒலிக்கவிடப்பட்டுள்ளது.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் கலாசார நிகழ்வொன்று அமைச்சர் ஏக்கநாயக்கவின் பங்கே ற்புடன் நடைபெற்றது.

இந் நிகழ்வில் வடக்கு மாகாண கொடி முதலமைச்சர் சி.வி.விக்னே ஸ்வரனால் ஏற்றப்பட்ட போதிலும் தேசிய கீதம் இசையிலேயே ஒலிக்க விடப்பட்டது.

கடந்த 28 ஆம் திகதி நடை பெற்ற வடக்கு மாகாண சபை அமர்வில் தென்பகுதியில் சிங்கள மொழியில் மட்டுமே தேசிய கீதம் ஒலிக்க விடப்படுகின்றன என்றும் வடக்கிலும் சிங்கள மொழியில் தேசிய கீதத்தை இசைக்கு மாறும் இராணுவத்தினரால் கட்டாயப்படுத்தப்படுகின்றது என சுட்டிக்காட்டப்பட்டது.

சிங்கள மொழியில் தேசிய கீதம் ஒலிக்கப்படாவிட்டால் இசையில் தேசிய கீதம் ஒலிக்க விடப்படுகின்றது எனவும் சுட்டிக்காட்டி வடக்கு மாகாணத்தில் இடம்பெறுகின்ற பொது நிகழ்வுகள் அனைவற்றிலும் முதலாவதாக தமிழில் தேசிய கீதம் பாடப்படல் வேண்டுமென பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மறு நாளான (நேற்றுமுன்தினம்) வடக்கு முதல்வர் பங்கேற்ற நிகழ்வில் இசையிலேயே தேசிய கீதம் ஒலிக்க விடப்பட்டது.

இதேவேளை உடுவிலில் நடைபெற்ற நிகழ்விலும் இதே போன்று தான் நடைபெற்றதாக குறிப்பிடப்படுகிறது. (2-4)

நன்றி-ஐலண்ட்



# தற்கால சிறார்களை துறைசார் செயற்பாட்டில் வளர்ப்போம்

**அலன்ரின் எம்.பி.தெரிவிப்பு**

மருதங்கேணி பிரதேசமானது கடந்த காலத்தில் இடம்பெற்ற யுத்தம் மற்றும் சுனாமி அனர்த்தம் ஆகியவற்றினால் மக்களுடைய பொருளாதாரத்திலும் அடிப்படை வசதிகள், கல்வி மற்றும் விளையாட்டு போன்றவற்றிலும் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளன. பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் என்றும் பின்தள்ளப்பட்டவையாக இருந்து விடமுடியாது.மக்களின் பௌதீக தேவைகள் உட்பட வாழ்வாதார தொழில்கள், கல்வி மற்றும் துறைசார் செயற்பாடுகள் அனைத்தையும் கட்டியெழுப்ப வேண்டியவர்களாக நாம் உள்ளோம் என ஈபிடிபி பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் தெரிவித்தார்.

மருதங்கேணி பிரதேச இளைஞர கழக சம்மேளன வருடாந்த இளைஞர் விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக்கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும்அவர்உரையாற்றுகையில்,

நாம் கடந்து வந்த பாதைகள் வலிகளும் சுமைகளையும் தாங்கியவையாக இருந்தாலும் தற்கால சிறார்களை கல்வியறிவிலும் துறைசார் ரீதியான செயற்பாடுகளிலும் வளர்த்தெடுப்பதன் ஊடாக எதிர்காலத்தில் பிள்ளைகளின் வாழ்க்கை. நிலை ஒளிமயமாக மாற்றமடையும்.

அத்துடன் இளைஞர் சக்தி ஓர் நாட்டின் இன்றியமையாததாக அமைகிறது.

எனவே, அவர்களின் உழைப்புக்களை யாரும் தமது நலன்களுக்காக சுரண்டி விட இடமளிக்காத வகையில்எமது பிரதேசங்களின்முனேற்றகரமான செயற்பாடுகளுக்கும் எதிர்காலச்சந்ததிகளுக்கு முன்னுதாரணமாக செயற்பட வேண்டும்.

இவ்வாறான இளைஞர் கழகங்கள் மற்றும் இளைஞர் கழக சம்மேளனங்களின் ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கு என்றும் எமது உறவுக்கரம் கொடுப்போம் என அவர் தெரிவித்தார். (2-23)

# பொது சுகாதார பரிசோதகர் பிரச்சினைக்கு இரண்டு நாட்களில் தீர்வு வழங்கப்படும்

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சர்

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் பணிப்புறக்கணிப்பு இரு நாட்களிற்குள் நடவடிக்கையெடுக்கப்படும் என வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் பா.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் 8 ஆவது அமர்வு கடந்த 28 ஆம் திகதி கைதடியிலுள்ள பேரவைச் செயலக கட்டடத்தில் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.

இதில் பொதுச் சுகாதார பரிசோதகர்களின்பணிப்புறக்கணிப்புதொடர்பில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுச் சுகாதார பரிசோதகர்களின் பணிப்புறக்கணிப்பினால் உள்ளூராட்சி மன்றங்கள் மிகவும் பாதிப்படைந்து உள்ளன.

பொதுச் சுகாதார பரிசோதகர்களின் பணிப்புறக்கணிப்பினை நிறுத்துவதற்கு நாம் பல்வேறுபட்ட ரீதியில் முயற்சியெடுத்திருந்தோம். ஆனால் அவையொன்றும் பயனளிக்கவில்லை.

வடக்கில் உள்ள பொதுச் சுகாதார பரிசோதகர்களினை எம்மோடு பேச்சு வார்த்தைக்கு வருமாறு அழைத்திருந்தோம்.


ஆனால் அவர்கள் எம்மோடு பேச்சுவார்த்தைக்கு வர மறுத்து விட்டு தமது தாய்ச் சங்கத்தினரோடு பேச்சுவார்த்தைக்கு வருமாறு எமக்கு தெரிவித்தனர்.

இதனால் இப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் இழுபறி நிலை ஏற்பட்டு காலஎல்லையும் நீடிக்கப்பட்டுவிட்டது.

இதனால் இங்குள்ள உள்ளூராட்சி மன்றங்கள் பல்வேறு சிக்கல்களினை எதிர் நோக்கி வருவதாக எமக்கு அறிவித்துள்ளனர்.

ஆகையினால் இப்பிரச்சினை தொடர்பில் இரு நாட்களுக்குள் அரச மருத்துவர்சங்கத்தினருடனும்பொதுச் சுகாதார பரிசோதகர்களிடமும் பேச்சு வார்த்தை நடத்தி இருபகுதியினரினையும் ஒரு இணக்கப்பாட்டிற்கு கொண்டு வந்து தீர்வுகாண முடியும் என்றார். (2-4)

# 19 சாரதிகளுக்கு நியமனம்



வடமாகாணத்தின் அமைச்சு மற்றும் திணைக்களங்களில் வெளிவாரி அடிப்படையில் கடமையாற்றிய சாரதிகள் 19 பேருக்கு நிய மனம் வழங்கப்பட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற சாரதிகள் வகுப்பு III பரீட்சையில் சித்தியடைந்த மேற்படி பத்தொன்பது பேருக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று முன் தினம் வட மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது. இவர்களுக்கான நியமன கடிதங்களை வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி வழங்கினார்.

இந் நிகழ்வில் பிரதம செயலாளர் திருமதி.ஆர்.விஜயலட்சுமி, ஆளுநர் செயலாளர் இ.இளங்கோவன், பிரதி பிரதம செயலாளர் ஆர்.துரைராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். (2)

# பதிவாளர் மாநாட்டில் இணைத்தலைவர் பதவிக்கு தமிழர் ஒருவர் தெரிவு

அகில,இலங்கை பிறப்பு, இறப்பு விவாகப்பதிவாளர்மாநாட்டின் இணைத் தலைவர் பதவிக்கு முதல் தடவையாக தமிழர் ஒருவர் வட மாகாணத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளார். அகில இலங்கை பிறப்பு, இறப்பு விவாகப் பதிவாளர் சங்கத்தின் 26 ஆவது மாநாடு கடந்த 22 ஆம் திகதி கொழும்பு நாராயன் பிட்டி உல்லாச மண்டபத்தில் நடைபெற்றது.

இம் மாநாட்டில்முதல்தடவையாக வடக்குகிழக்கு மாகாணங்களில்உள்ள பதிவாளர்கள் கலந்து கொண்டனர்.

இதில் வடமராட்சி கிழக்கு பிரிவின் பிறப்பு, இறப்புவிவாகப்பதிவாளரான வேலுப்பிள்ளை தவச் செல்வம் என்பவருக்கு மேற்படி இவ் இணைத்தலைவர் பதவி வழங்கப்பட்டது.

இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், பதிவாளர் நாயகம் உட்பட்ட இலங்கையிலுள்ள ஆயிரத்துக்கு மேற்பட்ட பதிவாளர்கள் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் கலந்து கொண்ட பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு வி.ஜே.செனரட்ண முதல் தடவையாக வடக்கு கிழக்கில் இருந்து ஒரு தமிழரை தெரிவு செய்தமை குறிப்பிடத்தக்கது. (2-19)






புங்குடுதீவு ஊரதீவு மடத்துவெளி கிராமங்களுக்கு சுமார் 25 வருடங்களின் பின்னர் நேற்று முன்தினம் மின்சாரம் வழங்கப்பட்டது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மின் இணைப்பினை வழங்கி வைப்பதையும் அருகில் பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின், வேலணை பிரதேச செயலர் ச. மஞ்சுளாதேவி ஆகியோர் நிற்பதையும் அமைச்சர் உரையாற்றுவதையும் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடும் போக்கு அமைப்புக்களை தடை செய்ய முடியும்-வாசு

(கொழும்பு)

இலங்கையில் சிங்கள மற்றும் முஸ்லிம் கடும்போக்குடைய அமைப்புக்கள் இயங்கி வருவதாக தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசு தேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இந்துசமய கடும்போக்குடைய அமைப்புக்கள் இலஙகையில் கிடையாது என்றே கருது வதாகவும், இந்தியாவில் இவ்வாறான அமைப்புக்கள் இயங்கி வ்ருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொதுபல சேனா இயக்கத்தை ஓர் கடும் போக்குடைய அமைப்பாகவே அடையாளப் படுத்துவதாகவும், கடும்போக்குடைய அமைப்புக்கள் அனைத்தையும் அடையாளப்படுத்த முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வன்முறைகளைத் தூண்டும் வகையில் கடும்போர்க்குடைய கொள்கைகளை பிரசாரம் செய்யும் அமைப்புக்களை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடைசெய்ய முடியும் எனவும், பொதுபல சேனா அமைப்பை இதன் அடிப்படையிலேயே தடைசெய்யுமாறு கோரியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுபல சேனாவிற்கு எதிராக சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவோர் நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

பொதுபல சேனா போன்ற இயக்கங்களுடன் விவாதம் நடத்த வேண்டிய அவசியமில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532

நன்றிகளுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்



மறவற்க மாசு அற்றார்
கேண்மை.
துறவற்க துன்பத்துள்
துப்பு ஆயார் நட்பு



பொன்னாலை விளையாட்டுக்கழகம் மூன்று வருட காலமாக எதுவித பதிவுகளுமின்றி செயற்பட்டு வந்தது. தற்போது இக்கழகம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக சகல வழிகளிலும் உதவி செய்த பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் யாழ் மாவட்ட இணைப்பாளருமாகிய கேவிகுகேந்திரன் (ஜெகன் தோழர்) அவர்களுக்கும் நன்றி கூறுவதுடன் அவர்களது சேவை மென்மேலும்தொடர பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(6268)

வாழ்த்துவோர்:- பொன்னாலை விளையாட்டுக்கழகம்.



அக்ஷய திருதியையில்
தங்கம் வாங்கி வாழ்வில்
சுபீட்சத்தை
அடைவீர்களாக!
ஸ்ரீ சுசீலா
ஆபரண மாளிகை
(916KDM) தங்க நகைகள்
மொத்தமாகக் கிடைக்கும்
239, பிரதான வீதி, பருத்தித்துறை.
T.P:-021 3207437, 077721 0206, 021 226 1003
(சி-7229)

FIAT LUX

## ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் மன்றம் வருடாந்த பொதுக்கூட்டம்

காலம்:- 01.06.2014 ஞாயிற்றுக்கிழமை
நேரம்:- பிற்பகல் 2 மணி
இடம்:- ஹாட்லிக் கல்லூரி

மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம். பிரேரணைகள் 16.05.2014 திகதிக்கு முன்னதாக தலைவர்/ இணைச் செயலாளர்களுக்கு அனுப்பி வைக்கவும்.

தலைவர்/ இணைச் செயலாளர்கள்,
ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் மன்றம்,
ஹாட்லிக் கல்லூரி,
பருத்தித்துறை.
01.05.2014

(சி-7221)

## கல்யாண மாலை

### இவர்களுக்கு மணமகள் தேவை

- பிறப்பு: 1982 இந்து
  நட்சத்திரம்: சுவாதி 2
  கி.பா: 20 உயரம்: 5'9"
  தகைமை/தொழில்: A/L, CIMA / சொந்த வியாபாரம், கட்டட ஒப்பந்தம்
  தொ.இ: B/3057
- பிறப்பு: 1978 இந்து
  நட்சத்திரம்: சித்திரை 4
  கி.பா: 52 செவ் 8 இல்
  உயரம்: 5'4"
  தகைமை/தொழில்: A/L, BA – Following / கிராம அலுவலர்
  தொ.இ: B/3060
- பிறப்பு: 1981 இந்து
  நட்சத்திரம்: பூரட்டாதி 1
  கி.பா: 43 சூரி செவ் 4 இல்
  உயரம்: 5'2"
  தகைமை/தொழில்: A/L / சொந்த வியாபாரம் (பிரான்ஸ் PR)
  தொ.இ: B/3061
- பிறப்பு: 1983 இந்து
  நட்சத்திரம்: சித்திரை 4
  கி.பா: 17 சூரி செவ் 5 இல்
  உயரம்: 5'6"
  தகைமை/தொழில்: O/L / சொந்த வியாபாரம், ஒட்டோ சாரதி
  தொ.இ: B/ 3064

### இவர்களுக்கு மணமகன் தேவை

- பிறப்பு: 1988 இந்து
  நட்சத்திரம்: உத்தரம் 2
  கி.பா: 21
  உயரம்: 5'
  தகைமை/தொழில்: BA - Following / தற்காலிக தனியார் வேலை
  எதிர்பார்ப்பு: PR உள்ளவர் மட்டும்
  தொ.இ: G/3067
- பிறப்பு: 1991 இந்து
  நட்சத்திரம்: பரணி 4
  கி.பா: 20.25 செவ் 12 இல்
  உயரம்: 5'7"
  தகைமை/தொழில்: A/L, BSc – Following
  தொ.இ: G/3069
- பிறப்பு: 1982 இந்து
  நட்சத்திரம்: அத்தம் 2
  கி.பா: 25 செவ் 12 இல்
  உயரம்: 5'2"
  தகைமை/தொழில்: O/L
  தொ.இ: G/3074
- பிறப்பு: 1978 இந்து
  நட்சத்திரம்: சுவாதி 2
  கி.பா: 11.25 உயரம்: 5'2"
  தகைமை/தொழில்: கலைப்பட்டதாரி / ஆசிரியர்
  தொ.இ: G/3075

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

தங்க திருநாள் அக்ஷய திருதியை தின்த்தில் சகல செல்வங்களும் பெற்றிட வாழ்த்துகின்றோம் (சி-7230)



Sree Meenakchi Nagai Aham
சிறி மீனாட்சி நகை அகம்
இல. 183, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
Dealers in 22 kt. Solid Gold Jewellery
தொ.பே.இல. 021 222 6109



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாக்கெடுப்பில் பங்கேற்காதோருக்கு ஒழுக்காற்று நடவடிக்கை இல்லை

### அமைச்சர் சுசில் தெரிவிப்பு

தந்திரோபாய அபிவிருத்தி சட்ட மூலம் தொடர்பிலான பாராளுமன்ற வாக்கெடுப்பின் போது அவையில் பிரசன்னமாகியிருக்காத மற்றும் எதிராக வாக்களித்த ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட மாட்டாது என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கட்சிக்குள் எவ்வித முரண்பாடுகளும் கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வர்த்தமானி அறிவித்தல்களை நிறைவேற்றுவதற்கு மூன்றில் பெரும்பான்மை பலம் அவசியமில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.


வெளிநாட்டு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த காரணத்தினால் தாமும் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் கூட வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை என்பதனை எதிர்க்கட்சிகள் நினைவில் நிறுத்திக்கொள்ள வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் சரியான பாதையில் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் எதிர்க்கட்சிகளினால் அபிவிருத்தித் திட்டங்களை தடுக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

## பொருளாதார சுபீட்சத்தை அடைவதற்கு அர்ப்பணிப்புடன் செயலாற்றுகிறோம்

### பஹ்ரைனில் ஜனாதிபதி பெருமிதம்



(கொழும்பு)

**அனைத்து மக்களும் அனுபவிக்கக் கூடிய நிலையான பொருளாதார சுபீட்சத்தை அடைவதற்கு இலங்கை தற்போது ஒரு கொடியின் கீழ் இணைந்து அர்ப்பணிப்புடன் செயலாற்றுவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

பஹ்ரைன் மன்னர் தமக்கு வழங்கிய உயர் கௌரவ விருதினைப் பெற்றுக் கொண்டு அங்கு நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

முப்பது ஆண்டு கால யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் இந்து சமுத்திரத்தின் ஒரு தீவாக இலங்கை துரித வளர்ச்சி கண்டு வருகிறது. அத்துடன் இலங்கை பஹ்ரைனுடன் முன்னேற்றகரமானதும் வினைதிறன் மிக்கதுமான ஒத்துழைப்பைக் கட்டியெழுப்புவதற்கு எதிர்பார்த்துள்ளது.

இலங்கை ஜனாதிபதி ஒருவர் பஹ்ரைன் இராச்சியத்தில் மேற்கொள்கின்ற முதலாவது உத்தியோக பூர்வ விஜயமாகும். இது இரு நாடுகளுக்குமிடையிலான தொடர்புகளில் இருக்கும் நட்புறவையும் முதிர்ச்சியையும் எடுத்துக் காட்டுகிறது.

பஹ்ரைன் இராச்சியத்தின் உயர் கௌரவ விருதான ஷேக் இசா விருது எனக்கு வழங்கப்பட்டிருப்பது ஆணவமற்ற கௌரவமாகும். குறிப்பாக இவ்விருது மனித நேயத்திற்காக முன்னாள் ஷேக் இசா பின் சல்மான் அல் - கலிபா எமிர் வாழ்நாளில் செய்த அர்ப்பணிப்பையும் அவர் பஹ்ரைன் மீதும் உலகத்தின் மீதும் கொண்டிருந்த செல்வாக்கையும் நினைவுபடுத்துகிறது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு செயலூக்கத்துடன் பங்களிப்பு செய்வதற்காக ஒரு நாட்டின் மக்கள் வலுவூட்டப்பட வேண்டும் என்ற மன்னரின் தத்துவத்தை நானும் மதிக்கின்றேன். இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கான எனது கொள்கைகளில் இந்த கோட்பாடும் உள்ளடங்கியுள்ளது.

பயங்கரவாதத்திற்கெதிரான முப்பது ஆண்டு கால யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் இந்து சமுத்திரத்தில் உள்ள ஒரு தீவாக இலங்கை வளர்ச்சியை நோக்கி துரிதமாகவும் சக்தியுடனும் பயணம் செய்து கொண்டிருக்கிறது.

அனைத்து மக்களும் பொதுவாக அனுபவிக்கின்ற நிலையான பொருளாதார சுபீட்சத்தை அடைவதற்கு எனது நாடு தற்பொழுது ஒரு கொடியின் கீழ் இணைந்து அர்ப்பணிப்புடன் செயலாற்றுகிறது.

பஹ்ரெய்னுடன் முன்னேற்றப்பட்ட வினைத்திறன்மிக்க ஒத்துழைப்பை கட்டியெழுப்புவதற்கு நாம் எதிர் பார்க்கிறோம். எமது இரு நாடுகளுக்கிடையில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு கணிசமான அளவு சாத்தியக்கூற்று ஆய்வுகளை மேற்கொள்ள எமது நாட்டின் வர்த்தக சமூகத்தின் பிரதானிகள் சிலர் என்னுடன் இவ் விஜயத்தில் இணைந்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார். (2)


## இளைஞர் பேரவை செயலாளர் அலுவலகம் திறந்து வைக்கப்படும்

இலங்கையில் நடைபெறும் உலக இளைஞர் மாநாட்டுக்கு இணையாக பொதுநலவாய நாடுகளின் இளைஞர் பேரவையின் செயலாளர் அலுவலகத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 6ஆம் திகதி ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

அம்பாந்தோட்டை நகர மேயர் கட்டட தொகுதியில் இப்புதிய இளைஞர் பேரவையின் செயலாளர் அலுவலகம் திறந்து வைக்கப்படவுள்ளதாக இளைஞர் விவகார திறன் அபிவிருத்தி அமைச்சு அறிவித்துள்ளது.

ஒன்பது உறுப்பினர்களைக் கொண்ட இந்த இளைஞர் நிறைவேற்றுக் குழுவில் நான்கு பேர் இலங்கையர்களாக இருப்பார்கள்.

பொதுநலவாய மாநாட்டின் இளைஞர் பேரவையின் செயலாளர் அலுவலகத்தை இலங்கையில் ஆரம்பிப்பதன்மூலம் இளைஞர்கள் தொடர்பாக நிகழ்ச்சித் திட்டங்களின் கேந்திரமாக இலங்கை திகழ்வதுடன் அது, நம் நாடு பெற்ற பெரியதொரு கௌரவமென்றும் இலங்கையின் இளம் சமுதாயம் சர்வதேச இளம் சமுதாயத்துடன் கைகோர்ப்பதற்குக் கிடைக்கும் மிகப்பெரியதொரு சந்தர்ப்பம் என்றும், இம்மாநாடு குறித்து பொதுநலவாய இளைஞர் பேரவையின் தலைவர் குசலகுமார பெர்னாந்து தெரிவித்தார். (2)



தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற மற்றும் மாகாணசபை உறுப்பினர்களுக்கான ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நேற்று திருகோணமலை நகர சபை மண்டபத்தில் அக்கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் வடக்கு மாகாணசபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், மாகாணசபை அமைச்சர்கள், அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாணசபையின் உறுப்பினர்கள் மற்றும் கிழக்கு மாகாணசபையின் உறுப்பினர்கள் பங்கு பற்றியிருந்தனர். (படங்கள்:-எஸ்.ஆர்.கரன்)

## தனியார் நிறுவனங்களை கண்காணிக்க பொறிமுறை

### அமைச்சர் லொக்குகே தெரிவிப்பு

பல்வேறு நிறுவனங்களும், கம்பனிகளும் ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றுக்கு முறையாக நிதி செலுத்துகின்றனவா என்பது குறித்தும், நிறுவனங்களை ஆரம்பிக்கும்போது அரசிடம் வாக்குறுதி அளித்தவாறு நிரந்தர ஊழியர்களை வைத்து பராமரிக்கின்றனரா என்பது குறித்தும், கண்டறிவதற்காக பொறிமுறை ஒன்று தயாரிக்கப்படுமென தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தொழிற்சங்கத் தலைவர்களின் பங்குபற்றுதலுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர்தொடர்ந்து கூறுகையில்,

பல நிறுவனங்களும், கம்பனிகளும முறையாக மேற்படி நிதிகளைச் செலுத்துவதில்லை. இதுபற்றி கண்டறிய முறையான நடைமுறை இல்லாமை குறையாகும்.

பல நிறுவனங்கள் ஆரம்பிக்கப்படும் போது கூறிய வாக்குறுதிக்கு மாறாக நிரந்தர ஊழியர்கள் எண்ணிக்கையைக் குறைத்து ஒப்பந்த அடிப்படையில் அதிக எண்ணிக்கையிலான ஊழியர்களை உள்வாங்கி நிறுவனங்களை நடத்திவருவது தெரியவந்துள்ளது.

ஜனாதிபதி யுத்தத்தை முடித்ததால் இன்று சகல வேலைத் தளங்களிலும் அச்சமின்றி ஊழியர்கள் பணியாற்றுகின்றனர். இந்த அரசு தொழில்சார் பிரச்சினைகள் தொடர்பாக மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கு திட்டத்திற்கேற்ப அரசாங்கம பேச்சுவார்த்தைகளை நடத்துகிறது.

இந்த அரசு தொழிற்சங்கப் பிரச்சினைகளை தீர்க்கும் அரசாகும். வேறுநாடுகளை போன்று இந்த அரசு, தனியார் துறைகளில் வேதனக் குறைப்பை மேற்கொள்ளவில்லை.

வரவுசெலவுத்திட்டத்தை தயாரிக்கும்போது ஜனாதிபதி அரசாங்க கட்சி, எதிர்க்கட்சி தொழிற்சங்கப் பிரதிநிதிகளையும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி அவர்களின் கோரிக்கைகள் தொடர்பாகவும் கேட்டறிகிறார்.

நாட்டில் இம்முறை மேதின விழாவிற்கு உழைக்கும் மக்கள் ஐந்து இலட்சம், ஆறு இலட்சம் பேர் வரை வருவரென எதிர்பார்க்கப்படுகின்றது. பலமான ஒரு மேதினத்தை நடத்த நாம நடவடிக்கை எடுத்துள்ளோம என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (2)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 40 | 40 | 30 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 90 | 90 |
| பச்சைமிளகாய் | 80 | 80 | 80 | 80 |
| தக்காளி | 50 | 60 | 30 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 | 40 |
| கோவா | 30 | 20 | 20 | 30 |
| கரட் | 100 | 80 | 80 | 100 |
| பூசணி | 30 | 30 | 30 | 40 |
| புடோல் | 50 | 40 | 60 | 40 |
| வாழைக்காய் | 25 | 30 | 30 | 30 |
| சின்ன வெங்காயம் | 100 | 90 | 60-70 | 80-120 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 90 | 90 |
| பாகற்காய் | 120 | 100 | 90 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 50 | 50 | 50 |
| கருணைக் கிழங்கு | 40 | 40 | 60 | 50 |
| பயற்றங்காய் | 40 | 40 | 40 | 40 |
| லீக்ஸ் | 60 | 80 | 60 | 80 |
| பீற்றூட் | 40 | 60 | 30 | 60 |
| கறிமிளகாய் | 60 | 50 | 60 | 80 |
| முருங்கைக்காய் | 30-60 | 80 | 80 | 120 |
| போஞ்சி | — | 160 | 140 | 200 |
| கத்தரிதம்புள்ள | 20 | 30 | — | — |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 100 | 120 | 90 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 15-50 | 40 | 40 | 30-40 |
| இராசவள்ளி | 80 | 110 | 90 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநலவாயத்தின் கொள்கைகளை அரசாங்கம் மதிப்பதில்லை

## மங்கள எம்.பி. குற்றச்சாட்டு



(கொழும்பு)

**பொதுநலவாய நாடுகள் அமைப்பின் நம்பகத் தன்மையை தக்க வைத்துக் கொள்ளக் கூடிய வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பாரா ளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.**

பொதுநல வாய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் கமலேஷ் சர்மாவிற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் தனது கடிதத்தில்,

இலங்கையில் இடம்பெற்று வரும் ஜனநாயக விரோத செயற்பாடுகளை பொதுநலவாய நாடுகள் அமைப்பு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

இலங்கைப் பிரஜைகளின் உரிமைகளை உறுதி செய்ய வேண்டியது பொதுநலவாய நாடுகள் அமைப்பினதும் கடமையாகும் என்பதுடன் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் கொள்கைகள் கோட்பாடுகளை உறுதி செய்ய வேண்டியது அனைத்து தரப்பினரதும் கடமையாகும்.

இலங்கையில் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் கொள்கைகள் கோட்பாடுகள் மீறப்பட்டால் அது ஒட்டுமொத்த பொதுநலவாய நாடுகள் அமைப்பினதும் பிரச்சினையாகவே கருதப்பட வேண்டும்.

பொதுநலவாய நாடுகள் அமைபபின் தலைமைப் பதவியை வகித்து வரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சொந்த இடமான அம்பாந் தோட்டையில் அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஐந்து பாராளு மன்ற உறுப்பினர்கள் தாக்கப்பட்டுள் ளனர்.

இந்த தாக்குதல் சம்பவத்தை கண்டிக்க தவறிய ஜனாதிபதி தாக்குதலை நியாயப்படுத்தும் முனைப்புக்களில் ஈடுபட்டுள்ளார்.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் கொள்கைகள் கோட்பாடுகளுக்கு மதிப்பளிக்காத அரசாங்கமே, அமைப்பின் தலைமைப் பதவியை வகித்து வருகிறது.

இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகளினால் பொதுநல வாய நாடுகள் அமைப்பின் நம்பகத் தன்மைக்கு குந்தகம் ஏற்பட அபாயம் ஏற்பட்டுள்ளது என்றார். (2)

# மஹிந்தவின் ஆட்சியில்தான் நாடு அபிவிருத்தி பெற்றது

## அமைச்சர் ராஜித பெருமிதம்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சி காலத்திலேயே நாட்டில் வரலாறு காணாத அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இன்னும் சில காலங்களில் இந்நாட்டு மக்கள் சுபீட்சம் பெற்று வாழ்வார்கள் என அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

பேருவளை சுகாதார அத்தியட்சகர் பிரிவிலுள்ள ஹெட்டிமுல்ல கிராமத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள சுகாதார நிலையத்திற்கான அடிக கல் நாட்டும் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஹெட்டிமுல்ல கிராம மக்களின் நீண்டகாலப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. இன்றைய அரசு மக்களின் தேவைகளை இனங்கண்டு நிறைவு செய்து வருகிறது.

பேருவளைத் தொகுதியில் இன்று பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். கல்வி, சுகாதாரத் துறைகளுக்கு முன்னுரிமையளிக்கப்பட்டுள்ளது. மேலும், கடற்றொழில் துறையிலும், சுற்றுலா பயணத் துறையிலும் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளோம் என்றார். (2)

# பொதுக்கூட்டமும் கலந்துரையாடலும்

(யாழ்ப்பாணம்)

யா/ இணுவில் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினால் மேற்படி கல்லூரிக்கான விளையாட்டு ஷ்மைதானத்துக்கான காணி கொள்வனவு தொடர்பான விசேட பொதுக்கூட்டமும் கலந்துரையாடலும் இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு பிரதி அதிபர் ம.உதயகுமாரன் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என யா/ இணுவில் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க செயலாளர் அறிவித்துள்ளார்.

மேலும் இவ் விசேட பொதுக்கூட்டத்திலும் கலந்துரையாடலிலும் நலன் விரும்பிகள், ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (2)

# பாப்பரசரின் பயண ஏற்பாடு உறுதிப்படுத்தப்படவில்லை

(கொழும்பு)

கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவரான பாப்பரசர் பிரான்சிஸ், அடுத்த வருடம் ஜனவரி மாதம் 13 ஆம் திகதி இலங்கைக்கு பயணம மேற்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையின் உள்ளூர் தேவாலயங்களினதும், அரசாங்கத்தினதும் அழைப்பை ஏற்று பாப்பரசரின் இந்தப் பயணம் இடம்பெறவுள்ளது.

இலங்கையிலுள்ள தேவாலயங்களுக்கான அதிகாரபூர்வ பேச்சாளர் வண.பிதா பெனடிகட் ஜோசப், பாப்பரசரின் இலங்கைக்கான பயணத்தை உறுதிப்படுத்தியுள்ளார்.

எனினும், பாப்பரசரின் பயண நாள் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

பாப்பரசர் தனது பயணத்தின் போது, மடு தேவாலயத்துக்கும பயணம் மேற்கொள்வார் என்றும், உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களை பார்வையிடுவார் என்றும் சில ஊடகங்களில் வெளியான தகவல்களையும் அவர் நிராகரித்துள்ளார்.

இன்னமும் பாப்பரசரின் பயண ஏற்பாடு குறித்த திட்டங்கள் உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (2)

# ஈரானுடன் உறவுகளை வலுப்படுத்த விருப்பம்

## இலங்கைத் தூதுவர் தெரிவிப்பு

ஈரானுடனான உறவுகளை வலுப்படுத்திக்கொள்ள விரும்புவதாக இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது. ஈரானுக்கான இலங்கைத் தூதுவர் மொஹமட் பைசால் ராசீன் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஈரானுடன் கலாசார மற்றும் சுற்றுலாத்துறை சார் உறவுகளை மேம்படுத்திக் கொள்வது குறித்து இலங்கை அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக ராசீன் தெரிவித்துள்ளார்.

ஏனைய மத்திய கிழக்கு நாடுகளை விடவும் ஈரான் வித்தியாசமான கலாசாரத்தை கொண்டது எனவும், வித்தியாசமான மக்கள் சமூகத்தைக் கொண்டது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகளைச் சேர்ந்த மக்கள் திறந்த மனதுடன் செயற்படுவதில்லை என்ற போதிலும, ஈரானிய மக்கள் திறந்த மனதுடன் செயற்படக்கூடியவர்கள் என தெரிவித்துள்ளார். (2)

# பிரித்தானியா-தன்னார்வத்தொண்டு நிறுவனங்களுக்கிடையில் பேச்சு

இலங்கை விவகாரம் குறித்து பிரித்தானியாவிற்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

இச்சந்திப்பு அண்மையில் இடம் பெற்றதாக ஹியூகோ தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் ஹியூகோ ஸ்வெயார், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். ஐக்கிய நர்டுகள் மனிதவுரிமைப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் பின்னரான நிலைமைகள் குறித்து இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடனான சந்திப்பு ஆக்கபூர்வமாக அமைந்தது என ஸ்வெ யார் தெரிவித்துள்ளார். குற்றச் செயல்கள் தொடர்பில் சர்வதேச சுயாதீன விசாரணைப் பொறிமு றைமை ஒன்று உருவாக்கப்பட வேண்டுமென வலியுறுத்தி ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2)

# பிரிவுத்துயர் பகிர்வு



### தம்பிராஜா கந்தசாமி

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராஜா கந்தசாமி கடந்த 28 ஆம் திகதி திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை வெள்ளிக்கிழமை நீர்வேலியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### சுந்தரேஸ்வரராஜா சிவானந்தன்

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் சென்னை மடிப்பாக்கத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரேஸ்வரராஜா சிவானந்தன் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று19/32,1st Cross Street, Bharath Nagar,Madipakkam Chennai-600091,India என்னும் முகவரியில் நடைபெறும்.



### சிற்றம்பலம் சிறீதரன்

துன்னாலை தெற்கு மாலுசந்தி கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Goslar ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் சிறீதரன் கடந்த 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அகாலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு Feuerbestattungen Hildesheim,KampstraBe 12,31180, Hasede,Giesen, Germany என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### இராசநாதன் பிரதீபன்

கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட இராசநாதன் பிரதீபன் கடந்த 26 ஆம் திகதி சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10 மணிக்கு மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் தகனம் செய் யப்படும்.



### கனகசபை சுப்பிரமணியம்

போயிட்டியைப் பிறப்பிடமாகவும் தற்போது பன்னாலையை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை சுப்பிரமணியம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சிவபதி பன்னாலை தெல்லிப்பழை இல்லத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்றது.



### சீனித்தம்பி கணேசலிங்கம்

யாழ்.ஈவினை புன்னாலைக் கட்டுவனைப் பிறப்பிடமாகவும் கனடா Toronto ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சீனித்தம்பி கணேசலிங்கம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு Chapel Ridge Funeral Home, and Cremation Centre, 8911, Woodbine Ave Markham,ON L3R 5G1 Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி யோகராஜா இந்துமதி

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் தற்போது கனடா Mississauga ஐ வசிப்பிடமாகவும் கொண்ட யோகராஜா இந்துமதி (அறிவகம் ஆசிரியர்) கடந்த 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு ScottFuneral Home Mississauga Chapel,420 Dundas St E, Mississauga, ON L5A 1X5,Canada என்னும் முகவரி யில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### வல்லிபுரம் இராஜசிங்கம்

கரவெட்டி கிழக்கு,கடுக்காயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் இராஜசிங்கம் கடந்த 21 ஆம் திகதி திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10 மணிக்கு வேரோண்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்


792

## மோசமான தொழில்

வைசாலி நகரத்தில் சோமகுப்தன் என்ற வணிகன் வசித்து வந்தான். குறுகிய காலத்தில் அதிக முதலீடு எதுவுமின்றி ஏராளமான பொருள் சம்பாதித்து கோடீஸ்வரனாக ஆசை கொண்டான். ஆனால் எத்தகைய தொழிலில் அவ்வாறு முதலீடே இல்லாமல் நிறையப் பணம் சம்பாதிக்கலாம் என்று அவன் யோசித்து வந்தான். ஒருநாள் நகரத்தில் ஒரு பெரிய செல்வரின் வீட்டில் லட்சக்கணக்கான பணத்தைத் திருடர்கள் வீடு புகுந்து திருடிச் சென்றனர்.


திருட்டுத் தொழிலில் முதலீடு எதுவுமின்றி ஏராளமாகப் பணம் சம்பாதிக்க முடியும் என்ற உண்மை அவனுக்கு அப்போதுதான் விளங்கியது.

உடனே அவன் தன்னுடைய வியாபாரத்தை விட்டு விட்டு, திருட்டுத் தொழிலில் எவ்வாறு ஈடுபடுவது என்று யோசிக்கத் தொடங்கினான். சில நாட்களுக்குப் பிறகு நகர எல்லையில் உள்ள ஒரு பாழடைந்த கோயிலில் சில திருடர்கள் வசிக்கின்றனர் என்று தெரிந்து கொண்டு, அவர்களுடன் பரிச்சயம் செய்து கொள்ள இரவு நேரங்களில் அங்கு சென்று உறங்க ஆரம்பித்தான்.



திடீரென அந்நியன் ஒருவன் இரவு நேரங்களில் தங்கள் மறைவிடத்தில் தூங்குவது கண்ட திருடர்கள் சோமகுப்தனை ஒரு அநாதை என்றும், தமது திருட்டுத் தொழிலுக்கு அவனையும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் எண்ணினர். ஒருநாள் இரவில், திருடர்கள் இருவர் சாமான்கள் சுமக்கும் காவடிகள் கொண்டு வந்தனர். அவர்களில் குட்டையாக இருந்தவன் தூங்கிக் கொண்டிருந்த சோமனை எழுப்பி, "தம்பி! எங்களுடைய சகா ஒருவன் இன்று வரவில்லை. அவனுக்கு பதிலாக நீ எங்களுடன் திருட வருவாயா?" என்று கேட்டான்.

திருட்டுத் தொழிலில் அனுபவம் பெறுவதற்கான வாய்ப்பை எதிர்பார்த்துக் காத்திருந்த சோமன் உடனே மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டான். உடனே இரு திருடர்களும் சோமனை ஒரு விவசாயி போல் வேடம் தரிக்கச் செய்தனர். பிறகு அவன் தலையில் வெல்லம் அடங்கிய ஒரு மூட்டையை ஏற்றி, கையில் ஒரு கழியையும் கொடுத்தனர்.



திருட்டுத் தொழிலுக்கு இத்தனை ஒப்பனை தேவையா என்று சோமன் ஆச்சரியப்பட்டான். பிறகு அவர்கள் இருவரும் சோமனைத் தன்னுடன் அழைத்துச் சென்றனர். அவர்கள் நகரத்தின் பிரதான தெருக்களில் சென்றனர்.

செல்லும் வழியில் இருட்டில் படுத்திருந்த ஒரு நாயின் வாலைத் தெரியாமல் சோமன் மிதித்து விட, நாய் பயங்கரமாகக் குரைத்தது. குரைப்பு சத்தத்தைக் கேட்டதுமே, சோமன் மிகவும் பயந்து போனான்.

அவன் தலையிலிருந்த மூட்டையிலிருந்து சிறிது வெல்லம் தரையில் விழுந்து சிதற, அதை நாய் பாய்ந்து சென்று தின்னத் தொடங்கி, தான் குரைப்பதை நிறுத்தியது.

"தம்பி! நீ திருடப் போகிறாய் என்பதை நினைவுபடுத்திக் கொண்டு எச்சரிக்கையாக நடந்து செல்ல வேண்டும். இப்போது இந்த சத்தத்தைக் கேட்டு யாராவது காவலன் வந்தால் ஏதாவது உளறி விடாதே! வாயை மூடிக் கொண்டிரு!" என்று உயரமான திருடன் எச்சரித்தான்.

அவன் சொல்லி முடிப்பதற்குள், அங்கு குதிரை மீது சவாரி செய்தவாறு ஒரு காவலன் தோன்றினான். அவர்களைக் கண்டதும், "யாரடா நீங்கள்? இந்த இரவு நேரத்தில் எதற்கு தெருக்களில் திரிந்து கொண்டிருக்கிறீர்கள்?" என்று உறுமினான.........

(தொடரும்)

## 05.2014 01 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1328 - ஸ்கொட்லாந்தைத் தனிநாடாக இங்கிலாந்து அங்கீகரித்தது. ஸ்கொட்லாந்து விடுதலைப் போர் முடிவுக்கு வந்தது.
- 1707 - இங்கிலாந்து மற்றும் ஸ்கொட்லாந்து இணைகப்பட்டு பெரிய பிரித்தானியா என்ற ஒரு நாடாகியது.
- 1834 - பிரித்தானியக் குடியேற்ற நாடுகள் அடிமைத் தொழிலை நிறுத்தின.
- 1840 - உலகின் முதலாவது அதிகாரபூர்வ ஒட்டக் கூடிய தபால்தலை, பென்னி பிளாக் ஐக்கிய இராச்சியத்தில் வெளியிடப்பட்டது.
- 1851 - லண்டனில் பெரும் பொருட்காட்சி விக்டோரியா மகாராணியினால் திறந்து வைக்கப்பட்டது.
- 1925 - சீனாவில் அனைத்து சீன தொழிற்சங்கங்களின கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இதுவே இன்று 134 மில்லியன் உறுப்பினர்களுடன் உள்ள உலகின் மிகப்பெரிய தொழிற்சங்கம் ஆகும்.
- 1940 - கோடை கால ஒலிம்பிக் போட்டிகள் போர் காரணமாக நிறுத்தப்பட்டன.
- 1948 - கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசு அமைக்கப்பட்டது. கிம் உல்-சுங் அதன் முதலாவது ஜனாதிபதியானார்.
- 1950 - குவாம் ஐக்கிய அமெரிக்காவின் பொதுநலவாயத்தில் இணைக்கப்பட்டது.
- 1956 - இளம்பிள்ளை வாத நோய்த் தடுப்பு மருந்து அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1961 - கியூபாவை சோசலிச நாடாகவும் தேர்தல் முறையை ஒழித்தும் அதன் பிரதமர் பிடெல் காஸ்ட்ரோ அறிவித்தார்.
- 1987 - இரண்டாம் உலகப் போரின் போது அவுஷ்விட்ஸ் வதை முகாமில் கொல்லப்பட்ட யூதப் பெண்மதகுரு ஈடித் ஸ்டெயின் பாப்பரசரால் புனிதப்படுத்தப்பட்டார்.
- 1993 - இலங்கை ஜனாதிபதி ஆர். பிரேமதாச மே தினப் பேரணியில் வைத்து மனிதக் குண்டுத தாக்குதலின் மூலம் கொல்லப்பட்டார்.
- 2004 - சைப்பிரஸ், செக் குடியரசு, எஸ்தோனியா, ஹங்கேரி, லாத்வியா, லித்துவேனியா, மால்ட்டா, போலந்து, சிலோவாக்கியா, சிலவேனியா ஆகிய ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்தன.
- 2006 - புவேர்ட்டோ ரிக்கோ அரசு நாட்டின் பணவீக்கம் காரணமாக பாடசாலைகளையும் அரச நிறுவனங்களையும் மூடியது.
- 2011 - அல்கொய்தா தலைவர் ஒசாமா பின்லேடன் அமெரிக்கப் படையினரால் பாகிஸ்தானில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

### பிறப்புக்கள்

- 1951 - கோர்டன் கிரீனிட்ச், மேற்கிந்தியத் தீவுகளின் முன்னாள் துடுப்பாளர்
- 1971 - அஜித் குமார், தமிழ்த் திரைப்பட நடிகர்

### இறப்புகள்

- 1965 - ஜி. என். பாலசுப்பிரமணியம், கர்நாடக இசைப பாடகர், நடிகர் (பி. 1910)
- 1993 - ரணசிங்க பிரேமதாசா, இலங்கை ஜனாதிபதி (பி. 1924)

2011-ஒசாமா பின்லேடன், அல்கொய்தா தலைவர் (பி. 1957)

### சிறப்பு நாள்

மே தினம் - உலகத் தொழிலாளர் தினம்

### ரணசிங்க பிரேமதாச



ரணசிங்க பிரேமதாச 1924 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 23 ஆம் திகதி பிறந்தார். இவர் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதியாவார். இவர் ஜனாதிபதியாவதற்கு முன்னர் ஜே.ஆர். தலைமையிலான அரசில் பெப்ரவரி 6 1978 தொடக்கம் மார்ச் 3 1989 வரையில் பிரதமராகவும் பணியாற்றினார். இவரது ஆட்சிக்காலத்தில் கொழும்பு உட்பட இலங்கையில் பல பகுதிகளில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் மற்றும் இவரது அரசிற்கு எதிராகக் கருத்துக்களை தெரிவித்தவர்கள் பலர் இரகசியமான முறையில் கடத்தப்பட்டு பின்னர் களனி ஆற்றில் சடலமாக மீட்கப்பட்டனர்.

இவரது ஆட்சிக்காலத்தில் நாட்டின் பலபகுதிகளில் மணிக் கூட்டு கோபுரங்கள் நிர்மாணிக்கப்பட்டது. இதற்கு இவர் ஆருடத்தில் (ஜோதிடம்) நம்பிக்கையுள்ள இவரின் ஜோதிடம் ஒருவரின் கருத்திற்கமையவே இவை நிகழ்ந்ததாகக் கூறப்படுகின்றது. இவர் 1993 இல் மே தின ஊர்வலத்தின் போது, கொழும்பு ஆமர் வீதியில் தற்கொலைக் குண்டுதாரியால் கொலை செய்யப்பட்டார். இவரது நினைவாக இவர் கொலைசெய்யப்பட்ட ஆமர் வீதியில் ஓர் உருவச் சிலை நிர்மாணிக்கபபட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

....இப்படிப் பதினெண் சித்தர்களும் ஒன்று சேர்ந்து ஒரே சன்னதியில் காட்சி தருவது இந்தச் சந்தன மகாலிங்கம் கோயிலில் மட்டுமே என்று சொல்கிறார்கள். பதினெட்டு சித்தர்களையும் கண் குளிரத் தரிசனம் செய்கிறோம்.

சித்தர்களை நேரடியாகத் தரிசனம் செய்யும் பாக்கியம் இல்லா விட்டாலும் கூட அவர்களைச் சிலாவடிவிலாவது தரிசிக்கிறோமே, அதுவே ஒரு பெரும் பேறு அல்லவா. இப்படி சிலை வடிவில் அமர்ந்து நமக்கு அருள் பாலிக்கும் இந்தப் பதினெண் சித்தர்களுக்கும் ஆடி அமாவாசையன்று விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறுமாம்.

பதினெண் சித்தர்கள் சன்னதிக்கு எதிரே சிறியதொரு மண்டபத்தில் நவக்கிரக சன்னதி ஒன்றை அமைத்திருக்கிறார்கள். இதைக் காணும் போது இடைக்காட்டுச் சித்தர் நவக்கிரகங்களையும் இடம்மாற்றி வைத்து மழை பொழியச் செய்த கதைதான் ஞாபகத்திற்கு வருகிறது.

நவக்கிரகங்களையும் தரிசித்துவிட்டு சட்டை முனிவர் குகைக்குள் நுழைகிறோம்.

### சட்டை முனிவர் குகை

சந்தன மகாலிங்கத்துக்குத் தென்மேற்கு மூலையில் சட்டை முனிவர் குகை காணப்படுகிறது. வெளியே பார்ப்பதற்கு ஏதோ உணவுக்கூடம் போல் ஷெட் போலத் தென்படும் கட்டடத்திற்குள் படிகளேறி உள்ளே சென்றால் ஒரு பெரிய கூடம் தென்படுகிறது. கூடத்தின் நடுவே பெரியதொரு அடுப்பு. இதனை அணையா அடுப்பு என்று சொல்கிறார்கள். சந்தன மகாதேவர் ஆலயத்து நைவேத்தியப் பிரசாதங்கள் இந்த அடுப்பில்தான் தயாரிக்கப்படுகிறது. அமாவாசைக்கு முதல் நாள் பற்ற வைக்கப்படும் இந்த அடுப்பு அமாவாசை முடிந்து மறுநாள் பிற்பகல் வரை அணைவதில்லையாம். சந்தன மகாதேவரைத் தரிசிக்க வரும் அன்பர்களுக்கு இங்கும் அன்னதானம் நடைபெறுகிறது.



பதினெண் சித்தர்கள்

கூடத்தின் வலதுபுறம் பண்டக அறை. பெரிய பாறையை அடைத்துத் தடுத்து மண்டப வெளியாக அமைந்திருந்தனர். இங்குதான் பக்தர்களுக்கு அன்னதானம் நடைபெறுகிறது.

கூடத்தின் இடது மூலையில் சட்டைநாதர் குகைக்குள் செல்லும் சிறிய வழியொன்று காணப்பட்டது. இதனுள்தான் சட்டை முனிவரும் பதினெண் சித்தர்களும் தவம் செய்து கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால் உள்ளே நுழைந்து பார்க்க யாருக்கும் அனுமதியில்லை.

குகை வாயிலை சிமெண்ட் பூசி சதுர வடிவில் ஒழுங்குபடுத்தியிருக்கிறார்கள். குகைக்குப் பக்கவாட்டிலும், நுழைவு வழிக்கு மேலேயும் சட்டைநாதரின் திருவுருவப்படமும் மாட்டி

**ஆன்மீகம் 108**

வைத்திருக்கின்றனர். நுழைவு வாயிலில் சிறியதொரு கைவிளக்கு எரிந்து கொண்டிருக்கிறது. இந்த நுழைவு வாயிலுக்கு மட்டும் தீபாராத்னை செய்யப்படுகிறது. வெளியிலிருந்தபடியே குகைக்குள் நோக்குகிறோம். உள்ளே ஒரே கும்மிருட்டு.

தவசிக் குகைக்குள் நுழைந்து பார்த்தது போல் இங்கும் நுழைந்து பார்க்க ஆசைதான். ஆனால் எந்தச் சந்தர்ப்பத்திலும் உள்ளே தவம் செய்யும் சட்டைநாத முனிவருக்கு இடையூறு செய்யக் கூடாது என்பதில் கடுமையான கட்டுப்பாடு பின்பற்றப்படுவதால் வெளியிலிருந்தபடியே குகை வாயிலைத் தரிசித்துவிட்டு கிளம்புகிறோம்.

இந்த சட்டை முனிவரைப் பற்றி ஒரு செய்தி என்று கூறி நிறுத்தினார் சிவனடியார்.

எல்லோரும் ஆவலுடன் அவர் பக்கம் திரும்பினோம்.

### அதிசய நெல்லிக்கனி

குகையை விட்டு வெளியே வந்த நாங்கள், பதினெண் சித்தர் சன்னதி முன்பு அமர்ந்து சிவனடியார் சொல்லும் கதையைக் கேட்கத் தயாரானோம்.

(தொடரும்)

டாக்டர். சி. எஸ். முருகேசன், எம்.ஏ., பி.எச்.டி

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்



**27**

அந்த மனிதன் என் அன்புக்குரியவன்.

என் மனசில் ஓர் ஈரப் படலமாய் எப்போதும் படர்ந்திருப்பவன்.

பாரதிக்கு ஒரு குவளைக் கண்ணன் இருந்தாராமே! நான் பாரதி இல்லை; ஆனால் அந்த மனிதன் எனக்குக் குவளைக் கண்ணன்.

இராமனுக்கு ஓர் அனுமனாமே! நான் இராமனில்லை; ஆனால் அந்த மனிதன் எனக்கு அனுமன்.

எங்கோ பிறந்தேன்; எப்படி எப்படியோ வளர்ந்தேன்.

கால அலைகள் என்னை உருட்டிப் புரட்டி எழுபதுகளின் தொடக்கத்தில் புரசைவாக்கத்தில் போய்ச் சேர்த்தன.

கரையில் ஒதுங்கிய என்னை அந்த மனிதன் தன் கைகளில் எடுத்துக் கொண்டான்.

வெயில் நாளில் நிழலானான்; மழை நாளில் குடையானான்.

என் சகாராவில் அங்கங்கே திட்டுத் திட்டாய்ப் பசுமை தட்டுப்பட வைத்தான்.

அந்த மனிதன்தான்- தாஸ்.

என் மீது பரத பாசம் கொண்டிருக்கும் பண்பாளன்.

எப்போதாவது கிடைக்கும் தனிமைகளில்- மொட்டை மாடிகளின் லுங்கிப் பொழுதுகளில்- நிலா அழும் இரவுகளில்- கண்கள் கவிழும் நிமிடங் களில்- ஞாபக ஜன்னல்கள் திடீர் திடீரென்று திறந்து கொள்கையில் தப்பாமல் வந்து விட்டுப் போகும் முகங்களுள் தாஸ் முகமும் ஒன்று.

இன்று சில மேகங்கள் எனக்காக நின்றுவிட்டுப் போகலாம்.

நான் குரல் கொடுத்தால் சில கொடிகள் பூப்பூக்கலாம்.

நான் வணங்கும் மனிதர்கள் தங்கக் கையெழுத்திட்டு எனக்குத் தபால் அனுப்பலாம்.

ஆனால் என் மனசில் அதிகமாய் மையம் கொண்டிருப்பதெல்லாம் எனக்கு முகவரி இல்லாத போதே எனது முகம் கண்டுகொண்ட அந்த மனிதனின் முகம்தான்.

அவர் ஒரு பத்திரிகைக் கடையில் பணி செய்து கொண்டிருந்த காலம்.




எனது முதல் கவிதை நூலான "வைகறை மேகங்களின்" ஐந்து படிகளை அந்தக் கடையில் விற்பனைக்கு விட்டு விட்டு வந்தேன்.

அப்போது அவர் கடையில் இல்லை.

வந்ததும் வைகறை மேகங்களைப் படித்திருக்கிறார்.

அவர் மனதில் ஆச்சரிய அலை அடித்திருக்கிறது.

ஒருநாள்-

புரசைவாக்கத்தின் சாயங்கால சப்தங்களில், சங்கீதம் அனுபவித்துக் கொண்டே பொடி நடையாய்ப் போய்க் கொண்டிருக்கிறேன்.

என் சட்டையை உரசிக் கொண்டு ஒரு சைக்கிள் சட்டென்று நிற்கிறது.

அய்யா! நீங்கதானா கவிஞர்? என் பேர் தாஸ். உங்க 'வைகறை மேகங்கள்' படிச்சேன். ச்சே! எப்படி எழுதியிருக்கீங்க! உங்க வயசுக்கும் கவிதைக்கும் சம்பந்தமே இல்லையே. உங்களுக்கு நல்ல எதிர்காலம் இருக்கு. உங்க கண்ணைப் பாத்தே நான் சொல்லுவேங்க.

எதிர்பாராத விதமாய் தார் ரோட்டில் தேவர்கள் என்மீது பூமாரி பொழிந்ததும் எனக்குப் புல்லரித்தது.

அன்று ஆரம்பமான நட்புதான்.

எனக்கு நண்பனாய்- மந்திரியாய்- நல்லாசிரியனுமாய்- பண்பிலே தெய்வமாய்- பார்வையிலே சேவகனாய்- விளங்கி வந்த அந்த தாஸூக்குத்தான் இப்போதும் என் மனது முதல் மரியாதை செய்ய முந்துகிறது.

அந்நாளில்.... உறவுகளால் உதறப்பட்டுத் தனியே இருந்து படிக்க வேண்டிய துக்க வருடங்களுக்கு நான் துரத்தப்பட்டபோது என்னைத் தழுவித் தேற்றித் தங்க வைத்த ஜீவன் தாஸ்தான்.

அந்த நேசமுள்ள சகோதரனின் பாசச் சிறகுக்குள் நான் பத்திரமாக இருந்தேன்.

என்னை எப்படியெல்லாம் அவர் அடைகாத்தார் தெரியுமா?

அவருக்கு யாராவது அழகான பேனா அன்பளிப்பு வழங்கினால் உடனே, ஓடோடி வந்து என் சட்டைப் பையில் செருகிவிட்டுச் சந்தோஷப் படுவார்.

என் செருப்பின் விளிம்பு தேய்வதற்குத் திகதி பார்த்தால் உடனே ஓடிப்போய்ப் புதுச் செருப்பு வாங்கி வந்து கொடுத்துப் போட்டுக் கொள்ளுங்கள் என்பார். என்னினும் பதினைந்து வயது பெரியவர் எனினும் என்னை அய்யா என்றுதான் அழைப்பார்.

-வைரமுத்து-

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளி உலக நடப்பினைத் தெரிந்து கொண்டு தொழிற்றுறை உலகினுள் பிரவேசிப்போம்

இலங்கையின் இலவசக் கல்வித் திட்ட முறைமையில் கல்வித்துறையின் முக்கியமான இலக்கு நாட்டினுடைய அபிவிருத்தி மேம்பாட்டிற்கு உகந்த அறிவு, திறன், மனப்பாங்கு கொண்ட மாணவ சமூகத்தை உருவாக்குதல் என்பதாகும்.

இந்த நோக்கை அடைவதற்கான முக்கிய நிலையங்களாக நிறுவனமயப்படுத்தப்பட்ட பாடசாலைகளும் கல்வியியற் கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் தொழில்நுட்ப நிறுவனங்களும் காணப்படுகின்றன.

மேற்படிப்பிற்கான அடித்தளத்தை இடுகின்ற நிறுவனமாக பாடசாலைகளே குறிப்பிடத்தக்க பங்கை வகிக்கின்றன. எனினும் அறிவுக்கு கொடுக்கப்படுகின்ற முக்கியத்துவம்



பின்வரும் ஏனைய திறன் மனப்பாங்கு மேம்பாட்டில் பற்றாக் குறை நிலையில் இருப்பதையே காணக்கூடிதாயிருக்கிறது.

போட்டித்தன்மை மிக்க உலகில் எமது இருப்பினை நிலையானதாகவும் நீடித்ததாகவும் மாற்றிக் கொள்வதில் இன்று சவால் நிலவுகின்றது. உலகமயமாக்கலின் விளைவுகள், தகவல் தொழில்நுட்பத்துறையின் முன்னேற்றம் போன்றவை உலகை உள்ளங்கையில் சுருக்கி தந்திருக்கின்றது.

வாழ்க்கை இலகுவாக்கப்பட்டுள்ள போதிலும் அதனை வாழுதல் கடினமாக்கப்பட்டிருக்கின்றது. இவ் இடர் மிகு வாழ்வை இன்பமயமானதாகவும் அர்த்தமுள்ளதாகவும் நாம் எமது கைகளில் தத்தெடுத்துள்ள அதாவது நமது எதிர்கால சிறார்களை தயார்படுத்தி கொள்வதோடு அவர்களுக்கு பொருத்தமும் சாதகமானதுமான வழிவகைகளை திறந்து விட வேண்டியுமுள்ளது.

இதற்காகவே அரசினால் கல்வி, தொழில் வாய்ப்புக்களை விரிவுபடுத்தும் புதிய தொழில் நுட்பத்துறை அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. எனினும் மாணவ சமூகத்தினிடையே இது பற்றிய புரிதல்களும் அக்கறை நிலையும் பற்றாக் குறையாகவே காணப்படுகின்றன.

பாரம்பரிய பழைமை பேணுகின்ற கல்வி கோட்பாடுகளில் இருந்து விடுபட முடியாதுள்ளது. க.பொ.த. சாதாரண பரீட்சை, பின்னர் உயர்தர கற்கை என நீட்சிபெற்று அவற்றிலும் அதிகமானோர் மனப்பாடமாக்கி பதியவைத்தே பரீட்சையிலும் பெறுபேற்றை மாத்திரம் பெற்றுக் கொள்ளும் வெறும் கலைத்துறைசார் நூற் கல்வியிலேயே பயணிக்கின்ற நிலை காணப்படுகின்றது. திறன் தொடர்பாகவோ அல்லது தொழில்சார் உலகிற்கு பயனுள்ள தகைமையை பெறுவதிலோ விருத்தி நிலையை காண முடியாதுள்ளது.

இந்நிலையினை மேம்படுத்துவதற்காக அரசு தனது கல்விச் சீர்திருத்த சிந்தனையின் ஓர் அங்கமாக 2012 ஆம் ஆண்டு தொடக்கம் தொழில் வழிகாட்டல் ஆலோசனைகளை மாணவரிடமும் பெற்றோரிடமும் விரிவுபடுத்தும் நோக்கில் ஒவ்வொரு வலயக் கல்வி அலுவலகத்திற்கும் தொழில் வழிகாட்டல் ஆலோசனை அதிகாரிகள் இருவரை நியமித்து தொழில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவைகளை வழங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதற்கமைய பாடசாலைக் கல்வியை முடிவுறுத்தி வெளிச் செல்லும் மாணவர்கள் தமது இளமைப் பருவத்திலேயே வினைத்திறனுடனும் உறுதியான வகையிலும் தமது பணிகளை முகாமை செய்து கொள்வதற்கு தேவையான திறன்களையும் அறிவையும் விருத்தி செய்து கொள்ள உதவுதல் என்பதே இதன் பொருளாகும்.

எம்மவரிடையே பல்கலைக் கழகம் ஒன்றுதான் மேற்படிப்பு கல்விக்கான மூலம் எனவும் அதனை அடைவதே கல்வியினதும் வாழ்வினதும் உச்சம் என நினைக்கின்ற தப்பபிப்பிராயம் இன்றும் உண்டு.

இலங்கையில் வருடாந்தம் சுமார் மூன்று இலட்சத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் உயர் தரப் பரீட்சைக்கு தோற்றுகின்ற போதும் சுமார் 25 ஆயிரம் மாணவர்களே பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகின்றனர்.

ஏனையோர் தொழில்சார் உலகிற்கு பொருத்தமான தொழில் கல்வியை தேர்ந்தெடுப்பதை விட வெளிவாரியாக கலைப்படம் ஒன்றை பெற்றுக் கொள்வதிலேயே அதிக ஆர்வத்தை வெளிப் படுத்துகின்றனர்.

அதேநேரம் உயர்தரக் கல்வியில் சுமார் 51 வீதமான மாணவர்கள் கலைப்பிரிவில் கற்கின்ற நிலையும் விஞ்ஞான கணித பிரிவில் சுமார் 22 வீதமானோரும் வர்த்தக பிரிவில் சுமார் 27 வீதமானோரும் கற்கின்ற சூழலே எமது உயர் தரக் கற்கையில் காணப்படுகின்றது.

இந்நிலையினை 2016 ஆம் ஆண்டில் -க.பொ.த.உயர்தர கணித, விஞ்ஞான பிரிவில் கற்போரின் தொகையில் 40 வீதமாக அதிகரிக்கவும் கலைத் துறையில் கற்போரை 25 வீதமாக குறைப்பதற்குமான நடவடிக்கைகள் மேற்கொள்ள எதிர் பார்க்கப்படுகின்றது.

இதற்காக முதற்கட்டமாக நாடளாவிய ரீதியில் 250 பாடசாலைகளில் தொழில்நுட்ப கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் தொகுதியொன்றுக்கு ஒரு பாடசாலையிலாவது இக் கற்கை நெறி அமைந்திருக்க வேண்டும் என்பது கல்வி அமைச்சின் கொள்கையாகும். இதன் நோக்காக,

1. நாளாந்த வாழ்வியலில் பயன்படுத்தப்படும் தொழில் நுட்பத் திறமைகளை மாணவர்களுக்கு வழங்குதல்.

2.உலகில் காணப்படும் பொருளியல், வாழ்வியல் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான இயலுமையை விருத்தி செய்தல்.

3.தொழில் சந்தைக்கு ஏற்றவாறு மனித வெளியீட்டை வழங்குதல்.

4.தொழிற்கல்வியில் மாணவர்களை ஈடுபடுத்தல் போன்ற செயற்பாடுகள் எதிர்பார்க்கப் படுகின்றன.

மேற்குறித்த தொழில்நுட்ப கற்கை துறையின் மிகப் பிரதான சிறப்பம்சம் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காவிடினும் சர்வதேச அங்கீகாரமுள்ள தேசிய தொழிற்கல்வி தகைமை சான்றிதழ் (National Vocational Qualification) ஒன்றைப் பெற்று தகைமையுடன் தொழிற்றுறை சார் உலகில் பிரவேசிக்க முடியும் என்பதாகும்.

இவை தொடர்பாகவே தொழில் வழிகாட்டல் கருத்தரங்குகள் அமைகின்ற போதும் பெற்றோர், மாணவர் மத்தியில் இவர்கள் வெறுமனே தொழில் ஒன்றுக்காக மட்டும் வழிப்படுத்தப்படுகின்றனர் என்ற தவறான எண்ணக்கரு காணப்படுகின்றது.

தொழில் வழிகாட்டல் ஆலோசனை என்பது கல்வியுலகில் பிரவேசித்து சிறந்த, உயர்ந்த கௌரவமானதும் நிறைந்த வருமானத்தை ஈட்டக்கூடிய பொருத்தமானதும் விருப்பார்ந்த தகுதியானதுமான தொழிலுக்கு வழிகாட்டுதல் என்பதேயாகும். ஐரோப்பிய நாடுகளில் இந்நிலை காணப்படுவதையும் அதனூடாகவே அந்நாடுகளில் பொருத்தமான தொழிற்படை உருவாகி விருத்தியடைந்து வருவதையும் நோக்கலாம்.

எம்மிடையே பதினொரு வருடங்கள் கல்வி கற்ற மாணவன் மூன்று மணித்துளியில் தனது ஆற்றலை பிரயோகிப்பதனூடாகவே அவனது அடைவு பரீட்சிக்கப்படுகின்ற பொருத்தமற்ற மதிப்பீட்டு கலாசாரம் காணப்படுவதையும் நாம் நோக்க முடியும்.

இதன்மூலம் மீத்திறன் கொண்ட மாணவ சமுதாயம் தொடர்ந்து பயணிக்கவும் மெல்லக்கற்போர் கொண்ட மாணவப்படை கல்வியுலகில் இருந்தும் வேலை உலகிலிருக்கும் வெளியேறுவது போன்ற நிலைமைகளை குறைப்பதே மேற்படி வழிகாட்டல் கருத்தரங்குகளின் பிரதான நோக்கு என்பதை சமூகத்தினர் ஆழமாகவும் அகலமாகவும் கருத்தூன்றி புரிதல் வேண்டும்.

இதற்கு ஏற்ற வகையில் தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமாரின் தூரநோக்குப் பார்வையின் வழிகாட்டலிலும் ஆலோசனையின் பிரகாரமும் தென்மராட்சி கல்வி வலய தொழில் வழிகாட்டல் அதிகாரிகளின் திட்டமிடலிலும் World vision நிறுவனத்தின் அனுசரணையுடன் தென்மராட்சி வலயத்தின் 2013 க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய சுமார் ஆயிரம் மாணவர்களுக்கான உயர் தரத்தை வென்றெடுப்போம் எனும் கருப்பொருளிலான தொழில் வழிகாட்டல் கருத்தரங்குகள் யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி, யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி, யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி ஆகிய கல்லூரிகளில் கடந்த தைத் திங்கள் 24,25,26 ஆம் திகதிகளில் க.பொ.த.(உ/தர)தில் தொழில் நுட்ப பாடவிதானம், ஆங்கில மொழியினூடாக சிறந்த எதிர்காலம், சமூக இசை வாக்கமும் நுட்பங்களும், மென்திறன்களை மேம்படுத்த வேண் டியதன் அவசியம், க.பொ.த. (உ/தர) பாடத்தெரிவும் பல்கலைக்கழக அனுமதியும், தொழில்நுட்ப பயிற்சி நிறுவனங்களும் தொழில்வாய்ப்புக்களும், திறந்த பல்கலைக்கழகம் ஊடக புதிய பாடத்தெரிவு, சமூகப் பிறழ்வுகளும் அதன் விளைவுகளும் வழிகாட்டல் ஆலோசனைகளும், தேசிய கல்வியியற் கல்லூரிகளின் தேவைப்பாடுகளும் க.பொ.த (உ/தர) மாணவர்களும், க.பொ.த (உ/தர) பாடத்துறைகளும் பாடச் சேர்மானங்களும், மனவளக் கலை பற்றிய ஓர் அறிமுகம் என்னும் தலைப்புக்களில் நிகழ்த்தப்பட்டன.

இவ்விடயங்களில் துறை சார் வல்லுநர்களினால் இக் கருத்தரங்குகள் மேற்கொள்ளப் பட்டமை குறித்த மாணவர்களுக்கான ஒரு பேறாகும். எனினும் இப் பெறுமதி வாய்ந்த இலவச கருத்தூட்டல்களை எந்தளவிற்கு மாணவர்கள் உள்வாங்கி செயற்பட சித்தமாயுள்ளனர் என்பதிலும் கேள்வி நிலை தோன்றும் என்பதையும் மறுக்கவியலாது. காரணம் கருத்தரங்கின் பின்னர் கூட மாணவர் மனநிலையில் பாடத்தெரிவு தொடர்பான விருத்தி நிலையில் பழைமைவாய்ந்த கோட்பாட்டில் நிற்பதை அவதானிக்க முடிந்தது.

எது எவ்வாறாக இருந்த போதும் கல்வி தொழில் வழிகாட்டுபவர்களின் ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் இதுபோன்ற கருத்துருவாக்க நடவடிக்கைகளிலும் எமது இளஞ் சந்ததியை ஈடுபடுத்தி அவர்களின் சிந்தனை மாற்ற த்தில் விருத்தி யை ஏற்படுத்தி பொருத்தமான பாடத்தெரிவினையும் வேலை உலகினையும் இனங்காணச் செய்து அறிவுடன் கூடிய திறன் மனப்பாங்கு விருத்தியில் மேம்பாடடைந்த சமூகமொன்றை உருவாக்க நாம் அனைவரும் ஒன்றித்து பயணிக்க வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகின்றது.

தி.அபராஜிதன்
(ஆசிரியர்)
யா/கச்சாய் அ.த.க.பாடசாலை



கல்வித் தரிசனம்

கல்வித் தரிசனம் பகுதிக்கு
துறைசார்ந்தவர்களிடமிருந்து
தரமான ஆக்கங்கள்
கோரப்படுகின்றன.
அனுப்ப வேண்டிய முகவரி:-
வலம்புரி
கல்வித் தரிசனம்
இல.3.2 ஆம் ஒழுங்கை.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
(ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிகரமான பயிர்ச்செய்கைக்கான விவசாய முறைகள்

விதைநெல் சுத்திகரிப்பு நிலையங்களின் விபரம்

| மாவட்டம் | விதை சுத்திகரிப்பு நிலையம் | அமைந்துள்ள இடம் | தொடர்பு கொள்ள வேண்டிய தொலை பேசி இலக்கம் |
|---|---|---|---|
| வவுனியா | அரச விதை உற்பத்திப் பண்ணை | A9வீதி, தாண்டிக்குளம், வவுனியா | 0242222273 |
| | சேவா லங்கா பண்ணை | பெரிய குளம், வவுனியா | 0212061715 |
| முல்லைத்தீவு | ஒருங்கிணைந்த பண்ணையாளர் சங்கம் | மாங்குளம் முல்லைத்தீவு வீதி,ஒட்டுசுட்டான் | 0242222874 |
| கிளிநொச்சி | அரச விதை உற்பத்திப் பண்ணை | A9வீதி, பரந்தன் | 0212280088 |
| யாழ்ப்பாணம் | சீட்கோ நிறுவனம் | பலாலி வீதி, திருநெல்வேலி | 0779955541 |
| மன்னார் | அரச விதை உற்பத்திப் பண்ணை | முருங்கன், மன்னார் | 0777844217 |

**(நேற்றைய தொடர்ச்சி)**

**மறு வயற்பயிர்களை வரட்சியிலிருந்து பாதுகாக்கும் தொழில்நுட்பங்கள்**

**அ. விதையின் தரத்தினை மேம்படுத்துவதற்கான விதைப்பரிகரணம்**

பருப்புவகைப் பயிர்கள் வரட்சியைத் தாங்கிவீரியமாக வளர்வதற்காகப் பயிரிட முன்விதைகளைப் பரிகரணம் செய்துநடுகை செய்ய வேண்டும்.

1)அரிசிக்கஞ்சிப் பரிகரணம்

★விதைகளை 12 மணித்தியாலம் நீரில் ஊறவிடவும்.

★மிதக்கும் சப்பி, பீடைத் தாக்கமுடைய விதைகளைஅகற்றவும்.

★ நீர் உறிஞ்சி நன்கு பருத்து சிறுமுளை வந்துள்ள விதைகளைத் தெரிவு செய்யவும்.

★விதைகளின் மேல் கஞ்சியை நன்கு தெளித்து கலக்கவும்

★சாம்பல் விதைகளில் ஒட்டும்படி நன்கு கலந்து விடவும்

★நடுகையைமேற்கொள்ளவும்

2) நிலக்கடலைவிதைப் பரிகரணம்

★ 5 கிராம் கல்சியம் குளோரைட்டை 1000 மி.லீ நீரில் கரைக்கவும்.

★ஒரு கிலோ தரமான விதைகளை 300 மி.லீ. கரைசலில் இட்டு 4 மணித்தியாலம் ஊறவிட வேண்டும்.

★விதைகளின் ஈரப்பதன் ஆரம்ப நிலைக்கு வரும் வரை நிழலில் உலர விட்டு பின் நடுகை செய்ய வேண்டும்.

3) பாசிப்பயறு, உழுந்து விதைப் பரிகரணம்

★1 கிராம் நாகசல்பேற் அல்லது மாங்கனீசுசல்பேற் எடுத்து 1 லீற்றர் நீரில் கரைக்கவும்.

★1 கிலோ தரமான விதையினை 350 மில்லி லீற்றர் கரைசலில் இட்டு 3 மணித்தியாலம் ஊறவிடவும்.

★விதைகளின் ஈரப்பதன் ஆரம்ப நிலைக்கு வரும் வரை நிழலில் உலர விட்டுப்பின் நடுகை செய்யவும்.

**ஆ) பத்திரக்கலவை இடுதல**



மிளகாய்ப் பயிரிடையே வாழைச்சருகால் பத்திரக்கலவை இடல்

★நிலத்தில் இருந்து ஆவியாதல் மூலம் இழக்கப்படும் நீரினளவைக் குறைப்பதற்காக கிளிசிறீடியா, வேப்பமிலை, பூவரசு, நாவல், பனையோலை, வாழைச்சருகு, வைக்கோல், காய்ந்த புற்கள் மற்றும் பயிர் மீதிகளைக் கொண்டு பயிர்களிடையே பொருத்தமான முறையில் மூடுபடைகளை இடலாம்.

★இதனுடாக நீரிழப்பைக் குறைப்பதன் மூலம் பயிர்களைப் பாதுகாக்கலாம்

**இ) தூவல் நீர்ப்பாசனத்தின் கீழ் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளல்**

★ தூவல் நீர்ப்பாசனத் தொகுதியினை வைத்திருக்கும் விவசாயிகள் தூவல் நீர்ப்பாசனத்தின் கீழ் பயிர் செய்கையை மேற்கொள்ள முடியும்.

★காலை, மாலை நேரங்களில் தூவல் நீர்ப்பாசனத் தொகுதியை இயக்கி நீரின் உச்ச பயன்பாட்டினைப் பெறமுடியும்.

★ பாத்தி நீர்ப்பாசனம் செய்யும் போது பயிர்களின் வேர்தொகுதிக்கு மட்டும் நீர் கிடைக்கக் கூடியவாறு நீர்ப்பாசனம் செய்யவும்.

**இலைமூலம் போசனைச் சத்துக்களை வழங்குதல்**

மண்ணில் போதியளவு ஈரப்பதன் இல்லாத நிலையில் திரவப்பசளை விசுறுவதே பயிருக்கு தேவையான போசனைகளை வழங்குவதற்குரிய ஒரேயொரு வழிமுறையாகும்.

★ சேவ் பிளஸ்

இலை மேற்பரப்பினுாடான ஆவியுயிர்ப்பைக் குன்றக்கும்.

★ ஒனியன் பிளஸ்

வெங்காயத்தின் தரமான விளைச்சலுக்கு.

★கிறின் மிராக்கில்

ஆவியுயிர்ப்பை குறைத்து நீரிழப்பை தடுக்கும்.

**3) பழப்பயிர்களை வரட்சியிலிருந்து பாதுகாப்பதற்கான தொழில் நுட்பங்கள்**

வடமாகாணத்தில் 7 ஆயிரத்து 057 கெக்ரெயர் விஸ்தீரணத்தில் பழப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்ப டுகின்றது. பிரதான பயிர்களான வாழை 2ஆயிரத்து160 கெக்ரெயர் விஸ்தீரணத்திலும் மா ஆயிரத்து997 கெக்ரெயர் விஸ்தீரணத்திலும் தேசி 709 கெக்ரெயர் விஸ்தீரணத்திலும் பலா 617 கெக்ரெயர் விஸ்தீரணத்திலும் பப்பாசி 319.5 கெக்ரெயர் விஸ்தீரணத்திலும் திராட்சை 129 கெக்ரெயர் விஸ்தீரணத்திலும் செய்கை பண்ணப்படுகின்றன. இவற்றை விட கொய்யா, தோடை, அன்னாசி, நெல்லி, கொடித்தோடை, மர முந்திரிகை என்பனவும் குறிப்பிடத்தக்க அளவு விஸ்தீரணத்தில் செய்கை பண்ணப்படுகின்றன. எதிர்வரும் சிறுபோகத்தில் எதிர்நோக்கப்படும் வரட்சியால் பழப்பயிர்களும் பாதிக்கப்படக்கூடிய நிலை காணப்படுகின்றது.

பழப்பயிர்களை வரட்சியிலிருந்து பாதுகாத்து உற்பத்தியைப் பெறுவதற்காக கீழ் குறிப்பிட்ட தொழில்நுட்பங்களை விவசாயிகள் பயன்படுத்த முடியும்.

★ பழமரங்களின் அடிகளைச் சுற்றி கிளிசிறிடியா மற்றும் கிடைக்ககூடிய இலை குலைகளைக் கொண்டு மூடுபடை அமைக்கலாம்.

-பப்பாசி, வாழை, அன்னாசி ஆகிய பயிர்களிற்கு வைக்கோல், வாழைச்சருகு,காய்ந்த புற்களால் மூடுபடை இடுதல்.

★ எரு/கூட்டெரு/ஆட்டெரு போன்றவற்றை பழப்பயிர்களை சுற்றி இடுவதனால் மண் வளம் அதிகரிப்பதுடன் நீரிழப்பு தவிர்க்கப்படும்.

★ சொட்டு நீர்ப்பாசனம் செய்வதன் மூலம் வேர்த்தொகுதிக்கு மட்டும் நீரை வழங்குவதுடன் நீரையும் சேமிக்க முடியும்.

★பொட்டாசியம் பசளைகளைப் பாவிக்கவும்.

-வேர்களின் கலங்களில் பொட்டாசியத்தின் செறிவு அதிகரிப்பு நீரை மண்ணிலிருந்து கவர்ந்திழுக்க உதவுகிறது.

-விரைவான முதிர்வையும் தாவரத்தில் ஏற்படுத்துகின்றது.

-இலைவாய்களின் தொழிற்பாட்டை ஒழுங்குபடுத்தலால் ஆவியுயிர்ப்பின் ஊடான நீரிழப்பை குறைக்கலாம்

★பொசிவு நீர்ப்பாசனம்

“சூளையில் வைக்காத 1/2 பங்கிற்கு ஓயில் பெயின்ற் பூசிய மண் பானையின் வாய் மட்டும் வெளியில் தெரியுமாறு மரத்தினடியில் மண்ணில் புதைக்க வேண்டும்

“பருமன் கூடிய மரங்களிற்கு 2 பானைகள் பயன்படுத்தலாம்

“பானையினுள் நீரை விட்டு மூடி விடவேண்டும்.

“பானையிலுள்ள நுண் துளைகளினூடாக பொசியும் நீரைத் தாவரம் பயன்படுத்தும்.



பொசிவு நீர்ப்பாசனம் மூலம் பூசணிச் செய்கை


★போத்தல் நீர்ப்பாசனம்

“குளிர்பானங்களின் பிளாஸ்ரிக் போத்தல்களைப் பயன்படுத்தலாம்.

“போத்தலை நீரால் நிறைத்து சரிவாக வாய்ப்பக்கம் வேர்ப்பிரதேசத்தில் இருக்கக் கூடியவாறு புதைத்துவிடவும்.

“போத்தலில் உள்ளநீர் சிறிது சிறிதாக மண்ணின் வேர் வலயத்தில் பரவும்.

“இந் நீரைத் தாவரம் பயன்படுத்தும்.




போத்தல் நீர்ப்பாசனம் செய்யும் முறை

விவசாயிகளால் கைக்கொள்ளப்படும் மரபுரீதியான நீரிழப்பைத் தடைசெய்யும் முறைகள் உள்ளன. இவற்றில் வாழையின் முதிர்ச்சியடைந்த இலைகளை போலித்தண்டுடன் சேர்த்து கட்டி விடுவதன் மூலம் போலித் தண்டிலிருந்து நீர் இழக்கப்படுவதை தவிர்க்கலாம்.

**இலை மூலம் போசனை சத்துக்களை வழங்குதல்**

மண்ணில் போதியளவு ஈரப்பதன் இல்லாத நிலையில் திரவப்பசளை விசுறுவதே பயிருக்கு தேவையான போசனைகளை வழங்குவதற்குரிய ஒரே வழிமுறையாகும்.

★வுக்சால், பூம்பிளவர்

இலை மூலம் போசனை வழங்கக் கூடிய திரவப்பசளைகளைப் பயிருக்கு விசுறுவதன் மூலம் பசளைப்பாவனைக்கெனப் பயன்படுத்தப்படும் நீரினளவைக் குறைத்துக் கொள்ளமுடியும்.

★கே பிளஸ்

பூத்தலுக்கு உதவும்.

பழப்பயிர்களின் பூத்தலைத் தூண்டும்.

பழத்தின் பருமனையும் நிறத்தையும் அதிகரிக்கும்.

★சேவ் பிளஸ்

இலை மேற்பரப்பினுாடான ஆவியுயிர்ப்பைக் குறைக்கும்.

★கிறீன் கெயார்

பயிர்களின் வீரியமான வளர்ச்சிக்கு உதவும்.

நோய்க்கு சகிப்புத் தன்மையை ஏற்படுத்தும்.

**மரக்கறிப் பயிர்களைக் கிடைக்கும் நீரைச் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்தி விளைவைப் பெறக்கூடிய தொழில்நுட்பங்கள்**

**1. சேதனப்பசளையிடல**

கூட்டெரு, மாட்டெரு, பசுந்தாட்பசளை, மண்புழுஉரம், உயிர்க்கரி இட்டு பயிர்செய்வதன் மூலம் மண்ணில் சேதனப்பொருட்களின் அளவு அதிகரித்து ஈரப்பதனை பற்றிப்பிடித்து வைத்திருக்கும் திறன் அதிகரிக்கும். இதனால் நீர்ப்பாசன நீரின் அளவை குறைக்கவும் நீர்ப்பாசன இடைவெளியின் அளவை கூட்டவும்முடியும்.

**2.உயிர்க்கரிப் பாவனை**

உயிர்க்கரியினை கீழ்வரும் முறை மூலம் தயாரிக்கலாம்.

★சிறிய பரல் ஒன்றை எடுத்து அதனுள் துண்டுகளாக்கப்பட்ட கிளிசீரிடியாமற்றும் கிடைக்கக் கூடிய மரத்துண்டுகளை ஒழுங்காக அடுக்கி தகரத்தட்டினால் மூடவும்.

★சிறிய பரலின் தட்டினால் மூடியபகுதி கீழ்ப்பக்கமாக இருக்குமாறு தலைகீழாக வைக்கவும்.

★இரு பக்கமும் திறந்த நிலையிலுள்ள பெரிய பரல் ஒன்றை எடுக்கவும்.

★சிறிய பரல் உள்ளே இருக்கும் வகையில் பெரிய பரலை நிலைப்படுத்தவும்.

★பெரிய பரலுக்கும் சிறிய பரலுக்கும் இடையில் விறகுகளை இடவும்.

★பெரிய பரலின் கீழ்ப்புறமாக வுள்ள துவாரங்களின் ஊடாக நெருப்பு மூட்டவும்.

★1-1.5மணித்தியாலம் வரை எரிக்கவும்.

★பெரிய பரலை அகற்றி சிறிய பரலை எடுத்து எரிந்த கரித்துண்டுகளை வெளியில் கொட்டி நீர் தெளித்து ஆறியபின் சிறு துண்டுகளாக்கி மண்ணுடன் இட்டு கலந்து விடவும்.

உயிர்க்கரியில் உள்ள சிறுதுளைகள் நீரைப் பற்றி வைப்பதுடன் வளியையும் உயர்ந்தஅளவில் பற்றிவைத்திருக்கும். எனவே நீர்ப்பாசன இடைவெளியைக் கூட்டி நீரைமீதப்படுத்தமுடியும். போசனைகளையும் பிடித்து வைத்துப் பயிருக்குமெதுவாக வழங்கிக் கொண்டிருக்கும். மண் வளத்தையும் அதிகரிக்கச் செய்யும்.

கட்மியம், ஆசனிக் போன்ற நச்சுத்தன்மையான உலோகங்களை அகத்துறிஞ்சுவதனால் மண்ணில் உள்ள நச்சுத்தன்மை குறையும்.

**3. விதைகளை ஊறவைத்து நடல**

பாகல், புடோல் போன்ற தடித்த வித்துறை கொண்ட விதைகளை 12 மணித்தியாலம் ஊறவிட்டு நடுவதன் மூலம் விதை முளைப்பதற்கு பாவிக்கப்படும் நீரினளவை மீதப்படுத்த முடியும்.

**4.கொட்டுக்களில் நாற்றுக்களை உற்பத்தி செய்தல்**

மரக்கறி நாற்றுக்களை கொட்டுக்களில் (சிறிய பொதிகளில்) உற்பத்தி செய்து நடுகை செய்யும் பொழுது வீரியமான பயிர்களை உருவாக்குவதுடன் நீரும் வினைத்திறனாக பயன்படுத்தப்படுகிறது.

**5. பத்திரக்கலவை இடுதல் அல்லது மூடுபடை இடுதல**

★நடுகை இடைவெளி கூடிய பயிர்களான பாகல்,கத்தரி, வெண்டி போன்ற பயிர்களிடையே கிளிசிறீடியா, வேப்பமிலை, பூவரசு, நாவல், பனையோலை, வாழைச்சருகு, வைக்கோல், காய்ந்த புற்கள் மற்றும் பயிர் மீதிகளைக் கொண்டு பயிர்களிடையே பொருத்தமான முறையில் மூடுபடைகளை இடுவதன் மூலம் நிலத்திலிருந்து ஆவியாகி இழக்கப்படும் நீரினளவை குறைக்க முடியும். நீர்ப்பாசன இடைவெளியை கூட்டி பாசனம் செய்யமுடியும். மூடுபடைகள் உக்கி மண்ணிற்கு சேதனப்பொருட்கள் சேர்வதனால் மண் வளத்தை அதிகரிக்க முடியும்.

**6. கொள்கலன்களில் பயிர் செய்தல**

கொள்கலன்களில் பயிர்ச் செய்கை முறையானது வீட்டுத் தோட்டங்களில் மரக்கறிப்பயிர்களை செய்கை பண்ணுவதற்கு உகந்த முறையாகும். தினமும் எம்மால் பாவிக்கப்படும் அரிசிப் பைகளை இதற்கு பாவிக்க முடியும். மாட்டெரு அல்லதுகூட்டெரு, மேல்மண் என்பவற்றை 1:1 என்ற வீதத்தில் கலந்து இக்கலவையால் கொள்கலன்களைநிரப்பவும். இக் கொள்கலன்களில் மரக்கறிப் பயிர்களின் நாற்றுக்களை நாட்டி பராமரிப்பதன் மூலம் பயிருக்கு மட்டும் நீர் வழங்கப்படும். இதனால் நீர்ப்பாசனத்தால் இழக்கப்படும் நீரை மீதப்படுத்தலாம்.

**7.தென்னம்பொச்சுக்களை இட்டு பயிர்செய்தல**


மணல் பாங்கான இடங்களில் கத்தரி,தக்காளி, வெண்டி போன்ற பயிர்களை நட முன் 1"X1'ஆழ நடுகைக் குழிகளைத் தயாரிக்கவும். அடியில் இரு தென்னம் பொச்சுக்களை பொச்சு மேற்புறமாக இருக்குமாறு ஒழுங்குபடுத்தவும்.

அதன்மேல் குழி எரு இட்டு மேல் மண்ணால் மூடி நாற்றுக்களை நடலாம். தென்னம்பொச்சுக்கள் ஊடுவடிதலால் இழக்கப்படும் நீரைப் பிடித்துவைத்திருந்து பயிருக்கு வழங்கும்.(தொடரும்)

சி.சிவகுமார்
மாகாண விவசாயப் பணிப்பாளர்
வடமாகாணம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்தியாவைத் தீர்மானிக்கும் 25 பேர்!



நுங்ரா, காலாகாலி, மாராமாரி, கந்தாகோல், விஷம் - இந்த ஐந்தும் வங்காளி வார்த்தைகள். இந்தியாவின் அரசியலை, தேர்தல்களை ஆய்வு செய்ய வந்த நோர்வே மானுடவியல் ஆய்வாளர் ஒருவர் மேற்கு வங்கக் கிராமத்துக்குப் போனபோது, ஒரு கிராமவாசி இந்த ஐந்து வார்த்தைகளையும் சொல்லியிருக்கிறார்.

"அரசியல் என்றாலே அழுக்கு (நுங்ரா), அரசியல்வாதிகள் தவறுகளை ஊக்குவிப்பவர்கள் (காலாகாலி), தேவை இல்லாமல் சண்டை போடுபவர்கள் (மாராமாரி), பிரச்சினைகளை வளர்ப்பவர்கள் (கந்தாகோல்). மொத்தத்தில் அவர்கள் சமூகத்தின "விஷம்' போன்றவர்கள்' என்றாராம் அந்தக் கிராமவாசி.

அரசியல் எவ்வளவு கீழானதாக மாறிப் போனாலும், தேர்தல்தான் ஜனநாயகத்துக்கு உயிர் செலுத்தும். அம்பானிக்கும் ஒரே ஓட்டு. அய்யாசாமிக்கும் ஒரே ஓட்டு. வாக்குச் சாவடிக்கு வெளியே இவர்கள் வாழ்க்கை எப்படி இருந்தாலும், ஓட்டின் மரியாதை ஒன்றுதான். அதனால்தான் அதிகார மமதை கொண்டவர்கள்கூட சந்து பொந்துகளுக்கு வந்து வாக்குப் பிச்சை கேட்கிறார்கள்.

இந்தியா எனப்படும் பரந்த பரப்பில், சமீப "தெலுங்கானா'வையும் சேர்த்து 29 மாநிலங்கள். ஆனால், 543 உறுப்பினர்கள் கொண்ட இந்திய நாடாளுமன்றத்தை ஆறு பெரியண்ணன்கள்தான் ஆட்சி செலுத்துகிறார்கள்.

**ஆறு பெரியண்ணன்கள்!**

பிரதமர்களை தனது உதிரத்தில் உற்பத்தி செய்யும் பிரதேசம், உத்தரப்பிரதேசம்.

80 எம்.பி-க்கள் இந்த மாநிலத்தில். இதை மொத்தமாகக் கைப்பற்றித்தான் காங்கிரஸ் உயிர் வாழ்ந்தது. முலாயம் சிங், மாயாவதி வந்த பிறகுதான் அதில் மண் விழுந்தது. இப்போது அமித்ஷா ஆபரேஷன்களில் கதிகலங்கி... 52 தொகுதிகளை பா.ஜ.க. பிடிக்கும் என எல்லா கருத்துக் கணிப்புகளும் சொல்கின்றன. அதனால்தான் குஜராத் மோடி, இங்குள்ள் வாரணாசியில் பிடிவாதமாக நிற்கிறார். உ.பி. ராசி, பிரதமர் ஆக்கும் என்ற நம்பிக்கையில், ராகுலும் இங்குதான் போட்டியிடுகிறார்.

உ.பி. (80), மகாராஷ்டிரா (48), ஆந்திரா (42), மேற்கு வங்கம் (42), பீகார் (40), தமிழ்நாடு (39)... ஆகிய 6 மாநிலங்களில் உள்ள தொகுதிகளைக் கூட்டிப் பார்த்தால், 291 எம்.பி-க்கள். மொதத இந்தியா அளிக்கும் எம்.பி-க்களில் இது சரிபாதியைவிட அதிகம். இந்த ஆறு மாநிலங்களில் ஒரு தேசியக் கட்சி, ஒழுங்காகக் கட்சி நடத்தினாலே போதும்... மத்தியில் ஆட்சியைப் பிடித்துவிடலாம்!

முலாயம், மாயாவதி, காங்கிரஸ், பா.ஜ.க. என நான்கு முனைப் போட்டி உ.பி-யில். இதில் காங்கிரஸ் பின்தங்கியே இருக்கிறது. மற்ற இருவரையும் மோடி, முந்திக்கொண்டு இருக்கிறார். மகாராஷ்டிராவில் காங்கிரஸ்"டன் சரத்பவாரின் தேசியவாத காங்கிரஸ் கூட்டு. பா.ஜ.க-வுடன் சிவசேனா கூட்டு. பால் தாக்கரே மகன் உத்தவ் தாக்கரேவும், மருமகன் ராஜ் தாக்கரேவும் தனித்தனிக் கட்சிகள் நடத்தினாலும் பா.ஜ.க-வை ஆதரிப்பதில் ஒற்றுமையாக இருக்கிறார்கள். ஆக, யார வென்றாலும் லாபம் பா.ஜ.க-வுக்குத்தான்.

மேற்கு வங்கத்தில் காங்கிரஸ்"ம் பா.ஜ.க-வும் பின்தங்கியே இருக்கின்றன. அங்கே திரிணாமுல் காங்கிரஸ் மம்தாவுக்கும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் மட்டுமே போட்டி. மம்தாவுடன் கூட்டுச்சேர மோடி நினைத்தார். ஆனால், சிறுபான்மையினர் வாக்கு போய்விடும் என்பதால் மம்தா மறுத்தார். ஆனாலும் இவரை மோடி விமர்சிக்கவில்லை. சகோதர சகோதரிகளாகவே பாவித்துக்கொள்கிறார்கள். ஏற்கனவே பா.ஜ.க. கூட்டணியில் மம்தா இருந்தவர் என்பதாலும், அவர் காங்கிரஸ்"டன் சேர மாட்டார் என்ற நம்பிக்கையிலும் மோடி இருக்கிறார்.

பீகார் மாநிலத்தில், லாலுவுடன் கூட்டு சேர்ந்து போராடுகிறது காங்கிரஸ். 11 சீட்டை அவரிடம் இருந்து வாங்குவதற்குள், "போதும் போதும்' என்றாகிவிட்டது காங்கிரஸ்"க்கு. இனி ஜெயிக்க வேறு வேண்டும். லாலுவும் நிதிஷ்குமாரும் மாறி மாறி ஆண்டு வரும் மாநிலம் பீகார். பா.ஜ.க. கூட்டணியில் இருந்த நிதிஷ்குமார், மோடியைப் பிடிக்காமல் கூட்டணிய்யவிட்டு விலகினார். காங்கிரஸ் தன்னைக் கடத்திச் செல்லும் என்று நினைத்தார். ஆனால், அவரது எதிரியான லாலுவோடு அவர்கள் சேர்ந்துவிட்டார்கள். மோடியாவது தன்னைச் சமாதானம் செய்வார் என்று நினைத்தார். அதுவும் நடக்கவில்லை. "மோடி, பிரதமர் ஆக முடியாது. ஜனாதிபதி மாளிகை படத்துக்கு முன்னால் வேண்டுமானால் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்ளலாம்' என்று நிதிஷ் பிரசாரம் செய்து வருகிறார்.

அங்கு லாலு, நிதிஷை விட்டால் யார் இருக்கிறார்கள் என்று தேடிய மோடி, பஸ்வானைப் பிடித்தார். ஒருகாலத்தில் நிதிஷ் விசுவாசியாக இருந்து, இன்று மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் தலைவராக இருக்கும் உபேந்திர குஷ்வஹாவையும் சேர்த்துக்கொண்டார். பீகாரில் ஒரு மோடி இருக்கிறார். அவர் பெயர் சுசில் குமார் மோடி. அவர்தான் இந்த வேலைகள் அனைத்தையும் பார்க்கிறார்.

ஆந்திராவை தெலுங்கானா, சீமாந்திரா என இரண்டாகப் பிரித்து, தன் தலையில் தானே மண் அள்ளிப் போட்டுக்கொண்டது காங்கிரஸ். தங்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றிய காங்கிரஸை, தெலுங்கானா மக்கள் ஆதரிப்பார்கள் என்று ராகுல் நினைக்கிறார். ஆனால், இதற்காகத் தொடர்ச்சியாகப் போராடிய "தெலுங்கானா ராஷ்ட்ரீய சமீதி' சந்திரசேகர ராவ் அந்த வாக்குகளை அள்ளிக்கொள்வார். இவரை காங்கிரஸ்"டன் இணைக்க முயற்சித்தார்கள். முடியவில்லை என்றதும் அவரோடு இருந்த நடிகை விஜயசாந்தியை இழுத்துப் போய்விட்டது காங்கிரஸ். பா.ஜ.க., சாமர்த்தியமாக இரண்டு மாநிலங்களிலும் செல்வாக்குக்கொண்ட சந்திரபாபு நாயுடுவின் தெலுங்கு தேசத்துடன் கூட்டணி வைத்துக்கொண்டது. ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் தலைவர் ஜெகன்மோகன் ரெட்டி தனியாக நிற்கிறார். இவர் வென்றாலும் காங்கிரஸை ஆதரிக்க மாட்டார் என்பது இவர்களது திருப்தி.

தமிழ்நாட்டின் கதை அனைவரும் அறிந்ததுதான். ஜெயலலிதா, கருணாநிதியின் ஆளுகையில் மாறி மாறி இருக்கும் தீவு இது. இங்கு காங்கிரஸ் தனித்து விடப்பட்டுள்ளது. தே.மு.தி.க., பா.ம.க., ம.தி.மு.க. ஆகிய கட்சிகளோடு கூட்டுச் சேர்ந்துள்ளது பா.ஜ.க.. தங்களுக்கு எத்தனை தொகுதிகள் கிடைக்கும் என்பதைவிட தங்கள் எதிரியான காங்கிரஸ்"க்கு எந்தத் தொகுதியும் கிடைக்காது என்ற சந்தோஷம் அவர்களுக்கு. ஜெயலலிதா, கருணாநிதி யார் வென்றாலும் தங்களை ஆதரிப்பார்கள் என்ற நம்பிக்கை வேறு!

இப்படி 29 சதவிகித எம்.பி-க்கள் கொண்ட இந்த ஆறு மாநிலங்களில் இருந்து காங்கிரஸ்"ம் பா.ஜ.க-வும் எத்தனை இடங்களைப் பிடிப்பார்கள் என்பதே முக்கியம். உ.பி, மகாராஷ்டிரா, ஆந்திரா... மூன்றை பா.ஜ.க.-வும், உ.பி., பீகார், மகாராஷ்டிரா ஆகிய மூன்றை காங்கிரஸ்"ம் மலை போல நம்பி இருக்கின்றன. மேற்கு வங்கத்தை இருவருமே மறந்துவிட்டார்கள். தமிழ்நாட்டை காங்கிரஸ் நினைப்பதே இல்லை!

**ஆறு சின்னண்ணன்கள்!**

அந்த ஆறு பெரிய அண்ணன்களுக்கு அடுத்த சின்ன அண்ணன்கள் ஆறு பேர். ஆட்சிக் கட்டிலை எட்டிப் பிடிக்கப் போகிறவர்களின் காலைப் பிடித்துத் தூக்கிவிட வேண்டிய மாநிலங்கள் மத்தியப்பிரதேசம் (29), கர்நாடகம் (28), குஜராத் (26), ராஜஸ்தான் (25), ஒடிசா (21), கேரளா (20) ஆகியவை.

அடுத்து பா.ஜ.க. ஆட்சிதான் என்று அந்தக் கட்சியின் தலைவர்கள் சொல்வது, மத்தியப்பிரதேசம், கர்நாடகம், குஜராத், ராஜஸ்தான் ஆகிய நான்கு மாநிலங்களை [illegible]. இதில் கர்நாடகம் நீங்கலாக மற்ற மூன்றிலும் பா.ஜ.க. ஆட்சி நடக்கிறது. கர்நாடகாவில் கட்சியை இரண்டாக உடைத்த எடியூரப்பா மீண்டும் உள்ளே வந்துவிட்டார்.

எடியூரப்பா உள்ளே வருவார் என்று கர்நாடகா காங்கிரஸ் எதிர்பார்க்கவில்லை. குஜராத்தில் மோடிக்கு எதிராக இப்போதுதான் "விகாஸ் கோஜ்' பாத யாத்திரையைத் தொடங்கியுள்ளது அந்த மாநில காங்கிரஸ். ஆதித்திய ராஜே சிந்தியாவை மட்டுமே மத்தியப்பிரதேச காங்கிரஸ் நம்புகிறது. பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகளில் ராஜஸ்தான் காங்கிரஸ் அரசு சமீபத்தில்தான் தோற்கடிக்கப்பட்டது. எனவே, இந்த மாநிலங்களில் மூச்சுத் திணறுகிறது காங்கிரஸ்.

இந்தப் பட்டியலில் காங்கிரஸ்"க்கு நம்பிக்கை தருவது கேரளா மட்டும்தான். மார்க்சிஸ்ட்டும் காங்கிரஸ்"ம் மாறி மாறி ஆட்சியைப் பிடிக்கும் மாநிலம் இது. அடுத்த பெரிய கட்சியான இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆதரவும் காங்கிரஸ்"க்கு இருக்கிறது. எனவே, தெம்போடு இருக்கிறது காங்கிரஸ். இங்கு பா.ஜ.க. இல்லை என்பது காங்கிரஸ்"க்குக் கூடுதல் மகிழ்ச்சி. மாதா அமிர்தானந்த மயி பிறந்த நாளில் கலந்துகொண்டு எப்படியாவது அங்கும் அக்கவுன்ட் திறந்துவிடப் பார்க்கிறது பா.ஜ.க..

ஒடிசாவைப் பொறுத்தவரை அங்கு எப்போதும் பட்நாயக் ஆட்சிதான். பிஜு பட்நாயக் மகன் நவீன் பட்நாயக்தான் எப்போதும் வெல்வார். காங்கிரஸ், பா.ஜ.க. அல்லாத மூன்றாவது அணியின் பலம் இவர்.

இந்த ஆறு மாநிலங்களின் மொத்த தொகுதிகள் 149.

**ஆபத்பாந்தவன்கள்!**

ஐந்தாறு சீட்டுகளில் ஆட்சி ஊசலாடும்போது, காப்பாற்றும் மாநிலங்கள் என்று இவற்றைச் சொல்லலாம்.

அசாம் (14), ஜார்கண்ட் (14), பஞ்சாப் (13), சட்டீஸ்கர் (11), ஹரியானா (10), டெல்லியும் ஜம்மு-காஷ்மீரும் தலா 7 என மொத்தம் 76 தொகுதிகள் இந்தச் சிறுபான்மைக் கணக்குக்கு!

டெல்லியை பா.ஜ.க-வும் ஆம் ஆத்மியும் பங்கு போட்டுக்கொள்ளும். காங்கிரஸைக் காப்பாற்றும் தேசிய மாநாட்டுக் கட்சி, ஜம்மு- காஷ்மீரில் இருக்கிறது. பா.ஜ.க-வைக் காப்பாற்றும் சிரோன்மணி அகாலிதளம் பஞ்சாபில் இருக்கிறது. இரண்டுக்குள்ளும் வராத பிரபுல்ல குமார் மகந்தாவின் அசாம் கன பரிஷத், அசாமில் வேர் கொண்டுள்ளது. சிபு சோரனின் ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா, காங்கிரஸை ஆதரிக்கலாம். ஹரியானாவில் இப்போது காங்கிரஸ் ஆட்சியில் இருந்தாலும் ஓம்பிரகாஷ் சௌதாலாவின் ஹரியானா ஜனதி காங்கிரஸ் கட்சிக்கு மிரட்டல் விடுத்துக் கொண்டே இருக்கும். சட்டீஸ்கரில் தொடர்ந்து பா.ஜ.க. ஆட்சி!

இவை போக உத்தரகாண்ட் முதல் புதுச்சேரி வரையுள்ள 16 குட்டி மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் இருந்து மொத்தமே 27 எம்.பி-க்கள்தான் தேர்வு செய்யப்படுவார்கள். ஆக, இந்தக் கணக்கின்படி வரும் 543-இல் 272-ஐ இழுப்பதுதான் இந்தியத் தேர்தல். இதில் 272 ... என்று இலக்கு அறிவித்துள்ளார் ராஜ்நாத் சிங். அதை நம்புகிறார் நரேந்திர மோடி. ஆனால், ராகுல் எதையும் சொல்லிக் கொள்ளவில்லை.

-இணையம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய கிழக்கில் பரவிவரும் வைரஸ் தொற்றுநோய்

## அங்கு செல்வோருக்கு விழிப்புணர்வு

மத்திய கிழக்கு நாடுகளில் பரவிவரும் சுவாசம் தொடர்பான வைரஸ் தொற்று நோயால் இலங்கையர் எவரும் இதுவரை பாதிக்கப்பட வில்லை. எனினும், நோய் தொற்றிலிருந்து இலங்கையரைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை எடுத்திருப்பதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பேச்சாளர் மங்கள ரந்தெனிய தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து இலங்கை வந்தவர்கள் எவருக்காவது இரண்டு கிழமைகளுக்குள் சுவாசிப்பதில் சிரமம் அல்லது சளித்தொல்லை தென்பட்டால் உடனடியாக வைத்தியசாலையை நாடுமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகளில் பரவிவரும் சுவாச நோயானது சன நெரிசல் நிறைந்த பகுதிகளிலேயே கூடுதலாகத் தொற்றிவருகிறது.

எனவே, மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் இலங்கையர்களுக்கு சுகாதார அமைச்சுடன் இணைந்து விழிப்புணர்வு நடவடிக்கைகளை ஆரம்பித்திருப்பதாகவும், ஏற்கனவே மத்திய கிழக்கு நாடுகளில் இருக்கும் இலங்கையர்களுக்கு அங்குள்ள தூதரகத்தின் ஊடாக இந்த விழப்புணர்வு நடவடிககைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார். கடந்த ஒன்றரை வருடமாக மத்திய கிழக்கு நாடுகளில் பரவியுள்ள இந்த வைரஸ் நோய் தொடர்பாக மத்திய கிழக்கு நாடுகளுக்கு புறப்பட்டுச் செல்வதற்கு முன்னதாக வழுங்கப்படும் பயிற்சி நிலையங்களில் சுகாதார அதிகாரிகள் இணைந்து அவர்களைத் தெளிவு படுததும் செயற்பாடுகளும் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

குறித்த தொற்றுநோய் தொடர் பல்விமான நிலைய அதிகாரிகள் அவதானமாக வைக்கப்பட்டிருப்பதாகவும் வெளிநாட்டு வேலைவாய்பபுப் பணியகம் மேலும் தெரிவித்தது. (2)



திருநெல்வேலி முத்துத் தம்பி மகா வித்தியாலய மாணவர்கள் அண்மையில் கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு தென்பகுதிக்குச் சென்றிருந்த போது....

# தனி பொலிஸ் பிரிவு உருவாக்கி கண்காணிப்பது நகைப்பிற்குரியது

மத செயற்பாடுகள் குறித்த பொலிஸ் பிரிவு நிறுவப்பட்டதனை ஓர் நகைச் சுவையாகவே நோக்கி வருவதாக ஜே.வி.பி கட்சி தெரிவித்துள்ளது.

ஒரு புறத்தில் அரசாங்கம் உத்தியோகப் பற்றற்ற பொலிஸாருக்கு அதிகாரங்களையும் அனுசரணையையும் வழங்கி வருகின்றது என ஜே.வி.பி பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாகவே உயர் பொலிஸ் அதிகாரிகள் வேடிக்கை பார்க்கும் போதே உத்தியோகப் பற்றற்ற பொலிஸார் சண்டித்தனம் காட்டுகின்றனர்.

கடந்த காலங்களில் இவ்வாறான பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இவ்வாறு குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை.

இந்த நிலையில் தனியான பொலிஸ் பிரிவு உருவாக்கி மத செயற்பாடுகளை கண்காணிப்பது நகைப்பிற்குரியது.

ஏழு பேரைக் கொண்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் அடங்கிய குழுவினால் என்ன செய்ய முடியும்.

பெக்ஸ்களையும் முறைப்பாடுகளையும் திரட்டிக் கொள்ள முடியும்.

குற்றச் செயல்கள் இடம்பெறும் போது பொலிஸ் பிரிவுகளை உருவாக்குவதா அரசாங்கத்தின் அணுகு முறை என அவர் கேள்வி எழுப்பியுள்ளார். இந்த நடவடிக்கை பிரச்சினைகளுக்கு தீர்வாகாது என அவர் தெரிவித்துள்ளார். (2)

# சனத்தொகை அதிகரிப்பிற்கேற்ப மதத்தலங்களை உருவாக்க முடியும்

நாடளாவிய ரீதியில் போதிய ளவு வணக்கஸ்தலங்கள் இருக்கின்ற போதிலும் சனத்தொகையின் அதிகரிப்புக்கு ஏற்ப வணக்கஸ் தலங்களை உருவாக்க முடியும். எனினும், தமது அமைச்சின் ஊடாக உரிய முறையில் அனுமதி பெற்றுக் கொள்ளவேண்டும் என்று புத்தசாசன மற்றும் மதவிவகார அமைச்சின் செயலாளர் எம்.கே. பி.திசாநாயக்க தெரிவித்தார்.

இதுதொடர்பில் சுற்றுநிருபமொன்று வெளியிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், எதிர்காலங்களில் அவற்றில் கூறப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு அமைவாக செயற்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

சமய செயற்பாடுகள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரித்து நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு உருவாக்கப்பட்டுள்ள விசேட பொலிஸ் பிரிவின் அங்குரார்ப்பண நிகழ்வின்போது இடம்பெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், இந்த நாட்டில் சமய நல்லிணக்கம் இல்லையென்று எவரும் கூறமுடியாது. மாறாக சிற்சில முரண்பாடுகளே காணப்படுகின்றன. எமது நாட்டில் சுமார் 20 ஆயிரம் வணக்கஸ்தலங்கள் உள்ளன. இவற்றில் 10 ஆயிரம் பௌத்த விகாரைகளும், 5 ஆயிரம் இந்துக் கோவில்களும், 2 ஆயிரத்து 500 கிறிஸ்தவ தேவாலயங்களும், 2 ஆயிரத்து 500 பள்ளி வாசல்களும் உள்ளன.

இவை போதுமானது என்பதே எனது பொதுவான கருத்தாகும். எனினும், குடியிருப்புக்கள் மற்றும் குடிப்பரம்பல்கள் அதிகரிக்கும் பட்சத்தில் அவற்றுக்கு ஏற்ற வகையில் புதிதாக வணக்கஸ்தலங்களை உருவாக்க வேண்டி ஏற்படலாம். இது சாதாரண ஒரு விடயமாகும் என்றாலும், அவற்றை சட்ட விதிமுறைகளுக்கு அமைய செய்து கொள்வதே ஏனையவர்களுடன் முரண்பாடுகள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியும் என்றார். (2)

## கற்கை நெறியை நிறுத்துவோம்

(கொழும்பு)

இணைந்த சுகாதார கற்கை நெறியைச் சேர்ந்த சகல மாணவர்களும் எதிர் வரும் மே மாதம் 5 ஆம் திகதி விரிவுரைகளுக்குச் சமுகமளிக்கா விட்டால் இணைந்த சுகாதாரக் கற்கை நெறியை நிறுத்தி விட நடவடிக்கை எடுப்பதாக பேராதனைப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அத்துல சேனாரத்ன அறிவித்துள்ளார்.

கடந்த இரு மாதத்திற்கும் மேலாக நாடளாவிய ரீதியில் இணைந்த சுகாதாரக் கற்கை நெறியை மேற்கொள்ளும் பல்கலைக்கழக மாணவர்கள் உண்ணாவிரத போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.

ஏற்கனவே நான்கு வருடமாக இருந்த தமது கற்கை நெறி மூன்று வருடங்களாகக் குறைக்கப்பட்டுள்ளதாகக் கூறி அவர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். தமது பட்டப் படிப்புக் காலத்தை நான்காண்டுகளாக தொடர்ந்து நடத்த வேண்டும் என்று மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2)

# இன்று ஒரு தகவல்

## ஞானிகள்

ஒருவர் தனியாக ஓரிடத்தில் கண்ணை மூடிக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார். அவர் தூங்கிக் கொண்டிருக்கிறாரா... தியானம் செய்து கொண்டிருக்கிறாரா... என்பதை எப்படிக் கண்டு பிடிப்பது?

நமக்குத் தெரிந்த வரையில் தூக்கம் என்றால் தலை அடிக்கடி சாயும். பின் நிமிரும். தியானம் என்றால் ஆடாமல் அசையாமல் அப்படியே இருக்கும்.

தூக்கத்திற்கும் தியானத்திற்கும் அதிக வித்தியாசம் உண்டு. ஒரு முட்டாள் தூங்கப் போனால் முட்டாளாகவே திரும்பி வருகிறான். அதே முட்டாள் தியானம் செய்தால் ஞானியாகத் திரும்பி வருகிறான். அது இருக்கட்டும்... ஞானிகளுக்கும் நமக்கும் என்ன வித்தியாசம்?

இப்பொழுது நாம் ஒரு அழகான ரோஜாப்பூவைப் பார்க்கிறோம். "ஆகா! இது எவ்வளவு அழகாக இருக்கிறது" என்று வியக்கிறோம். ஒரு ஞானி அதே ரோஜாப் பூவைப் பார்க்கிறார். அவரும் ஆகா இது எவ்வளவு அழகாக இருக்கிறது என்று நினைக்கிறார். உலகப் பொருட்களை நாம் எப்படி ஐம்புலன்கள் மூலமாக உணர்கிறோமோ அப்படித்தான் அவர்களும் உணர்கிறார்கள். அதில் ஒன்றும் வித்தியாசமில்லை.

அல்வா சாப்பிடுகிறோம். அது நமக்கு மட்டும் தான் இனிக்கும். ஞானிகளுக்கெல்லாம் கசக்கும் என்றா சொல்வோம்? அப்படியில்லை. அவர்களுக்கும் அதே நிலைமை தான்.

அப்படியானால் ஞானிகளுக்கும் நமக்கும் என்னதான் வித்தியாசம்? அந்த வேறுபாடு எந்தக் கட்டத்தில் ஆரம்பமாகிறது? அதை இப்பொழுது பார்ப்போம். இப்பொழுது மறுபடியும் அந்த ரோஜாப்பூவின் பக்கம் போவோம். ஞானி அதைப் பார்க்கிறார்.

ஆகா! எவ்வளவு அழகாக இருக்கிறது! என்று நினைக்கிறார். அதன் பின் அதையே நினைப்பதில்லை. வேறு வேலை பார்க்கப் போய் விடுவார். அல்லது இயற்கையின் ஆற்றலைப் பற்றி நினைக்க ஆரம்பித்து விடுவார். அவ்வளவு தான்! ஆனால் நாம் அப்படிச் செய்ய மாட்டோம். நாம் என்ன செய்வோம் தெரியுமா? முதலில் அந்த ரோஜாப் பூவைப் பார்ப்போம். ஆகா! எவ்வளவு அழகாக இருக்கிறது என்று நினைப்போம். அந்த அழகை ரசிப்போம். அதன்பின் அந்த மலர் நமக்கு வேண்டும் என்று நினைப்போம்.

அதற்கு அடுத்த கட்டம்... அந்த மலர் இல்லையென்றால் நம்மால் வாழ முடியாது என்ற நிலைமைக்கு வந்து விடுவோம்! உடனே அந்த மலரை அடைவதற்கு முயற்சி செய்வோம்!

அதற்கு யாராவது தடையாக இருந்தால் அவர்கள் மேல் நமக்குக் கோபம் வரும். அந்தக் கோபத்தின் காரணமாக நமது விவேக புத்தியை இழப்போம்! யாரிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை மறந்து விடுவோம்.

அதன் காரணமாக ஞாபக மறதி ஏற்படும். அதாவது முன்பு விவேக புத்தி மழுங்கியிருந்தால் அது இப்பொழுது அடியோடு இல்லை என்ற நிலை ஏற்படும்.

அதன் காரணமாக நம் புத்தியை இழப்போம். கடைசியில் அழிவோம். இந்த நிலைமை நமக்கு வந்து விடக் கூடாது என்றால் அதற்கு என்ன செய்ய வேண்டும்? நமக்கு கெடுதல் செய்யக் கூடிய ஆசைகளை ஆரம்பத்திலேயே கிள்ளி எறிந்து விடவேண்டும். ஒரு விடயம் தெரியுமா? எந்த ஆசைக்குமே முதலில் வலு கிடையாது.

அதைப்பற்றி நாம் நினைக்க நினைக்கத்தான் அதற்கு வலு உண்டாகிறது. இளம் தளிராக இருந்தது இப்பொழுது பெரிய மரமாகி விடுகிறது.

ஞானிகள் இந்தளவுக்கு அதை வளர விடுவதில்லை. அது தான் நமக்கும் அவர்களுக்கும் உள்ள வித்தியாசம். ஒரு இளைஞன் கையில் தடியொன்றை வைத்துக் கொண்டு நடந்து போய்க்கொண்டிருந்தான். அதே நேரம் வயதான ஒருவரும் ஒரு தடியை வைத்துக் கொண்டு நடந்து போகிறார். அது அவருக்கு ஊன்றுகோல். அது இல்லையெனில் அவரால் நடக்க முடியாது. அது தவறி கீழே விழுந்தால் அவரும் விழுந்து விடுவார்.

ஆனால் அந்த இளைஞன் அப்படியல்ல. அவனுடைய கைத்தடியை யாராவது எடுத்துக் கொண்டு போனால் கூட அவன் கவலைப்படமாட்டான். அவன் அந்தக் கைத்தடியைப் பயன்படுத்துவது போல் தான் ஞானிகள் உலகப் பொருட்களைப் பயன்படுத்துவார்கள்.

ஆனால் நம்மைப் போன்றவர்கள் அந்த வயதானவர்கள் கைத்தடியை பயன்படுத்துவது போல் உலகப் பொருட்களைப் பயன்படுத்துகிறோம். இதுதான் ஞானிகளுக்கும் நமக்கும் உள்ள வித்தியாசம். ஞானி என்பவர் பொருட்களைத் துறக்க மாட்டார். அதன் மீதுள்ள பற்றுதலைத்தான் துறப்பார். எனக்குத் தெரிந்த ஞானி ஒருவர் இருந்தார். அவர் சொன்னார்.

"1988 ஆம் ஆண்டு ஜுன் மாதம் முதலாம் திகதியை என்னால் மறக்க முடியாது" என்றார்.

"ஏன்" என்று கேட்டேன். "அதுதான் எனக்கு ஞானம் வந்த நாள்" என்றார். "அப்படியா?" என்றேன்.

"ஆமாம். அன்று தான் எனக்கு திருமணமானது என் மனைவி பெயர் ஞானம்!" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## த.தே.கூட்டமைப்பின் மே தின நிகழ்வுகள்

(பொற்பதி)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மே தின எழுச்சிப் பேரணி ஊர்வலம் இன்று வியாழக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி முருகன் கோவிலில் இருந்து ஆரம்பமாகி சாவகச்சேரி கலாசார மண்டபத்தை சென்ற டையவுள்ளது.

இவ்வூர்வலத்தில் தமிழ் தேசிய உணர்வு களை வெளிப்படுத்தும் உள்ளூராட்சி மன்றங் களின் அலங்கார ஊர்திகள், மக்களின் தலை வர்கள், தொழிற்துறை தலைவர்கள், மகளிர் மற்றும் பாடசாலை மாணவர்கள் என பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து சாவகச்சேரி கலா சார மண்டபத்தில் க.அருந்தவபாலன் தலை மையில் மே தின எழுச்சி பொதுக் கூட்டம் பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும்.

இக் கூட்டத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப் பின் பாராளுமன்ற பிரதிநிதிகள், மாகாண சபை முதலமைச்சர் மற்றும் பிரதிநிதிகள், உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள், பல்துறை தொழிற்சங்க பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டு சிறப்புரைகளை ஆற்றவுள்ளனர்.

இதன்போது மே தின பிரகடனமும் தீர் மானமும் வெளியிடப்படும்.

தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம் பெறும்.

அனைவரையும் அணி திரண்டு இவ் ஊர் வலத்திலும் பொதுக்கூட்டத்திலும் கலந்து கொள்ளுமாறு மே தின அமைப்பாளர் பாரா ளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா அழைப்பு விடுத்துள்ளார். (64)

## புகையிரதங்கள் மோதின; எழுபத்தைந்து பேர் படுகாயம்!



பொதுஹெர பிரதேசத்தில் இரு புகை யிரதங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகி 75 பேர் படுகாய மடைந்துள்ளதாக புகையிரதத் திணைக் களம் தெரிவித்துள்ளது.

வவுனியாவிலிருந்து மாத்தறை நோக்கி சென்ற புகையிரதம் பொதுஹெர புகை யிரத நிலையத்தில் நேற்றைய தினம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தபோது கொழு ம்பிலிருந்து வவுனியா நோக்கி பயணித்த அதிவேக புகையிரதம் மோதியுள்ளது.

இதன்போது புகையிரதப் பெட்டிகள் 20 அடி வரையில் வீசப்பட்டுள்ளன.

புகையிரதப் பெட்டிகள் இரண்டிற்கு சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் இரு எஞ் ஜின்களுக்கும் பெரும் சேதம் ஏற்பட் டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்தில் 75 பேர் வரையில் காயமடைந்த நிலையில் குருநாகல் வைத் தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதன் காரணமாக வடபகுதிக்கான புகையிரதச் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ள தாக புகையிரதக் கட்டுப்பாட்டறை தெரி வித்துள்ளது. சமிக்ஞை கோளாறு காரண மாக இந்த அனர்ததம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விபத்து தொடர்பில் ஆராய்வதற்காக விசேட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக புகையிரத பொது முகாமையாளர் பீ.ஏ.பீ ஆரியரத்ன குறிப்பிட்டார்.

இலங்கையில் இடம்பெற்ற பெரும் பாதிப்பு டைய புகையிரத விபத்து இது என போக்கு வரத்து அமைச்சர் குமார வெல்கம கூறி யுள்ளார். எவ்வாறாயினும் நேற்று காலை இடம்பெற்ற இந்த விபத்தின் காரணமாக 10 கோடி நட்டம் ஏற்பட்டுள்ளதாக புகை யிரத திணைக்கள தகவல்கள் தெரிவிக் கின்றன. காயமடைந்தவர்களில் ஐவரின நிலை கவலைக்கிடமாகவுள்ளதாக குருநாகல வைத்தியசாலைப் பேச்சாளர் தெரிவித்தார். (2)

# நல்லூர் கல்விக் கோட்டத்தின் தமிழ்த்தின போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கல்விக் கோட்டத்தின் தமிழ்த்தின போட்டி முடிவுகளை நல்லூர் கோட்டக்கல்வி பணிப்பாளர் அ.அகிலதாஸ் அறிவித்துள்ளார்.

இப் போட்டியில் முதல்மூன்று இடங்களை பெற்ற மாணவர்கள் விபரம் வருமாறு,

**பேச்சு**

பாலமுரளி சாளினி (யா/ஆனைப்பந்தி மெ.மி.த.க.பாடசாலை), டினோஸ் ஸாருணிகா (யா/இந்து ஆரம்ப பாடசாலை), சவேனா வசந்தகுமார் (யா/இந்து மகளிர் ஆரம்ப பாட சாலை).

**ஆக்கத்திறன் வெளிப்பாடு**

குகநாதன் டிரோசன் (யா/இந்து ஆரம்ப பாடசாலை), கம்சாயினி கிரிதரன் (யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), பிரவீனா முகுந் தன் (யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாட சாலை).

**வாசிப்பு**

ஆபிசா ராம்பாபு (யா/இந்து மகளிர் ஆர ம்ப பாடசாலை), இரத்தினசிங்கம் சுபாங்கினி (யா/இந்து ஆரம்ப பாடசாலை), சக்திகுணா ளன் (யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாட சாலை).

**பாவோதல்**

விஜயகுமார் நித்தியரூபசர்மா (யா/இந்து ஆரம்ப பாடசாலை), சோமியா தவராசா (யா/ சென்பெனடிக்ற் றோ.க.வித்தியாலயம்), கஜிதா உதயநாதன் (யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை).

**இசையும் அசைவும்**

ஜேகநாதன் அபிரா (யா/ஆனைப்பந்தி மெ.மி. த.க.பாடசாலை), சயிந்தவி சந்திரகுமார் (யா/சென்பெனடிக்ற் றோ.க.வித்தியாலயம்), சுவஸ்திகா தணிகாசலம் (யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை).

**பாவோதல்**

தேனுசா சிவபாலன் (யா/இந்து மகளிர் கல்லூரி), சாதனா சசிகுமார் (யா/கோண் டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயம்), பால சுப்பிரமணியம் பபித்திரா (யா/அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம்).

**வாசிப்பு**

கலைச்செல்வன் கீர்த்திகன் (யா/இந்துக் கல்லூரி), சதீஸ்குமார் சாளினி (யா/இளைய தம்பி இந்து வித்தியாலயம்), தயாபரன் பகிர் சன் (யா/கனகரத்தினம் ம.ம.வி).

**பேச்சு**

உதயகுமார் சபிதன் (யா/இந்துக் கல் லூரி), நிதுர்சிகா ஜெயந்திரன் (யா/கொக்கு வில் இந்துக் கல்லூரி), இருவர் மூன்றாமிடம் ரவீந்திரன் அஜானி (யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்), சத்தியபாலன் மேகவர்த் தனி (யா/செங்குந்தா இந்துக் கல்லூரி).

**தனி இசை**

பாலமுருகன் சாரங்கன் (யா/கொக்குவில் இந்துக்கல்லூரி), சிவானந்தம் ஜனகராஜ் (யா/ இந்துக் கல்லூரி), சந்திரசேகரம் கிரிதரன் (யா/ கனகரத்தினம் ம.ம.வி).

**தனி நடனம்**

நிவேதா பிரபாகரன் (யா/இந்து மகளிர் கல்லூரி), சதீஸ்குமார் டிலக்சனா (யா/கோண் டாவில் இந்து மகா வித்தியாலயம்), சர்வாணி சரவணபவசர்மா (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி).

**தனி இசை**

கலைச்செல்வன் வர்ஜான் (யா/கொக்கு வில் இந்துக்கல்லூரி), அருந்ததி சற்குணா னந்த சர்மா (யா/இந்து மகளிர் கல்லூரி), நித்தியசீலன் டிலக்ஸனா (யா/கனகரத்தினம் ம.ம.வி).

**பேச்சு**

உதயகுமார் விதுசன் (யா/இந்துக் கல்லூரி), வரதராஜன் கோபிநாத் (யா/இளையதம்பி இந்து வித்தியாலயம்), ரமேஸ் ஜனனி (யா/ கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்)

**பாவோதல்**

உதயகுமார் லுஸ்மினியா (யா/அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம்), பத்திராசா பவதா ரகன் (யாழ். இந்துக் கல்லூரி), ஹரிஸ் யந்தி சற்குணானந்தசர்மா (யா/இந்து மகளிர் கல்லூரி),

**தனி நடனம்**

யுவலக்சா மோகனதாஸ் (யா/இந்து மக ளிர் கல்லூரி), தீபிகா செல்வராசா (யா/பெரிய புலம் மகா வித்தியாலயம்), சிவராசா நிஷாந் தன் (யாழ். இந்துக் கல்லூரி)

**பேச்சு**

புஸ்பகரனி ரவீந்திரன் (யா/கனகரத்தினம் ம.ம.வி.), தனபாலசிங்கம் வான்மதி (யா/ செங்குந்தா இந்துக்கல்லூரி), ரவீந்திரன் சாரங்கன் (யாழ். இந்துக் கல்லூரி)

**தனிநடனம்**

கஜேந்தினி பரமேஸ்வரன் (யா/கொக்கு வில் இந்துக் கல்லூரி), துவாரகா சரவண பவானந்த மூர்த்தி (யா/கனகரத்தினம் ம. ம.வி.), விந்துஜா மோகன் (யா/கனகரத்தினம் ம.ம.வி.)

**தனி இசை**

விஜியகுமார் வத்சாங்கிதசர்மா (யாழ். இந்துக் கல்லூரி), பரமேஸ்வரன் கௌரீசன் (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), பால சேகர் ஹரிபிரசாத் (யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்)

**பாவோதல்**

மனோகரன் கஜகிருஷ்ணா (யாழ். இந்துக் கல்லூரி), கம்சாயினி நல்லைநாதன் (யா/ இந்து மகளிர் கல்லூரி), டயானி தேவராசா (யா/கோண்டாவில் இந்து மகா வித்தியால யம்)

**இசை**

இராசரெத்தினம் நிரோஜன் (யா/கொக் குவில் இந்துக் கல்லூரி), வருணியா தில்லை நாதன் (யா/இந்து மகளிர் கல்லூரி)

**பாவோதல்**

விஸ்வகுமார் விஷ்ணுஜன் (யா/கொக்கு வில் இந்துக் கல்லூரி), ஜனனி ஐயாத்துரை (யா/இந்து மகளிர் கல்லூரி), உதயகுமார் ரசிந்தா (யா/கோண்டாவில் இந்து மகா வித்தி யாலயம்)

**பேச்சு**

தயானி மகேந்திரராசா (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), தனறோஜினி இராமலிங் கம் (யா/இந்து மகளிர் கல்லூரி)

**தனி நடனம்**

கம்சவாகினி மகிந்தன் (யா/இந்து மகளிர் கல்லூரி), லிசியா புலேந்திரராசா (யா/கொக் குவில் இந்துக் கல்லூரி), அபிலக்ஷனா மனோ கர் (யா/கோண்டாவில் இந்து மகா வித்தியா லயம்)

**நடனம் குழு 01**

யா/இந்து மகளிர் கல்லூரி, யா/கொக்கு வில் இந்துக் கல்லூரி, யா/பெரியபுலம் மெ.மி த.க. பாடசாலை

**நாட்டிய நாடகம்**

யா/இந்து மகளிர் கல்லூரி

**நாட்டார் பாடல்**

யா/இந்து மகளிர் கல்லூரி, யா/கோண்டா வில் இந்து மகா வித்தியாலயம், யா/அரி யாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம்

**மேடை நாடகம்**

யா/கொக்குவில் இந்துக் கல்லூரி, யா/ கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்

**வில்லுப்பாட்டு**

யாழ். இந்துக் கல்லூரி, யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், யா/செங்குந்தா இந்துக் கல்லூரி

**தமிழறிவு வினாவிடை**

யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம், யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், யா/ இளையதம்பி இந்து வித்தியாலயம்

**இசைக்குழு 01**

யா/இந்து மகளிர் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, யா/கொக்குவில் இந்துக் கல் லூரி

**இசைகுழு 02**

யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தி யாலயம், யா/இந்து மகளிர் கல்லூரி, யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியா லயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவியல் நகரில் பாற்பொருள் உற்பத்தி நிலையம் திறக்கப்பட்டது



(அறிவியல் நகர்)

கிளிநொச்சி அறிவியல் நகரில் பாற்பொருட்கள் உற்பத்தி நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன் தினம் செவ்வாய்க்கிழமை வடமாகாண விவசாய கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் இதனைத் திறந்து வைத் துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டக் கால்நடை உற்பத்தியாளர்கள் பாலைச் சேமிப்பதிலும் பாலைப்பதப்படுத்தி அதிலிருந்து யோகட், நெய், வெண்ணெய் மற்றும் கட்டிப்பால் போன்றவற்றைத்தயாரிப்பதிலும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

இவற்றைக் கருத்திற்கொண்டு ஐ.ஓ.எம்எனப்படும் இடம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு அவுஸ்திரேலிய அரசின் நிதியுதவியுடன் சகல வசதிகளுடனும் கூடியதாக இந்தப் பால் உற்பத்தி நிலையத்தை அமை த்துக் கொடுத்துள்ளது.

கரைச்சிப் பிரதேச கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ச.சந்திரசேகரத்தின் தலைமையில் நடைபெற்ற இக்கட்டடத்தின் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராக வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், சிறப்பு விருந் தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், கௌரவ விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை, மாகாண கால்நடை உற்பத்திச் சுகாதாரத்திணைக்களப் பணிப்பாளர் சி.வசிகரன், ஐ.ஓ.எம். நிறுவனத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகப் பொறுப்பதிகாரி வ.வரதாபரன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தார்கள். (6)




# சொத்து இழப்பீட்டுத் தொகையை விரைவில் தந்துதவுங்கள்

## பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நிரந்தரமாக வசித்து பின்னர் வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது சொத்துக்களை இழந்த பொதுமக்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கு அரசால் நிர்ணயிக்கப்பட்ட நட்டஈட்டுத் தொகையை கால தாமதமின்றி விரைவில் வழங்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது தமது அசையும், அசையாத சொத்துக்களை இழந்து இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் தங்கியிருந்த நிலையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்களிடம் அந்தந்த மாவட்ட அரச அதிபர்களின் நெறிப்படுத்தல் ஊடாக சொத்தழிவு விபரங்கள் பொது மக்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களிடம் இருந்து பெறப்பட்டது.

இவ் விபரங்கள் புனர்வாழ்வு மற்றும் மறுசீரமைப்பு அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இதில் விண்ணப்பித்த அதிகமானோருக்கு பல இலட்சம் ரூபா அழிவு ஏற்பட்ட நிலையிலும் இழப்பீட்டுத் தொகையாக ஒரு இலட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபா மட்டும் வழங்க சிபாரிசு செய்யப்படுவதாக புனர்வாழ்வு மற்றும் மறுசீரமைப்பு அமைச்சிடமிருந்து தபால் மூலம் விண்ணப்பதாரிகளுக்கு தகவல் அனுப்பப்பட்டுள்ளது.

ஆனால் தகவல் கிடைத்து பல மாதங்கள் கடந்த நிலையிலும் இது வரை குறிக்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை வழங்கப்படவில்லை.

தற்போது இந்தியன் வீட்டுத் திட்டத்தை பூரணமாக அமைக்க முடியாமல் இருக்கும் சூழ்நிலையில் குறித்த இவ் இழப்பீட்டுத் தொகையை வழங்கினால் தமக்குப் பெரும் உதவியாக இருக்கும் என அம் மக்கள் தெரிவிக்கின்றனர். (15)

# வவு.கன்னாட்டியில் 27 குடும்பங்கள் இடப்பெயர்வு

(குருமன்காடு)

வவுனியா கன்னாட்டி பிரதேசத்தில் கடும் காற்றுடன் கூடிய மழை பெய்தமையினால் 27 குடும்பங்களைச் சேர்ந்த 76 பேர் இடம் பெயர்ந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் வவுனியா அலுவலக அதிகாரிகள் தெரிவித்தனர.

நேற்று முன்தினம் மாலை பெய்த காற்றுடன் கூடிய மழையினால் இவர்கள் வீடுகளுக்குள் மழை நீர் புகுந்தமையினால் மக்கள் இடம்பெயர்ந்து பொது நோக்கு மண்டபமொன்றில் தங்கியுள்ளனர்.

அவ்விடத்தை உடனடி நலன்புரி நிலையமாக மாற்றி உணவுகள் வழங்கப்பட்டு வருவதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் வவுனியா அலுவலக அதிகாரிகள் தெரிவித்தனர். (250)

# வீதி சீரின்மையால் பேருந்து சேவை தடைப்படும் நிலை

(மல்லாவி)

மாந்தை கிழக்கு பிரதேச சபை பிரிவுக்குட்பட்ட வன்னி விளாங்குளம் ஆமோஸ் கடை சந்தியில் இருந்து கொல்லவிளாங்குளம் வரை செல்கின்ற 6 கிலோ மீற்றர் நீளமான வீதி பயணிக்கமுடியாதவாறு சேதமடைந்திருப்பதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதன் காரணமாக பேருந்து சேவையை இடைநிறுத்தவுள்ளோம் என பேருந்து உரிமையாளர்கள் துறைசார்ந்த அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக பேருந்து உரிமையாளர்கள் தெரிவித்துள்ளதாவது,

இப் பிரதான வீதியால் ஆயிரக்கணக்கான குடும்பங்களை சேர்ந்த பொது மக்கள் மற்றும் மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள் எனப் பலரும் பயணிக்கின்றனர்.

மக்கள் மீள்குடியேற்றப்பட்டும் இவ்வீதி இன்று வரை புனரமைக்கப்படவில்லை.

இவ்வீதியூடாக அரை மணித்தியாலத்துக்குள் பேருந்து சேவையை மேற்கொள்ள வேண்டிய பேருந்துகள் வீதி சீரின்மை காரணமாக ஒரு மணித்தியாலத்துக்கு மேலாக பயணித்து தமது சேவையை மேற்கொள்கின்றன.

எனவே இவ்வீதியைப் புனரமைத்துதருமாறு இப் பிரதேச பொது அமைப்புக்களும் பொது மக்களும் ஊர்தி உரிமையாளர்களும் வடக்கு மாகாண முதலமைச்சரிடமும் முல்லை மாவட்ட அரச அதிபரிடமும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-15)

# கிளிநொச்சி கல்வி வலய தமிழ்த்தின போட்டி முடிவுகள்

(நேற்றைய தொடர்ச்சி...)

(சிவநகர்)

கிளிநொச்சி கல்வி வலயத்தினரால் இவ் வாண்டு நடத்தப்பட்ட வலய மட்ட தமிழ்த்தினப் போட்டியில் வெற்றியீட்டியவர்களின் பெயர் விபரங்களை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர்க.முருகவேள் அறிவித்துள்ளார்.

இதன்படி முதல் மூன்றிடங்களைப் பெற்ற வர்களின் பெயர் விபரங்கள் வருமாறு,

**பேச்சு பிரிவு-3**

ம.டிலோஜனா (கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்), ஆ.இசைச்செல்வி (கிளி/ஜெயபுரம் ம.வி.), பு.காஷ்மீரா (கிளி/பிரமந்தனாறு ம.வி.)

**பிரிவு-4**

க.அபிஷிகா (கிளி/ முருகானந்தாக் கல்லூரி).ஜீ.லஜிக்கா (கிளி/பளை மத்திய கல்லூரி),சி.பவித்திரன (கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம)

**பிரிவு-5**

ம.ஒலிசியா (கிளி/பிரமந்தனாறு ம.வி),ந.ஜெயபானுஜன் (கிளி/பாரதி வித்தியாலயம்), ம.நேமிகா (கிளி/ பூநகரி மத்திய கல்லூரி)

**பாவோதல் பிரிவு-1**

ஜெ.மிதுர்சிகன் (கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி), சு.சோபிகா (கிளி/சோரன்பற்று கணேசா), சி.ரெக்சிகா (கிளி/தருமபுரம் இல.01)

**பிரிவு-2**

பா.கயூரி (கிளி/அக்கராயன் ம.வி), கு.சாயித்தியா (கிளி/சோரனபற்று கணேசா),உ.நினைச்சனா (கிளி/வினாசியோடை அ.த.க.பா.)

**பிரிவு-3**

பி.தமிழ்விழி(கிளி/சிவநகர் அ.த.க.பா.),ஆ.அன்ரன் டெனிசன் (கிளி/கிளாலி றோ.க.த.க.பா.), கி.ஐஸ்வர்யா (கிளி/கிராஞ்சி அ.த.க.பா.),

**பிரிவு-4**

ஶ்ரீ.நிருசா (கிளி/உருத்திரபுரம் ம.வி), பா.ஸிந்துஜா (கிளி/பூநகரி மத்திய கல்லூரி), ஜெ.ஜதுசா் (கிளி/பளை மத்திய கல்லூரி)

**பிரிவு-5**

ம.போசிகா (கிளி/அக்கராயன் ம.வி.),லோ.விவேசனா (கிளி/பளை மத்திய கல்லூரி) (254) *(தொடரும்)*

# வறட்சிக்கு ஏற்ற வகையில் தொழில்நுட்ப பயன்பாடு

## தொடர் கருத்தமர்வுக்கு ஏற்பாடு

வடமாகாணத்தில் தற்போது ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றம் காரணமாக வெப்பநிலையானது தொடர்ச்சியாக அதிகரித்து செல்கிறது.

இதனையடுத்து குடிநீர் தட்டுப்பாடு நிலவும் நில்லயில் விவசாயத் தேவைக்கு போதுமான நீரைப்பெற முடியாத நிலை காணப்படுகிறது. இந்நிலையில் விவசாயிகள் சிறு போகத்தில் வெற்றிகரமான பயிர்ச் செய்கையை மேற்கொள்வதில் மிகப் பெரிய சவாலை எதிர்கொள்கின்றனர்.

வறட்சியான நிலைமைகளின் கீழ் கடைப்பிடிக்க் வேண்டிய பொருத்தமான தொழில்நுட்பங்கள் சம்பந்தமாக விவசாயிகளுக்கு பயிற்சி வழங்குவதற்கும் விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகளின் மற்றைய பங்காளர்கள் இவ்வாறான சூழ்நிலையில் எவ்வாறு செயற்பட்டு விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பங்களிப்பினை செய்ய முடியும் என்பதற்கான அறிவூட்டல்களை வழங்குவதற்கும் மாகாணத்தில் அமைந்துள்ள 5 மாவட்ட விவசாய பயிற்சி நிலையங்களிலும் சகல விவசாய போதனாசிரியர் பிரிவுகளிலும் இவ்விடயம் தொடர்பான வேலைப்பட்டறைகள், கருத்தரங்குகள், பயிற்சிவகுப்புக்கள் என்பவற்றை தொடர்ச்சியாக நடத் துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக வடமாகாண விவசாயப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் இவ் அறிவூட்டல் செயற்பாடு நடைபெறவுள்ளது.

இதற்கமைய நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 6,8,9,13 ஆம் திகதிகளில் முறையே யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலுள்ள மாவட்ட விவசாய பயிற்சி நிலையங்களில் நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக வடமாகாண விவசாயப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மேலும் யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்களில் நடைபெறும் ஆரம்ப நிகழ்வுகளில் வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் பிரதம விருந்தினரா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (2)

# முல்லை.மாவட்டத்தில் பெண்கள் பாடசாலைகளை அமையுங்கள்

## கல்வியமைச்சர்களுக்கு மகஜர் அனுப்பி வைப்பு

(மல்லாவி)

முல்லை.மாவட்டத்தில் உள்ள இரு கல்வி வலயங்களிலும் கல்வி பயில்கின்ற மாணவிகளுக்கான தனியான பெண்கள் பாடசாலை ஒன்றையும் அவர்களுக்கான விடுதி வசதியையும் ஏற்படுத்தி தருமாறு மாணவிகளினது பெற்றோரும் சமூக ஆர்வலர்களும இணைந்து கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவுக்கும் மற்றும் வடமாகாண சபையின் கல்வி அமைச்சர் குருகுலராஜாவிற்கும் கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடக்கு மாகாணத்தில் உள்ள கிளிநொச்சி, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய நான்கு மாவட்டங்களிலும் மாணவிகளுக்கான தனியான பாடசாலைகளும் விடுதி வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட நிலையில் முல்லை. மாவட்டத்தில் மட்டும் இதுவரை மாணவிகளுக்கான பாடசாலைகளோ விடுதி வசதிகளோ ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

ஆண், பெண் மாணவர்கள் கல்வி பயில்கின்ற கலவன் பாடசாலைகளிலேயே அவர்கள் கல்வி பயில்கின்றனர்.

முல்லை.மாவட்டத்தில் உள்ள துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள 60 பாடசாலைகளில் 4 ஆயிரத்து 232 மாணவர்களும் முல்லை. கல்வி வலயத்தில் உள்ள 59 பாடசாலைகளில் 8 ஆயிரத்து 100 இற்கு மேற்பட்ட மாணவிகளுமாக மொத்தம் 12 ஆயிரத்து 332 மாணவிகள் கல்வி பயில்கின்ற நிலையில் இவர்களுக்கான தனியான பாடசாலை இல்லாது இருப்பதால் பல்வேறு சிரமங்களை மாணவிகளும் அவர்களது பெற்றோர்களும எதிர் நோக்குகின்றனர்.

இங்குள்ள மக்கள் யுத்தத்தினால் இடம்பெயர்ந்து மீள்குடியேற்றம் செய்யப்பட்ட நிலையில் இவர்களில் பல ஆயிரக்கணக்கானோருக்கு வீட்டு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.


இதனால் மாணவிகளது கல்வி நிலையிலும் பாதுகாப்பு சிக்கல்கள் காணப்படுகின்றன.

அத்தோடு யுத்தத்தின் போது தாய், தந்தையரை இழந்த மாணவிகள் விடுதிகளில் தங்கியிருந்து கல்வியை மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை காணப்படுகிறது

எனவே, இவ்வாறு பல்வேறு இடர்பாடுகள் காணப்படுகின்ற நிலையில் ஒவ்வொரு கல்வி வலயததிலும் தலா ஒவ்வொரு பெண்கள் பாடசாலையையும் அவர்களுக்கான விடுதியையும அமைத்து தர வேண்டும் என அதில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இந்திய- சீன எல்லை விவகாரம்: 6 ஆவது சுற்றுப் பேச்சுவார்த்தை**



இந்திய சீன எல்லை விவகாரங்கள் தொடர்பான ஆலோசனை மற்றும் ஒருங்கிணைப்பு குறித்த 6 ஆவது சுற்று பேச்சு வார்த்தை ஏப்ரல் 28 முதல் 3 நாட்கள் சீன தலை நகர் பீஜிங்கில் நடந்தது.

இந்திய தூதுக்குழு, வெளிவிவகார பாதுகாப்பு மற்றும் உள்துறை இந்திய இராணுவ உறுப்பினர்கள் இந்திய திபெத்திய எல்லைப்புற பொலிஸார் உட்பட பலர் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தில் இரு தரப்பிலும் எல்லையில் அமைதி மற்றும் நிதானத்தைப் பேணிக் காக்கும் வழிமுறைகளைத் தொடர்ந்து மேம்படுத்துவது என ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

# பிலிப்பைன்ஸ் கடலில் அத்துமீறும் சீனாவுக்கு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா எச்சரிக்கை

(பிலிப்பைன்ஸ்)

**பிலிப்பைன்ஸ் நாட்டின் எல்லைகளில் அத்து மீறலில் ஈடுபட்டால், அதை அமெரிக்கா பார்த்துக் கொண்டு சும்மா இருக்காது. எல்லை விவகாரங்களுக்கு ஆயுதங்களை பயன்படுத்தக் கூடாது என, அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, சீனாவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.**


அண்டை நாடுகளில் ஒன்றான சீனா, நம் வடகிழக்கு மாநிலங்களில் ஒன்றான, அருணாச்சல பிரதேசத்தின் பெரும்பாலான பகுதிகளை, சொந்தம் கொண்டாடி வருகிறது.

அருணாச்சல பிரதேசம் மட்டுமின்றி, ஜம்மு காஷ்மீரின் பனி சூழ்ந்த மலைப் பகுதிகளில் சிலவற்றையும், சொந்தம் கொண்டாடும் சீனா, அந்த இடங்களுக்குள் நுழைந்து, அவ்வப்போது பிரச்சினையை ஏற்படுத்தி வருகிறது.


அதுபோலவே, அந்த நாடு, தன், பிற அண்டை நாடுகள் பலவற்றுடனும் மோதலில் ஈடுபட்டு வருகிறது. வட கொரியா, ரஷ்யா, மங்கோலியா, கசகஸ்தான், ஆப்கானிஸ்தான், நேபாளம், பூடான் போன்ற 14 நாடுகளுடன் நில எல்லைகளை கொண்டுள்ள சீனா, அந்த நாடுகளுடன் எல்லை பிரச்சினை செய்து வருகிறது.

அது போல், சீன கடல் தெற்கு பகுதியில், பிலிப்பைன்ஸ் நாட்டுடனும், கிழக்கு பகுதியில், ஜப்பானுடனும் மோதலில் ஈடுபட்டு உள்ளது. குறிப்பாக, பிலிப்பைன்ஸ் கடல் பகுதியில் உள்ள, எண்ணெய் மற்றும் கனிய வளம் மிக்க, பல தீவுகளையும், மணல் திட்டுகளையும், தனது என கூறும் சீனா, அந்த பகுதிகளில் தன் கொடியை நாட்டி, அவ்வப்போது முகாமிட்டு, உரிமை கொண்டாடி வருகிறது.

இராணுவ பலம் பொருந்திய சீனாவை, குட்டி நாடான பிலிப்பைன்சால் எதிர்க்க முடியாததால், அமெரிக்காவின் உதவியை பெற்றுள்ளது. இரு நாடுகளுக்கும் இடையே, 50 ஆண்டுகளுக்கும் மேலாக, இராணுவ ஒத்துழைப்பு ஒப்பந்தங்கள் அமுலில் உள்ளன. இந்நிலையில், ஆசிய நாடுகளுக்கு நான்கு நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்ட



அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, கடைசி நாள் பயணமாக நேற்று முன்தினம், பிலிப்பைன்ஸ் சென்றார். அந்த நாட்டு ஜனாதிபதியுடன், இராணுவ ஒப்பந்தம் மேற்கொண்ட அவர், அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அமெரிக்க வீரர்களை சந்தித்து பேசினார். பின் அவர், பிலிப்பைன்ஸ் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளை சந்தித்து பேசினார்.



மூன்று நாட்கள் அரசு பயணமாக ஓமன் சென்ற ஸ்பெயின் மன்னர் ஜுவன் கார்லோஸ், மஸ்கட் சென்றடைந்தார். அங்குள்ள அல் ஆலம் மாளிகையில், ஓமன் சுல்தான் ஹபூஸ் பின் சேட்(வலது) உரையாடுவதனை படத்தில் காணலாம்.

# ஈராக்கில் குண்டு வெடிப்பு; 24 பேர் உயிரிழப்பு!

(பக்தாத்)

அமெரிக்கப் படைகளின் வெளியேற்றத்துக்குப் பிறகு ஈராக்கில் கடந்த ஓராண்டு காலமாக வன்முறை தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன. நேற்று பாராளுமன்ற தேர்தலை முன்னிட்டு, சமீப காலமாக தாக்குதல்களும், அதன் விளைவாக உயிரிழப்புகளும் உச்சகட்டத்தை எட்டியுள்ளன.

சுமார் 2 கோடி மக்கள் வாக்களிக்க உள்ள இந்த தேர்தலுக்கான பாதுகாப்பு பணியில் பெரும் அளவிலான இராணுவ வீரர்களும், பாதுகாப்பு படையினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இருப்பினும், நேற்று முன்தினம் நிகழ்ந்த தாக்குதல் சம்பவங்களில் மட்டும் 57 பேர் பலியாகி, இருநூறுக்கும் மேற்பட்டவர்கள் படுகாய மடைந்தனர்.

இந்நிலையில், ஈராக் தலைநகர் பக்தாத்தில் இருந்து சுமார் 140 கிலோமீற்றர் தொலைவில் உள்ள சாதியா நகரின் சந்தைப்பகுதியில் உள்ளூர் நேரப்படி காலை 10 மணியளவில் நடத்தப்பட்ட இரட்டை வெடிகுண்டு தாக்குதலில் 4 பெண்கள், 2 குழந்தைகள் உட்பட 17 பேர் பலியாகினர். நாற்பதுக்கும் மேற்பட்ட மக்கள் படுகாயமடைந்தனர்.

பாக்தாத்தின் மேற்கே உள்ள புறநகர் பகுதியான அபு கரிப்-பிலும் மார்க்கெட்டில் நடந்த வெடிகுண்டு தாக்குதலில் இருவர் பலியாகினர். 8 பேர் படுகாயமடைந்தனர். வடக்கு பக்தாத்தின் சபா அல்-பவுர் என்ற இடத்தில் உள்ள குடியிருப்பு பகுதியில் மோட்டார் குண்டு வெடித்ததில் இருவரும், கஸாலியா நகரின் குடியிருப்பு பகுதியில் மோட்டார் குண்டு வெடித்ததில் ஒருவரும் என மொத்தம் 24 பேர் தாக்குதலில் பலியாகியுள்ளனர்.

# லிபியாவில் தேர்தல் இடை நிறுத்தம்



(டிரிபோலி)

லிபியாவில் பிரதமராக இருந்த அப்துல்லா அல்தானி பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக பதவி விலகினார். அதை தொடர்ந்து அங்கு நேற்று முன்தினம் பிரதமர் பதவிக்கான தேர்தல் நடந்தது.

எனவே, அங்குள்ள பாராளுமன்ற கட்டடத்தில் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. எம்.பி.க்களும் அங்கு வந்து வாக்குகளை பதிவு செய்து கொண்டிருந்தனர்.

அப்போது திடீரென வந்த மர்ம நபர்கள் பாராளுமன்றத்துக்குள் [illegible] கைகளில் வைத்திருந்த துப்பாக்கியால் சரமாரியாக சுட்டனர். அதை தொடர்ந்து அங்கு பாதுகாப்புக்கு நின்ற பொலிசாரும் திருப்பி சுட்டனர்.

இதனால் இரு தரப்பினருக்கும் இடையே கடும் துப்பாக்கி சண்டை நடந்தது. இதனால் அங்கு பதற்றமும், பரபரப்பும் ஏற்பட்டது. அதை தொடர்ந்து எம்.பி.க்களும், ஊழியர்களும் உயிர் பிழைக்க ஓட்டம் பிடித்து பதுங்கி கொண்டனர்.

துப்பாக்கி சண்டையின் இறுதியில் பாராளுமன்றத்தை மர்ம நபர்கள் கைப்பற்றினர். அதை தொடர்ந்து பிரதமர் தேர்தல் பாதியிலேயே நிறுத்தப்பட்டது. எம்.பி.க்கள் அனைவரும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர்.

பிரதமர் தேர்தலில் 7 பேர் போட்டியிட்டனர். அவர்களில் தொழில் அதிபர் அகமது டிக் 67 வாக்குகள் பெற்று முதலிடத்திலும், பல்கலைக்கழக பேராசிரியர் ஓமர் அல் ஹஸ்சி 34 வாக்குகள் பெற்று 2 ஆவது இடத்திலும் உள்ளனர்.

பாராளுமன்றம் மர்ம நபர்களால் கைப்பற்றப்பட்டதை தொடர்ந்து பிரதமர் தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

# சிரியாவில் வன்முறை தாக்குதல்; அறுபது பேர் உயிரிழப்பு!



(டமாஸ்கஸ்)

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல்-ஆசாத் குடும்பத்தினர் கடந்த 40 ஆண்டுகளாக தொடர்ந்து ஆட்சி நடத்தி வருகின்றனர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், அவர் பதவி விலகி ஜனநாயக ஆட்சி மலரவும் பொதுமக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். தற்போது அது கலவரமாக மாறி 3 ஆவது ஆண்டில அடியெடுத்து வைத்துள்ளது.

போராட்டக்காரர்களில் சிலர் அண்டை நாடுகளில் இருந்து போரா[illegible] இதனால் அப்பாவி பொதுமக்கள் ஏராளமானோர் உயிரிழந்துள்ளனர். அதை ஜனாதிபதி ஆசாத் பொருட்படுத்தவில்லை. தொடர்ந்து இராணுவத்தை ஏவி பொது மக்களை கொன்று குவித்து வருகிறார்.

பல இலட்சம் மக்கள் சிரியாவை விட்டு வெளியேறி அண்டை நாடுகளான துருக்கி, லெபனானில் தஞ்சம் அடைந்து அங்கு அமைக்கப்பட்டுள்ள அகதிகள் முகாம்களில் தங்கியுள்ளனர். சிரியாவில் நடந்து வரும் உள்நாட்டு போரை முடிவுக்கு கொண்டு வர ஐ.நா. சபை கடும் முயற்சி மேற்கொண்டது.

இராணுவம் நடத்தி வரும் வான் வழி, ஏவுகணை மற்றும் குண்டு வீச்சு தாக்குதல்களில் பெண்கள், குழந்தைகள் உட்பட ஆயிரக்கணக்கானோர் பலியாகியுள்ளனர். உயிர் பிழைத்த பலர் உடல் உறுப்புகள் சிதைந்து ஊனமுற்றவர்களாக அண்டை நாடுகளில் தஞ்சம் அடைந்து வருகின்றனர்.

இதன் விளைவாக, போராளி குழுக்களுடன் சிரியா அரசு ஜெனீவாவில் நடத்திய 2 சுற்று சமாதானப் பேச்சுவார்த்தை எவ்வித முன்னேற்றமும் இன்றி தோல்வியில் முடிவடைந்தது.

அடுத்த மாதம் ஜனாதிபதி தேர்தலை எதிர்நோக்கியுள்ள சிரியாவில் தேர்தலை சீர்குலைக்கும் நோக்கில் போராளிகள் ஆங்காங்கே அதிரடி தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் ஒரே நாளில் போராளிகள் நடத்திய தாக்குதல்களில் 60 இக்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். தலைநகர் டமாஸ்கஸ்சில் மோட்டார் குண்டுகளை வீசி பேராளிகள் நடத்திய தாக்குதலில் 17 பேர் பலியாகினர்.

சிரியாவின் மூன்றாவது பெரிய நகரமான ஹோம்ஸ் பகுதியில் ஒரு கார் குண்டு வெடித்தது. அதனைத் தொடர்ந்து ரொக்கெட் தாக்குதலும் நடத்தப்பட்டது. இவ்விரு தாக்குதல்களிலும் 45 இக்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் பலியாகினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவட்டத்தில் சுவடி நின்று சுவிப் பிதற்றல் அன்றி
நாட்டத்தில் கொள்ளாரடி –கிளியே
நாளில் மறப்பாரடி – *பாரதியார்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# தொழிலாளர் தினத்திற்கு புதிய அர்த்தம் கொடுங்கள்

இன்று மே தினம். மே மாதம் முதலாந் திகதி உலக முழுவதும் தொழிலாளர் தினமாக அனுஷ்டிக்கப்படுகின்றது.

ஒரு காலத்தில் அடிமைத்தனமாக்கப்பட்டிருந்த தொழிலாளர்களுக்கு விடுதலையும் விடிவும் கிடைத்த நாளாக மே தினம் அடையாளப்படுத்தப்படுகின்றது.

எட்டு மணித்தியாலம் என்ற வேலை நேர வரையறை இந்த உலகில் பேரெழுச்சியை ஏற்படுத்திய மிக உன்னதமான தீர்மானம் என்பதையும் இந்த இடத்தில் நாம் சிந்திப்பது பொருத்துடையது.

முதலாளித்துவ வர்க்கத்தின் ஆதிக்க விலங்கை உடைத்து எட்டு மணித்தியால வேலை, வேலைக் கேற்ற ஊதியம் என்ற நியாயங்கள் பிறந்த நாளாக மே தினம் கொண்டாடப்படுவதை நாம் அறிந்திருந்தாலும்,

எதையும் தத்தெடுக்கும் அரசியல்வாதிகள் மே தினத்தையும் தத்தெடுத்து தங்களின் அரசியல் பிரசாரத்திற்குரிய நாளாக மே தினத்தை ஆக்கி விட்டனர் என்ற செய்தியையும் இவ்விடத்தில் சொல்லாமல் விட்டால் நமக்குப் பத்தியப்படமாட்டாது.

அதேநேரம், எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னதான தொழிலாளர் சார் அடிமைத்தனங்கள் பற்றி இப்போதும் மேடை ஏறி முழங்குவது மடமைத்தனம்.

இப்போதெல்லாம் தொழிலாளர்களின் ஊதியத்தின் அளவு கணிசமானது என்பதுடன் வேலைக்காக தொழிலாளர்களைப் பெற்றுக் கொள்வது முடியாத காரியம் என்றும் நிலைமை ஆகிவிட்டது.

எனவே, மே தின நாளில் பழைய பல்லவியை பழைய இராகத்தில் பாடுகின்ற கச்சேரியை நிறுத்துவது அவசியமாகும்.

மாறாக தொழிலாளர் தினமாகிய மே தினத்தில் தொழிலாளர்கள் தாங்கள் உழைக்கின்ற ஊதியத்தை எங்ஙனம் செலவிடுகின்றனர்? அவர்கள் நாளாந்தம் உழைக்கின்ற சம்பளத்தில் எவ்வளவு வீதத்தை மது போதைக்கு கொடுத்து அழிக்கின்றனர்.

அவர்களிடம் தங்களின் குடும்ப முன்னேற்றம் சார்ந்த எண்ணங்கள், திட்டமிடல்கள் இருக்கின்றனவா? தங்கள் பிள்ளைகளைப் படிப்பிக்க வேண்டும் என்று நினைக்கின்றனரா? என்பது குறித்து ஆராய்வது முக்கியமானதாகும்.

உண்மையில் எங்கள் தொழிலாளர் வர்க்கம் கடுமையாக உழைத்து நல்ல ஊதியத்தைப் பெறுகின்ற போதிலும் அவர்களின் வாழ்க்கை நிலை, வீட்டமைப்பு, பிள்ளைகளின் கல்வி நிலை, போசாக்கு மட்டம் என்பன மிகவும் பாதகமானதாகவே இருக்கின்றன.

அதிலும் குறிப்பாக தொழிலாளர் வர்க்கத்தில் பெண்களின் ஆரோக்கியம், அவர்களின் மன நிலை என்பன பாதிப்புக்குள்ளாகியிருப்பதையும் அறிய முடியும். இதற்கெல்லாம் காரணம் முதலாளித்துவ வர்க்கம் அல்ல.

மாறாக தொழிலாளர் வர்க்கத்திடம் இருக்கக் கூடிய அறியாமை, மதுப் பழக்கம், குடும்பத்தில் தகராறு செய்கின்ற மனப்போக்கு என்பனவாகும்.

எனவே, மிகப் பழைய காலத்தில் இருந்திருக்கக் கூடிய அடிமைத்தனங்களை இப்போதும் பேசிப்பேசி தொழிலாளர் வர்க்கத்தை உசுப்பேத்தாமல், தொழிலாளர் வர்க்கத்தின் வாழ்வியலில் எழுச்சியை ஏற்படுத்துவதற்கான நன்நாளாக மே தினத்தை மாற்றியமைக்க வேண்டும்.

தொழிலாளர் வர்க்கத்தின் குடும்ப வருமானம் திருப்தியாக இருந்தாலும் சேமிப்பு என்ற பழக்கத்திற்கு அவர்கள் இன்னமும் உட்படாமல் இருப்பதும், உழைத்ததில் பெரும்பகுதியை சாராயக் கடைகளுக்குக் கொட்டி விட்டு, தங்களையும் அழித்து தம் குடும்பத்தையும் அழிக்கின்ற மோசமான செயலையும் நிறுத்துவதற்கான கோஷங்களை எழுப்பி மே தினத்திற்கு புதிய அர்த்தம் கொடுக்க வாருங்கள். அதுவே மே தினத்தை அர்த்தபுஷ்டியுடையதாக்கும்.

# குறையாத செல்வம் தரும் தங்கத்திருநாள் அட்சய திருதிகை

சித்திரை மாதத்துப் பூர்வபக்ஷ திருதிகைத் தினத்தை அட்சய திருதிகை எனச் சிறப்பாகப் பொன்வாங்கும் ஒரு நன்நாளாக மக்கள் கொண்டாடுகின்றார்கள்.

அட்சய என்பது எப்போதும் குறையாதது. அள்ள அள்ளக் குறையாத சிறப்புடையது அட்சய பாத்திரம் எனப்படும்.

திருப்பாற்கடலைத் தேவர்களும் அசுரர்களும் கடைந்த பொழுது அதிலிருந்து காமதேனுவும் கற்பக விருட்சமும் அட்சய திருதியைத் திதியன்று தோன்றியதாகவும் மேலும் விஷ்ணுவின் அவதாரமான பரசுராமர் பிறந்ததாகவும் திரோதாயுகம் தொடங்கியதாகவும் புனித நதியான கங்கை சொர்க்கத்திலிருந்து பூமிக்கு வந்ததாகவும் அட்சய திருதியைத் திருநாள் சிறப்பிக்கப்படுகின்றது.

பல்வேறுசிறப்புக்களும்கொண்டஇந்த நாளிலேதான் தேவலோகத்தில் நடைபெற்றருத்திர கல்யாண பெருவிழாவிலே முப்பத்து முக்கோடி தேவர்களுக்கும் விருந்து பரிமாறுவதற்காக அள்ள அள்ளக் குறையாத அட்சய பாத்தி ரத்தை அரியும் சிவனும் சேர்ந்து படைத்து அரிசிவ சொரூபமாக இல்லை யென்னாது எல்லோருக்கும் விருந்தளித்து மகிழ்வுற்ற தினமாகப் பெருமை யாக அட்சய திருதிகை எனப் போற்றப்படுகின்றது.

தேவலோகத்திற் தெய்வீக சக்தி பெற்று அள்ள அள்ளக்குறையாத அட்சய பாத்திரம் விளங்கியது போல் பூவுலகிலும் அட்சய திருதிகை நாளிலே மக்கள் குறைவற்ற செல்வத்தை பெற்று சிறப்புடன் வாழ இந்நன்னாள் பக்திபூர்வமான நம்பிக்கைக்குரிய நாளாகக் கொண்டாடப்படுகிறது.

அட்சய திருதிகை நன்நாளைப் பொன்னில் மயங்கிக் கிடக்கும் மண்ணுலகினர் பொன் வாங்கும் நாளாகவே கொண்டாடுகின்றனர். ஒரு குண்டுமணி பொன்னாவது இந்நாளில் வாங்கினால் அது பெரு நிறைவு தரும் என்பதை எண்ணி நகைக் கடைகளில் முண்டியடித்து ஒரு குண்டுமணி பொன்னாவது வாங்க வேண்டும் இந்நாளிலே எனச் செயற்படுகின்றனர்.

அட்சய திருதிகை பொன்வாங்கும் நாள் எனும் மக்கள் மனநிலை மாறி நல்லன செய்யும் நாள். நாம் செய்யும் நல்ல காரியங்களே நம்மை நல்லபடி மனநிறைவுடன் வாழவைக்கும் என்ற மன உறுதியுடன் இந்த நாளிலே இவ்வுலக வாழ்விற்கு அத்தியாவசியமான நல்ல பணிகளை ஆரம்பிக்கவும் அப்படி



யான பணிகள் ஆரம்பிப்போரை ஊக்குவித்து உயர்விக்கவும் பழகிக்கொண்டால் அதுவே தர்மம் தலைகாக்கும், அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை என்ற வழியில் அள்ள அள்ளக் குறையாத அட்சய பாத்திரம் போல் நம் வாழ்வில் குறைவற்ற நிறைவைத் தரும் எனலாம்.

எனவே இன்றைய அட்சய திருதிகை நன்னாளிலே நாம் செய்யும் நல்ல காரியங்கள் நமக்கும் பிறருக்கும் நன்மை தருவதாகவும் குறைவற்ற நிறைவான அருட்செல்வத்தை தந்து அருளுடன் கூடிய பொருளையும் நாம் பெற்று நல் வாழ்வு வாழ வழிகாட்டுவதாக அமையப் பிரார்த்திப்போமாக.

நீர்வைமணி

# பட்டப்படிப்பு பரீட்சை வினாத்தாள்கள் திருத்தப் பணியை மேற்கொள்ளோம்

## யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் மே மாதம் இடம்பெறவுள்ள வெளிவாரி பட்டப்படிப்பிற்கான பரீட்சை வினாத்தாள்களை திருத்தும் பணியினை மேற்கொள்வதில்லையென தீர்மானம் எடுத்துள்ளதாக யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் தலைவர் அமிர்தலிங்கம் இராசகுமாரன் தெரிவித்தார்.

வெளிவாரி பட்டப்படிப்புக்கள் பரீட்சையின் வினாத்தாள்கள் திருத்தும் பணி உள்வாரியாகவும் வெளிவாரியாகவும் நடைபெற்று வருகின்றன.

அதனடிப்படையில், உள்வாரி ஆசிரியர்களுக்கு ஒரு வினாத்தாள்கள் திருத்துவதற்கு 80 ரூபா முதல் 100 ரூபா வரையான கொடுப்பனவும், வெளிவாரி ஆசிரியர்களுக்கு 30 ரூபா கொடுப்பனவும் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் வெளிவாரி ஆசிரியர்களின் கொடுப்பனவினை அதிகரித்துத் தரும்படி கடந்த 2 வருடங்களாக வெளிவாரி பட்டப்படிப்புக்கள் அலகிடம் கோரிக்கை விடுக்கப்பட்ட போதும், அந்தக் கோரிக்கையினை நிறைவேற்றவில்லை என்றும் அவர் கூறினார்.

மேலும், இம்மாதம் முதலாம் வாரத்திலும், கொடுப்பனவை உயர்த்தி தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்ட அறிக்கை, வெளிவாரி பட்டப்படிப்புக்கள் அலகிடம் மீண்டும் கையளிக்கப்பட்டன.

கையளிக்கப்பட்ட அறிக்கைக்கான பதில் கிடைக்காவிடின் மே மாதம் நடைபெறவுள்ள வெளிவாரி பட்டப்படிப்புக்கள் பரீட்சையின் வினாத்தாள்கள் திருத்தும் பணியில் வெளிவாரி ஆசிரியர்கள் கலந்து கொள்ளாமல் புறக்கணிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் தலைவர் மேலும் கூறினார்.

இதேவேளை இனி வருங்காலங்களில் வெளிவாரி பட்டப்படிப்பிற்கான பரீட்சை வினாத்தாள்களினையும் தயாரிக்கப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்தார். (2-4)

# மீளாய்வுக் கூட்டம் பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த மீளாய்வுக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார் அறிவித்துள்ளார்.

இக் கூட்டம் நடைபெறும் திகதி குறித்து பின்னர் அறிவிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-11)

# சத்திய தரிசனம்




• கோபமுடைய எந்த மனிதனும் எப்போதும் அவன் முயற்சிகளில் வெற்றி பெறமாட்டான். அவன் பாவங்கள் செய்வான். மற்றவர்களால் தூற்றப்படுவான்.

கோபம் ஒருவனது எதிரி– அமைதி தான் காக்கும் கேடயம்– இரக்கம் என்பது உண்மையான உறவினன்.– மகிழ்ச்சி என்பது சுவர்க்கமின்றி வேறில்லை– துன்பம் என்பது நரகம்.

வெறுப்பு என்பது கோபத்தைவிட மிக அபாயகரமானது. அது எத்தனையோ தீய குணங்களை தன்னுடன் கொண்டு வருவதால் தெய்வீகத்தை அனுபவிக்கும் வாய்ப்பு நமக்கு இல்லாமல் போய்விடும்.

# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்



## எது செய்யலாம், எதைச் செய்யக்கூடாது

✦ மற்றவரிடம் பேசும் போது பொருட்குற்றம் வராதபடி ஆராய்ந்து யோசித்துப் பேச வேண்டும்.

✦ பிறரை நம் சொல்லாலும் செயலாலும் கொடுமைப்படுத்துவது மிகக் கொடியது. அப்படிச் செய்தால் ஒரு காலத்தில் நமக்கும் வரும்.

✦ உள்ளத்தில் நாம் உண்மையாக நடந்து கொண்டால் வாழ்வில் வெற்றியே வரும். தோல்வி வராது.

✦ வீட்டில் உள்ள குழந்தைகள், வியாதியஸ்தர்கள், வயதானவர்கள், கர்ப்பமடைந்த பெண்கள் ஆகிய இவர்களுக்கு முதன்முதலிற் சாப்பாடு போடவேண்டும். அவர்களைப் பசிக்கவிடக்கூடாது.

✦ அட்டமி, சஷ்டி, சதுர்த்தசி, அமாவாசை ஆகிய திகதிகளில் எண்ணெய் தேய்த்து முழுகக்கூடாது. மாமிசம் புசிக்கக்கூடாது. முகச்சவரம், தலைமுடி வெட்டிக்கொள்ளுதல் கூடாது.


✦ எதையாவது நினைத்துக்கொண்டே சாப்பிடக்கூடாது. சாப்பிடும் பொழுது சாப்பாட்டை சுவைத்துச் சாப்பிட வேண்டும்.

✦ மயானப் புகை மேலே படும்படி செல்லக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதுமலை சின்மய பாரதி வி.கழக கிரிக்கெட்; பொற்பதி இந்து விளையாட்டுக் கழகம் சம்பியன்





சுதுமலை சின்மயபாரதி விளையாட்டுக் கழகம் நடத்திய கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பொற்பதி இந்து விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

16 அணிகள் பங்குபற்றிய அணிக்கு 7 பேர் 8 ஓவர் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இறுதிப் போட்டியில் பொற்பதி இந்து விளையாட்டுக் கழகமும் கொக்குவில் ஆர்.பி விளையாட்டுக் கழகமும் மோதியது.

நாணயற்சுழற்சியில் வென்ற பொற்பதி இந்து விளையாட்டுக் கழகம் ருக்ஸ்மனின் பொறுப்பான ஆட்டம் கைகொடுக்க 7.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 60 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் ருக்ஸ்மன் 20, சிந்துஜன் 10 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஆர்.பி விளையாட்டுக் கழகம் சார்பில் லிங்கம் 2 ஓவர்கள் வீசி 12 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், தனலக்ஷன் 1.4 ஓவர்கள் வீசி 19 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், பிரதாப் மற்றும் பார்த்தி தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 61 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் துடுப்பாட்டத்தை ஆரம்பித்த ஆர்.பி விளையாட்டுக் கழக அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியளித்தது.

பொற்பதி இந்து விளையாட்டுக் கழகம் யாதவனின் முதல் பந்திலேயே ஆர்.பி. விளையாட்டுக் கழகத்தின் சாம்பவன் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து ஓட்டங்களைப் பெற தடுமாறிய ஆர்.பி. விளையாட்டுக் கழகம் 21 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. அணி சார்பில் பார்த்தி 8 ஓட்டங் களையும் பவன் 3 ஓட்டங்களையும்பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் யாதவன் 2 ஓவர்கள் வீசி 16 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், சத்தியன் 2 ஓவர்கள் வீசி 5 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், சுபாஷ் ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினார்.

இதன்மூலம் இப்போட்டியில் பொற்பதி இந்து விளையாட்டுக் கழகம் சுதுமலை சின்மயபாரதி விளையாட்டுக் கழகம் நடத்திய கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் சம்பியனாகியது.

போட்டியின் சிறப்பாட்டக்காரனாக பொற்பதி இந்து விளையாட்டுக் கழகத்தின் யாதவனும், போட்டித்தொடரின் நாயகனாக ஆர்.பி. விளையாட்டுக் கழகத்தின் பார்த்தீபனும் தெரிவானார்கள்.

அத்துடன் தொடரில் அரைச் சதங்களைப் பெற்ற யூனியன் விளையாட்டுக் கழகத்தின் நிக்ஷன், தெற்கு அம்பாள் விளையாட்டுக் கழகத்தின் அசி ஆகியோரும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வின் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபனும், இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் க.உஷாந்தனும் கலந்து கொண்டு வெற்றிக் கிண்ணங்களையும் பரிசில்களையும் வழங்கி வைத்தனர். (க-23)

## பருத்தித்துறை பிரதேச இளைஞர் கழக
# பெண்களுக்கான வலைப்பந்தாட்டம்; நக்கீரன் இளைஞர் கழகம் சம்பியன்



பருத்தித்துறை பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான பெண்களுக்கான வலைப் பந்தாட்டப் போட்டியில் நக்கீரன் இளைஞர் கழகம் சம்பியனாகியது.

இடம்பெற்ற இறுதியாட்டத்தில் நக்கீரன் இளைஞர் கழக அணியும் கழுகுகள் இளைஞர் கழக அணியும் மோதியது.


விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டியில் ஆரம்பம் முதலே இரு அணிகளும் எதிரணிகளின் பரப்பை ஆக்கிரமித்து புள்ளிகளை மாறி மாறிப் பெற்றன.

இதனால் முதற்பாதியாட்டம் 11:05 என்னும் புள்ளிகள் அடிப்படையில் நக்கீரன் இளைஞர் கழகம் முன்னிலையிலிருக்க நிறைவு பெற்றது.


இரண்டாவது பாதியில் நக்கீரன் இளைஞர் கழகம் மேலும் புள்ளிகளைப் பெற்று முன்னேறியது.

இரண்டாவது பாதியில் நக்கீரன் இளைஞர் கழகம் மேலும் 12 புள்ளிகளைப் பெற்ற போதும் கழுகுகள் இளைஞர் கழக அணியால் 7 புள்ளிகளையே பெற முடிந்தது.

இதனால் இப் போட்டியில் 23:12 என்னும் புள்ளிகள் கணக்கில் நக்கீரன் இளைஞர் கழக அணி வென்று பருத்தித்துறை பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான 2014 ஆம் ஆண்டிற்கான பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் சம்பியனாகியது. (க-23)




யாழ்ப்பாணம் பொன்னாலை வரதராஜப் பெருமாள் மான்பாய்ந்த தரவையில் எஸ்.எஸ்.சின்னையா நினைவாக தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுக்களில் ஒன்றான மாட்டுவண்டிச் சவாரி அண்மையில் சிறப்புற நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினர் பரிசில் வழங்குவதையும மூத்த சவாரிக்காரர் கௌரவிக்கப்ப டுவதையும் படங்களில் காணலாம்.



2014 ஆம் ஆண்டுக்கான இலங்கை தேசிய சோட்டோக்கான கராத்தே போட்டியில் கிளிநொச்சி சைவச் சிறுவன் இல்ல வீர, வீராங்கனைகள் தங்கம், வெள்ளி, வெண்கலம் என 15 பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளார்கள். வெற்றி பெற்ற மாணவர்களையும் பிரமுகர்களுடன் பிரதம பயிற்சி ஆசிரியர் சென்சேய் விஜயராஜையும் படத்தில் காணலாம்.

# கூடைப்பந்தாட்ட பயிற்றுநராக ரமணன் தரமுயர்வு

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்வராஜா ரமணன் இலங்கை கூடைப்பந்தாட்ட சம்மேளனத்தால் கூடைப்பந்தாட்ட பயிற்றுநர் தரம் 3 இற்கு உயர்த்தப்பட்டுள்ளார்.

இவர் மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்க தலைவராகவும், யாழ்.மாவட்ட மெய்வல்லுநர் சங்க தலைவராகவும் செயற்பட்டு வருகின்றார்.

இவரது இந்த தரமுயர்த்தப் பட்டதற்கான கடிதம் இலங்கை கூடைப்பந்தாட்ட சம்மேளனத்தால் கொழும்பில் வைத்து வழங்கப் பட்டுள்ளது.

இலங்கையில் கூடைப்பந்தாட்ட பயிற்றுநர் தரம் 3 இல் 29 பேரே உள்ளனர். அவர்களில் தமிழராகவும் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவராகவும் செல்வராஜா ரமணன் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



கடந்த 2011 ஆம் ஆண்டு வட மாகாண அணியின் பயிற்றுநராக கடமையாற்றி விளையாட்டு அமைசசினால் நடத்தப்பட்ட அகில இலங்கை கூடைப்பந்தாட்டப் போட்டியில் வடமாகாண பெண்கள் அணியை 36 வருடங்களின் பின்னர் தேசிய மட் டத்தில் வெற்றி பெற வைத்தது குறிப்பிடத்தக்கது. (க-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மே தின கூட்டத்...

தொழில் சங்க ஒன்றியம் கூட்டம் நடத்த அனுமதி தரப்படவில்லை என்று தெரிவித்த பொலிஸார், இந்த இடத்தில், இரண்டு கூட்டங்கள் நடத்தப்பட்டால் அதன் மூலம் மோதல்கள் ஏற்படும் வாய்ப்புகள் இருப்பதாகத் தெரிவித்தனர்.

பொலிஸாரின் வேண்டு கோளை ஏற்றுக்கொண்ட நீதிபதி இந்தத் தடை உத்தரவை பிறப்பித்தார்.

ஆயினும் பொலிஸார் கூறிய கருத்துகளை நிராகரித்த தொழிற்சங்க ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் இலங்கை ஆசிரியர்கள் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கடந்த ஏப்ரல்மாதம் 16-ம் திகதி நடைபெற்ற கூட்டமொன்றின் போது ஹைட் மைதானத்தில் மே தின கூட்டமொன்றை நடத்துவதற்கு பொலிஸார் தனக்கு அனுமதி வழங்கியதாக தெரிவித்தார்.

நீதிமன்றத்துக்கு பொலிஸார் பொய்யான தகவல்களை வழங்கி இந்த தடை உத்தரவைப் பெற்றிருப்பதாக, அவர் குற்றம்சாட்டினார்.

ஆயினும் தனது மே தினக் கூட்டம் இன்றைய தினம் கொழும்பில் நடத்தப்படுமென்று தெரிவித்த ஜோசப் ஸ்டாலின் நடத்தப்படவுள்ள இடம் இன்று அறிவிக்கப்படுமென்றும் கூறினார்.

இதன்படி ஹைட் மைதானம் உட்பட வேறு வீதிகளில் கூட்டங்களோ பேரணிகளோ நடத்துவதற்கு தொழிற சங்க ஒன்றியத்திற்கு நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

இந்த உத்தரவை மீறும் நபர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் எச்சரித்தார் நீதிபதி. (எ-11)

## கமலேந்திரனுக்கு மீண்டும்...

வர் டானியல் றெக்ஷியன் கொலையின் பிரதான குற்றவாளி எனும் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கந்தசாமி கமலேந்திரனின் வழக்கு விசாரணை நேற்று புதன்கிழமை ஊர்காவற்றுறை நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, இந்த வழக்குத்தொடர்பான புலன் விசாரணைகளினை தாம் முன்னெடுத்து வருவது தொடர்பான அறிக்கையினை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று நீதிமன்றில் சமர்ப்பித்தனர்.

அதன்போது, கந்தசாமி கமலேந்திரன் மற்றும் டானியல் றெக்ஷியன் மனைவி மற்றும் இளைஞர் ஆகியோரை எதிர்வரும் மே மாதம் 13 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

நெடுந்தீவு பிரதேச சபைத தலைவர்டானியல்றெக்ஷியன கடந்த 2013 நவம்பர் மாதம் 26 ஆம் திகதி புங்குடுதீவில் உள்ள அவரது வீட்டில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டு சடலமாக மீட்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)


அறை வாடகைக்கு உண்டு

படிக்கின்ற அல்லது உத்தியோகம் பார்க்கின்ற பெண்கள் இருவருக்கு யாழ். பல்கலைக் கழக சுற்றாடலில் அறை வாடகைக்கு உண்டு.

(6 மாதங்கள் மட்டும்)

தொடர்பு:-0777609922

## ஹைதராபாத் வெற்றி



ஹைதராபாத் - 172/5 (20 ஓவர்கள்)
மும்பை - 157/7 (20 ஓவர்கள்)
ஹைதராபாத் 15 ஓட்டங்களால் வெற்றி
ஆட்டநாயகன்-புவனேஸ்வ குமார்

## பாலியல் குற்ற...

வடக்கில் இடம்பெற்ற 119 பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் தொடர் பில் 125 பேருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவங்களில் 5 சம்பவங்களுடன் 7 இராணுவத்தினர் சம்பந்தப்பட்டுள்ளனர்.

அதேபோல் 2009-ம் ஆண்டு முதல் 2012-ம் ஆண்டு வரையான காலத்தில் 256 பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் நடந்துள்ளதுடன், சம்பவங்கள் தொடர்பில் 307 பேருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதில் 6 சம்பவங்களுடன் இராணுவத்தினர் சம்பந்தப்பட்டுள்ளதுடன், 10 பேருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளன.

2007-ம் ஆண்டு முதல் 2013-ம் ஆண்டு வரை வடக்கில் ஆயிரம் பெண்களுக்கு ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் பாலியல் வல்லுறவுச் சம்பவங்களுடன் தொடர்புடைய இராணுவத்தினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை வடக்கில் பாடசாலை கல்வி நடவடிக்கைகளில் இராணுவத்தினரால் தடையேற்படுத்தப்படுவதாக சில வெளிநாடு ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்திகளில் உண்மையில்லை எனவும் இராணுவப் பேச்சாளர மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

## கூட்டமைப்பின் கூட்ட...

தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை நகரசபை மண்டபத்தில் காலை 10 மணியளவில் ஆரம்பமான இந்த ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் தலைமையுரையினை கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், கிழக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.தண்டாயுதபாணி ஆகியோர் ஆற்றியிருந்தனர்.

இதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் தொடங்கியது முதல் கட்சி தலைமையின் அனுமதியின்றி அனந்தி ஜெனிவா சென்றமை மற்றும் அங்கு அவர் ஆற்றிய உரைகள் தொடர்பில் திரும்ப திரும்ப பேசியவாறிருந்தார். இந்நிலையில் அவரது குற்றச்சாட்டுக்களிற்கு மதிய உணவு வேளையில் அறிக்கை யொன்றினை தயார் செய்து கொண்ட அனந்தி தனது விளக்கத்தினை வாசிக்க முற்பட்டார்.

அவ்வேளையில் குறுக்கிட்ட சுமந்திரன் எம்பி, இது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எழுதி தந்தவற்றை இங்கு வாசிக்க வேண்டாமென தெரிவித்தார்.

அப்போது பதிலளித்த அனந்தி ஜெனிவா விவகாரம் உங்களிற்கு அரசியலாகலாம். எனக்கோ அதுவே வாழ்க்கைப் பிரச்சினை. காணாமல் போன எனது கணவர் உள்ளிட்ட ஆயிரக்கணக்கானோருக்கு தீர்வு கிடைக்குமென்ற நம்பிக்கையுடனேயே அங்கு போனேன் என கூறி, அழுதவாறு உரையினை நிறுத்தி அமர்ந்துவிட்டார். இவ்வளவும் நடந்து கொண்டிருந்த போது பெரும்பாலான கூட்டமைப்பு தலைமைகள் மௌனம் காத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-6)

## இன்று மே...

தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

இத் திருநாளில் வளம் பெருக்கும் தொழிலாளர் சமுதாய உடன்பிறப்புகளுக்கு எமது உளமார்ந்த மே தின நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

யாழ்.குடாநாட்டில் பல்வேறு இடங்களில் அரசியல் கட்சிகள் மே தினக் கூட்டங்களை மேற்கொள்ளவுள்ளது. (எ-11)

# உரிமைப் போராட்டத்துக்கு ஒற்றுமையை வலியுறுத்துவோம்

### சீ.வீ.கே. சிவஞானம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

மே நாளில் எமது உரிமைப் பேராட்டத்திற்கான ஒற்றுமையை மீண்டும் வலியுறுத்துவோம் என வட மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உலகெங்கிலும் வாழும் உழைக்கும் மக்கள் யாவரும் தத்தமது உரிமைகளை வென்றெடுக்கவும் நிலைநாட்டவும் கூட்டாக தீர்மானிக்கும் நாளாகவே ஒவ்வொரு வருடமும் மே முதல் நாளை உழைப்பாளர் தினமாக கைக்கொண்டு வருகின்றார்கள்.

முதலாளித்துவ நாடான அமெரிக்காவில் உருவாக்கப்பட்டாலும் உலகின் சமதர்ம நாடுகள் பலவற்றிலும் பின்பற்றப்படும் தொழிலாளர் தினமாக இத்தினம் திகழ்கிறது.

திறந்த உலகப் பொருளாதார அமைப்புக்காரணமாக தொழிற் சங்கங்களின் முக்கியத்துவம் சற்றுக்குறைவடைந்து காணப்பட்டாலும் உழைப்பாளர் தினத்தின் முக்கியத்துவம் குறைவடையவேயில்லை.

தமிழினத்தைப் பொறுத்தவரை எமது சனத்தொகையில் தொண்ணூற் றொன்பது வீதமான மக்கள் உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்தவர்களே. ஆகவே உழைக்கும் வர்க்கத்தினராகிய நாம் எம் மீது திணிக்கப்பட்டிருக்கும் பாரபட்சம், பாகுபாடு, அடக்குமுறை என்பவற்றிற்கு எதிராக குரல் கொடுக்க வேண்டிய கட்டாயத் தேவையிலுள்ளோம்.

எனவே இந்த மே தின நாளில் எமது உரிமைப் போராட்டத்திற்கான ஒற்றுமையை மீளவும் வலியுறுத்த ஒன்றுசேரும்படி எல்லோரையும் வேண்டுகிறோம் என்றுள்ளது. (எ-11)

## தமிழர் பிரச்சினை...

கூட்டம் மாலை 5 மணிவரை இடம்பெற்றது. இதன்பின்பு ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த அக்கட்சியின் தலைவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று (நேற்று) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களும் வடக்கு-கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த உறுப்பினர்களும், வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள் மற்றும் முதலமைச்சர் ஆகியோருடன் கிழக்கு மாகாண சபையின் எதிர்க் கட்சித் தலைவரும் இந்த ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் பங்கு கொண்டிருந்தனர். இதன்போது பல்வேறு விடயங்கள் தொடர்பாக நீண்ட நேரம் ஆராய்ந்திருந்தோம்.

ஜெனிவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத் தொடரில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக அமெரிக்காவினால் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம், அதனுடைய விளைவுகள் பற்றியும் தென்னாபிரிக்க நாட்டினால் முன்னெடுக்கப்பட்டு வரும் இலங்கையில் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் முயற்சிகள்,

இந்தியா உட்பட சர்வதேச சமூகத்தின் பங்களிப்பு, நாட்டில் தற்போது நடைபெறுகின்ற அரசியல் ரீதியான பல விடயங்கள், எதிர்காலத்தில் முன்னெடுக்க வேண்டிய விடயங்கள் குறித்து எமது கட்சி உறுப்பினர்கள் கருத்துக்களை முன்வைத்தனர்.

இறுதியில் இந்தப் பல கருமங்களைக் கையாள வடக்கு முதலமைச்சர் தலைமையிலான எட்டுப் பேர் கொண்டகுழு நியமிக்கப்பட்டுள்ளது.

இதில் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் மாவை சேனாதிராஜா, கூட்டமைப்பின் பேசசாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன், வடக்கு மாகாண சபையின் உறுப்பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், ரெலோ அமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், கிழக்கு மாகாண சபையின் எதிர்க் கட்சித்தலைவர் எஸ்.தண்டாயுதபாணி, பாராளுமன்ற உறுப்பினர் பொன் செல்வராஜா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் எட்டுப்பேரும் மேற்கூறப்பட்ட சகல கருமங்கள் தொடர்பாகவும் ஆராயவுள்ளதோடு ஒருமித்து முடிவுகளை எடுத்து அந்தக் கருமங்களை கையாள்வார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரும் பங்கு கொண்டிருந்தனர். (எ-6)

## பிரிவினையை ஏற்படு...

டும் விடுதலைப் புலிகளை உருவாக்குவதற்கு சமனாகும். பாதுகாப்பு விடயத்தில் அரசாங்கம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் எனவும் சுட்டிக்காட்டினார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு புதிய அரசியல் யாப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்ற வட மாகாண சபை தீர்மானம் தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு கருத்து தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அதிகாரப்பகிர்வு என்பது மீண்டுமொரு பிரிவினைவாதப் போராட்டமேயாகும்.

இலங்கையின் இனப்பிரச்சினையை தூண்டுவது சிங்களத் தரப்பினர் அல்ல, தமிழ் தேசியக் கூட்டமைப்பு மட்டுமேயாகும்.

இன்று அவர்கள் தீர்வுக்காக குரல் கொடுப்பதைப் பார்த்து தமிழ் மக்கள் ஏமாந்து வாக்களிக்கின்றனர்.

உண்மையாகவே வடக்கு, கிழக்கை இணைத்து சமஷ்டி அரசியல் யாப்பொன்று கொண்டு வரப்படுமாயின் இறுதியில் மீண்டுமொரு இனப்பிரச்சினைக்கு தூண்டுகோலாக அமையும்.

இனப்பிரச்சினையினை மீண்டும் ஏற்படுத்தும் வகையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சர்வதேச சக்திகளை ஒன்றிணைத்து முடிவுகளை மேற்கொள்கின்றனர்.

கூட்டமைப்பினரதும் வட மாகாண முதலமைச்சரினதும் பகற்கனவு ஒரு போதும் பலிக்கப் போவதில்லை. இவர்களின் எண்ணத்தை நிறைவேற்ற நாம் இடமளிக்கப் போவதுமில்லை.

அதேபோல் வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் பதவி ஆசையில் புலம்பிக் கொண்டிருக்கின்றார். முதலமைச்சருக்கான அதிகாரங்கள் போதவில்லை யென்றால் அவர் பதவி விலக வேண்டும்.

தற்போது புனர்வாழ்வு பெற்றுள்ள விடுதலைப்புலி இயக்க உறுப்பினர்களை கண்காணிக்காது வடக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்றினால் முன்னதை விடவும் மோசமான வகையில் தமிழ் தீவிரவாதம் உருவாக்கப்படும்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதானத்தை மீண்டும் குழப்பும் நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் இடமளிக்கக்கூடாது எனவும் அவர் தெரிவித்தார். (எ-11)

# உழைக்கும் மக்களுடன் உரிமைக்காகப் போராடுவோம்

### மே தினச் செய்தியில் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

உலகெங்கும் வாழும் உழைக்கும் மக்கள் தமது உரிமைகளுக்காகக் குரல் கொடுத்து எழுகின்ற மே தினத்தில் உழைக்கும் மக்களோடு இணைந்து தமிழ் பேசும் மக்களுக்கான அரசியல் இலக்கையும் வென்றிட உறுதி கொள்வோம் என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தனது மே தின செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவரது மே தின செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மே 1 ஓர் வீரிய தினம். அன்றைய சூழலில் உழைக்கும் மக்கள் ஒடுக்குமுறைகளை சுட்டெரிக்க எழுந்த சூரிய தினம்.

உலகத் தொழிலாளர்களே! ஒடுக்கப்படுகின்ற தேச மக்களே! ஒன்றுபடுங்கள் என்று அறைகூவல் விடுக்கப்பட்ட உன்னத தினம்.

இத்தினத்தில் உழைக்கும் மக்களோடு இணைந்து தமிழ் பேசும் மக்களின் அரசியலுரிமை சுதந்திரத்திற்காகவும் உழைப்பவர் உரிமைக்காகவும் நாம் உறுதியுடன் குரல் எழுப்பி நிற்கின்றோம்.

எமது நிலங்கள் எமக்கே சொந்தம்! நிலமிழந்தவர்கள் வீடிழந்தவர்கள் என்று யாரும் இங்கு இருக்க முடியாது.

மீள் குடியேறிய எமது மக்கள் வாழ்வாதார உரிமைகளை மேலும் பெறவேண்டும்.

வேலையற்ற இளைஞர் யுவதிகள் தொழில் வாய்ப்புக்களை பெற வேண்டும்.

இல்லாமை என்பது இல்லாமல் ஒழிந்து சகல மக்களும் சகல வாழ்வியல் உரிமைகளும் பெற்றிங்கு நிமிர்ந்து வாழ வேண்டும்.

உழைக்கும் மக்களின் உரிமைகள் எங்கும் வெல்லட்டும்!

தமிழ் பேசும் மக்களின் அரசியல் இலக்கு நோக்கிய பயணம் நடைமுறை யதார்த்த வழிநின்று வெற்றி வரை செல்லட்டும்!!

இவ்வாறு தனது மே தினச் செய்தியில் தெரிவித்திருக்கும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா உழைக்கும் மக்களுடன் இணைந்து அனைத்து தமிழ் பேசும் மக்களும் சரியான திசைவழி நோக்கி அணி திரண்டு வருவாறு அறைகூவல் விடுத்துள்ளார். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் பிரதேச வணிக உள்ளங்களே,
உழைக்கும் தொழிலாளருக்கு உரிய உயரிய வேதனம் வழங்க திடசங்கற்பம் கொள்வோம்

- ஐரோப்பிய நாடான சைப்பிரசில் (ஆண் / பெண் இருபாலரும் படிக்க 1 இலட்சம் உழைக்க வெறும் 5 இலட்சங்கள் போதும்.
- ஆஸ்திரேலியா 54 வயதிற்குட்பட்டவர்கள் குடும்பமாகப் பறக்கலாம்.
- டுபாயில் மேசன், தொழிலாளர் உடன் விரையலாம்.
- கனடா - IELTS வேண்டாமே. மலேசியா படிக்கும் உழைக்கும் விசாவில் செல்ல 5 இலட்சம்தான்.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090
(C-7235)


## வேகக்கட்டுப்பாட்டை...

தந்தையான பொன்னையா கௌரீசன் (வயது 47) ஆகிய இருவருமே உயிரிழந்தவராவர்.

தமது உறவினர்களை வெளிநாட்டுக்கு வழி அனுப்பி வைத்துவிட்டு வாகனத்தில் யாழ்ப்பாணம் திரும்பி வரும்போதே இவ்விபத்துச் இடம் பெற்றுள்ளது.

இதேவேளை, அதேகுடும்பத்தைச் சேர்ந்த கணேசமூர்த்தி ரமணன் (வயது 29) என்பவர்படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர்களை விட ஐவர்காயமடைந்தநிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் (எ-11,24)


MAYDAY!
வியர்வை துளிகளினால் தேசிய இனப் பொருளாதாரத்தில் இருப்பை உறுதிப்படுத்தும் உழைக்கும் வர்க்கம் "தொழிலாளிகள்" அவர்களுக்கு உரம் சேர்ப்போம் வழுப்படுத்துவோம்.

மிக குறைந்த விமான கட்டணங்கள்

| | | |
|---|---|---|
| கொழும்பு – மதுரை | –15800 | RTN |
| கொழும்பு – சென்னை | –19900 | RTN |
| கொழும்பு – திருச்சி | –22000 | RTN |
| கொழும்பு – பெங்களூர் | – 23300 | RTN |
| கொழும்பு – டோகா | –26000 | O/W |
| கொழும்பு – மாலைத்தீவு | –29900 | RTN |
| கொழும்பு – மலேசியா | –30000 | RTN |
| கொழும்பு – சிங்கப்பூர் | –30200 | RTN |
| கொழும்பு – பிரான்ஸ் | –53000 | O/W |
| கொழும்பு – லண்டன் | –53000 | O/W |
| கொழும்பு – சுவிஸ் | –87600 | RTN |
| கொழும்பு – கனடா | –105700 | O/W |

வீட்டில் இருந்தவாறே பெற்றுக்கொள்ளலாம்
யாழ் நகரில் நம்பிக்கையான பாதுகாப்பான 24 மணித்தியால சேவை வழங்குனர்
Nation Popular Travels & Tours
#128, Brown Road, Jaffna
128,பிறவுண் வீதி யாழ்ப்பாணம்
0114375357, 0773083820
0214 920 920
நீங்கள் பறந்து செல்ல நாங்கள் சிறகுகளாகின்றோம்
(C-7236)


## வடக்கிற்கான...

பாட்டறை தெரிவித்துள்ளது.

கொழும்பிலிருந்து வவுனியா, பளை, மட்டககளப்பு, திருகோணமலை ஆகிய பகுதிகளுக்கும் மற்றும் மேற்படி பகுதிகளிலிருந்து கொழும்புக்கான ரயில் சேவைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இந்த ரயில்சேவைகள் இன்ற இடம் பெறுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக ரயில்வே அத்தியட்சகர் எல்.ஏ.ஆர்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (எ-11)




குடும்ப மருத்துவ காப்புறுதித் திட்டம்
இங்கு காட்டப்பட்டிருக்கும் (Expo marketing) குடும்ப மருத்துவ காப்புறுதி அட்டை விநியோகித்தல் நிறுத்தப்பட்டுள்ளது. ஆதலால் எவரும் கொள்வனவு செய்ய வேண்டாமென கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். 24.04.2014 க்கு பின்பு கொள்வனவு செய்யப்படும் அட்டைகளுக்கு நொதன் சென்றல் வைத்தியசாலை பொறுப்பல்ல என்பதை அறியத் தருகின்றோம்
(C-7220)

திருமுருகன் கொம் நெற்
மிகக் குறைந்த கட்டணத்தில் 220ற்கும் மேற்பட்ட நாடுகளுக்கான
துரித தபால்கள், பொதிகள் சேவை
அன்பளிப்பு பொருட்கள், உணவுப் பண்டங்களை வீட்டில் இருந்தவாறே அனுப்ப முடியும்
3 -5 நாட்களில் உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்
* அனைத்து நாடுகளுக்குமான விமானப் பயணச்சீட்டு, அதற்கான ஆலோசனைகள்.
* கனடா, லண்டன், இந்தியாவுக்கான Online Visa விண்ணப்ப சேவை.
WESTERN UNION | MMBL Money Master
வெளிநாடுகளில் இருந்து மிக விரைவாக பணத்தினைப் பெற்றுக்கொள்ள
இல. 271 A. கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். [ஆஸ் சிலோனிந்த முன்பாக] தொ.பே: 021 222 7835
பிரதான கிளைகள் :
இல. 18,பிரதான வீதி நெல்லியடி.
இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
பிரதான வீதி, சங்கானை.
இல.30, கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
(C-7225)



31 ஆம் நினைவு நாள் அழைப்பு
02.05.2014 அன்று காலை 7.00 மணியளவில் நடைபெறும் 31ஆம் நாள் பிரார்த்தனையில் கலந்து கொண்டு தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் தங்களை அழைக்கின்றோம்.
அமரர் அந்தோனிப்பிள்ளை எமிலியாம்பிள்ளை
225, சிவபுரம், பரந்தன்.
இங்ஙனம் :
பே.அந்தோனிப்பிள்ளை குடும்பத்தினர்.
(C-7231)



MBA
MASTER OF BUSINESS ADMINISTRATION
GENERAL / MARKETING / FINANCE / IT
DURATION : 1 YEAR
TRUTH 1965 ALDERSGATE
ACCREDITED AND UGC APPROVED
New Batch Starts on 01/06/2014 at 10.00 am.
ADMISSION REQUIREMENTS
- A Bachelor Degree - must be from a recognized University or College.
- An Accepted Professional Qualification
- Professional Experience - minimum of 3 years of full time Professional work experience.

Week Day Batch
Mon, Wed, Fri: 6.30- 8.30 p.m
Week End Batch
Sun: 9.00a.m - 4.00p.m
IIS CITY CAMPUS
200,Sivan Pannai Road,Jaffna.
Tel: 021 222 8060
Web: www.iis.edu.lk
FOR MORE DETAILS
021 4 900 900
077 999 2484
(C-7227)

Digital
விசேட கட்டண சலுகைகள்
இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை
- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION MONEY TRANSFER
மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்
62/16 ஸ்ரான்லி வீதி (சம்பத்வங்கி முன்பாக) யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு - 021 753 8330, 0777 151 101
(C-7217)

அக்ஷய திருதியை நன்நாளில் தங்க நகைகளை வாங்கிட ராசியான தங்க மாளிகைக்கு வாரீர் வாரீர்
யாரேனும் சங்கானையில் நகை வாங்க வந்தால் பாரெங்கும் அவர்கள் நாவில் பேசப்படுவது
ஆசைப்பிள்ளை அன் சன் நகைமாடம்
வியாழக்கிழமை (01-05-2014) அன்று அக்ஷய திருதியை தினத்தை முன்னிட்டு விசேட கழிவுகளுடன் தங்க நகைகளை பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே ஒரு ஸ்தாபனம்
K.T. பிளாசா, பிரதான வீதி, சங்கானை. தொ.பே: 021 321 2399
குறிப்பு: தங்கநகை வாங்குபவர்களுக்கு அன்பளிப்பு பொருட்கள் வழங்கப்படும். தங்க நகை ஓடர் தருபவர்களுக்கு தங்க நாணயப் பரிசில்கள் வழங்கப்படும்.
(C-7208)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.05.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.